திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

மாணிக்கவாசகர்-ஓசூர்

மாலை 4] சுபகிருது ஆனி-ஜூலை 1962 [மணி 10

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் பாடல்

(※)

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று

நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே

ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

[இக்காலத்தே எனக்குத் திருவருள் புரிந்து அறியாமையை நீக்கி மனத்தின்கண்ணே உதிக்கின்ற கதிரவன்போலத் தோன்றிநின்ற உனது இயல்பை அறிந்தேன். உன்னையன்றி வேறொன்றும் இல்லையாகும்படி எல்லாவற்றிலும் கலந்து நுட்பமாய் எங்கும் ஒரு தன்மையாய் வியாபகமான ஒரு பொருளாகிய திருப்பெருந்துறைப் பெருமானே! காணப்படும் ஒரு பொருளும் நீயன்று, உன்னையல்லால் வேறு ஒரு பொருளும் தொழிற்படுவதில்லை. உன்னை யார் அறியவல்லவர்? ஒருவருமில்லை என்றவாறு].

பொருளடக்கம்

1. திருவாவடுதுறை
2. குத்தாலம்
3. செம்பொனார்கோயில்
4. திருஅழுந்தூர்
5. திருஎதிர்கொள்பாடிக் கல்வெட்டு
6. ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை
7. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
8. திருஞானசம்பந்தர் திருமுறை
9. சிவஞானபோதம்
10. திருநாவுக்கரசு நாயனார்
11. தேரழுந்தூர்



திருமூலர்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] சுபகிருது ஆனி - ஜூலை 1962 [மணி 10

திருவாவடுதுறை

(மாசிலாமணியீசர் கோயில்.)

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக்
கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடு துறை யரனே
—திருஞானசம்பந்தர்.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே
செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனேஊ னின் உள்ளமே
உள்ளத்தினுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே
மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே
—திருநாவுக்கரசர்.

வானநாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப்பொருளே
ஏன மாவெயி றாமையு மெலும்பும்
ஈடு தாங்கிய மார்புடையானே
தேனெய் பால்தயி ராட்டுகந் தானே
தேவ னேதிரு வாவடு துறையுள்
ஆனே யேயெனை யஞ்சலென் றருளா
யாரெ னெக்குற வமரர்களேறே
—சுந்தரர்.

இன்பம் தருவன்குயிலே ஏழுலகும் முதலாளி
அன்பன் அமுதளித்தூறும் ஆனந்தன் வான் வந்த
தேவன்
நன்பொன் மணிச்சுவடொத்த நற்பரிமேல்
வருவானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழிநாதனைக்
கூவாய்
—மாணிக்கவாசகர்.

திருவாவடுதுறையின் பெருமை அளவிடற்கரியது. பலவகையானும் சிறந்தபாடல் பெற்ற பழம்பதி. இது தஞ்சைமாவட்டத்தில் மாயூரம் பகுதியிலிருக்கிறது. மாயூரம் திருச்சிராப்பள்ளி இருப்புப்பாதையில் நரசிங்கன் பேட்டை நிலையத்திலிருந்து கிழக்கே ஒருகல் தொலைவிலுள்ளது. மாயூரம் கும்பகோணம் பஸ்கள் இவ்வூருக்குச் சிறிது வடக்கே செல்கின்றன. சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள தலங்களில் திருவாவடுதுறையும் ஒன்றாகும். திரு+ஆ+அடுதுறை=திருவாவடுதுறை. அம்பிகை கயிலையில் பசுச்சாபம் ஏற்று, இவ்விடத்தைச் சார்ந்து, அச்சாபம் நீங்கப்பெற்றமையால் இத்தலம் ‘திருவாவடுதுறை’ என்ற பெயர் பெறுவதாயிற்று. வடமொழியில் ‘கோமுக்தி க்ஷேத்திரம்’ என்று கூறுவர். இன்னும் நவகோடி சித்தபுரம், அநாதமுத்தி க்ஷேத்திரம், பிப்பிலாரண்யம், அரசவனம், அமுதபுரம் முதலிய பெயர்களும் இத்தலத்துக்குண்டு.



அணைந்தெழுந்த நாயகர்

ஊரின் நடுநாயகமாய் இறைவன் திருக்கோயில் விளங்குகிறது. கோயிலின் முன் பெரிய திருக்குளம் உள்ளது. கிழக்கு நோக்கிய கோயில் வாயிலைக் கோபுரம் அணிசெய்கிறது. கோயிலினுள்ளே நுழைந்ததும் பெரிய நந்தி காட்சியளிக்கிறது. தலவிருட்சமான படரரசும் உள்ளது. அரசமரம் தலவிருட்சமானதால் பிப்பிலாரண்யம் அல்லது அரசவனம் என்ற பெயர் ஏற்பட்டது. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமங்கள் மாசிலாமணியீசர், கோமுத்தீசுவரர் என்பன. தேவியாரின் திருப்பெயர் ஒப்பிலாமுலையம்மை. வடமொழியில் அதுல்யகுசாம்பிகை என்று கூறுவர். விநாயகரை அழகியவிநாயகர் உள்ளன.

கயிலையில் ஒருநாள் இறைவனுடன் உமாதேவியார் சொக்கட்டான் ஆடி வெற்றி பெற்றார். வெற்றிக்களிப்படைந்த அம்மையாரைக்கண்டு சினந்து சிவபெருமான் பசுவாகப் போகும்படி சபித்தார். திருவாவடுதுறையடைந்து இறைவனை வழிபட்டுப்பசுச்சாபம் நீங்கப்பெற்றார் அம்மையார். இங்கு தேவியாரை ஏற்றுக்கொண்டமையின் அணைந்தெழுந்தநாயகராய் விளங்குகிறார். "மாடேபோ" என்று இறைவன் கூறியது "பசுவாகப்போ" என்ற பொருளுடையதை, தலபுராண ஆசிரியர் "என்றும் நம் பக்கத்திலிரு" என்று பொருள்பட நயம்பட உரைப்பது கண்டு மகிழத்தக்கது. மாடு என்றால் பக்கம் என்று பொருள்.

திருமூலநாயனார் இத்தலத்தில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்திலிருந்து திருமந்திரமாலையை அருளிச் செய்தார். இவருடைய கோயில்உட்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில்இருக்கிறது. திருஞானசம்பந்தசுவாமிகள் தமது தந்தையார் யாகம் செய்யும் பொருட்டுத் திருப்பதிகம் பாடி ஆயிரம் பொற்காசுகளைப் பெற்று அளித்தார். முசுகுந்தச் சக்கரவர்த்தி இத்தலத்துப் பெருமானை மகப்பேறு வேண்டி வழிபட, தியாகேசர் திருவுருவில் காட்சியளித்து அவன் விருப்பத்தை நிறைவேற்றினார். ஆதலின் புத்திரத்தியாகர் எனப் பெயர் பெற்றார். இவர் ஆசனம் வீரசிங்காசனம்; நடனம் சுந்தரநடனம். இத்தலத்தில் இவருடைய சந்நிதி மிகவும் சிறப்புடையது. பெருமான் தம்மை வழிபட்ட தருமதேவதையை வாகனமாக ஏற்றுக்கொண்ட



சம்பந்தர் உலவாக்கிழி பெற்றுத் தந்தையார்க்களித்தல்

தோடு தம்முடைய சந்நிதியிலுள்ள அரசமர நிழலில் என்றும் இருக்கும்படி வரமளித்தார். சந்நிதியிலுள்ள பெரிய நந்தி இதையே குறிக்கிறது. மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவடிவத்திலே காட்சியளித்தது இத்தலத்தேதான் என்றும் கூறப்படுகிறது. இங்கு, திருமாளிகைத்தேவர் எழுந்தருளியிருந்து பல அற்புதங்கள் நிகழ்த்தியதாகச் சொல்லப்படுகிறது. இவருடைய கோயில் ஆதீன மடத்தில் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள் சந்நிதிக்குப் பக்கத்திலிருக்கிறது. இத்தலத்தில் நவகோடிசித்தர்கள் தவம் செய்தனர் என்றும், போகர் முதலிய சித்தர்கள் வழிபட்டு அட்டமாசித்திகளை அடைந்தனர் என்றும் புராணம் கூறுகிறது. தேவர்கள், முனிவர்கள் வேண்ட ஆண்டவன் தாண்டவம் புரிந்தான் என்றும் சொல்லப்படுகிறது. சபை-போதியம்பலம். தாண்டவம்-மகாதாண்டவம்.

இக்கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூசை நிகழ்கின்றது. மாதவிழா, நாள்விழா முதலியவற்றோடு தைமாதத்தில் இரத சப்தமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது. இரண்டாம் திருநாளில் திருமூலநாயனாரும் பஞ்சமூர்த்திகளுடன் திருவீதி வலம் வருகிறார். அவர் பசுமேய்த்த பணியின் நினைவாக அவர் சந்நிதியில் கோபூஜை நடைபெறுவது தனிச்சிறப்பாகும்.

இத்தலத்தைப் பற்றிய நூல்களை ஒருவாறு அறிந்து கொள்வது அவசியம். சமயகுரவர் நால்வரும் பாடப்பெற்ற மிகுந்த சிறப்புடையது. திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவன் பேரில் ஒரு பதிகம் ஓதியருளினார். தமது தந்தையார் யாகம் செய்வதற்காகப் பொருள் வேண்டித் திருப்பதிகம் பாடிப் பொன் பெற்று அளித்தார். "இதுவோ எமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல் அதுவோ உனதின்னருள் ஆவடுதுறையரனே" என்று ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசர் இப்பதியெம்பெருமானை ஐந்து பதிகங்களால் போற்றியருளுகிறார். ஒரு பாடலில் "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே" என்று திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்கிழியளித்ததைக்

கூறியிருக்கிறார். மற்றொருபதிகப்பாட லொன்று பின்வருமாறு:—

செறிவிலேன் சிந்தை யுள்ளே சிவனடி தெரிய
மாட்டேன்
குறியிலேன் குணமொன் றில்லேன் கூறுமா கூற
மாட்டேன்
நெறிபடு மதியொன்றில்லேன் நினையுமா நினைய
மாட்டேன்
அறிவிலே னயர்த்துப் போனே னாவடு துறையு
ளானே.

வேறொரு பதிகம், அகத்துறைப் பொருளில் தலைவியொருத்தி இறைவன் மையலில் வாடுவதாக அமைத்துப் பாடப்பெற்றது. மற்ற இரண்டு பதிகங்களும் திருத்தாண்டகச் செய்யுட்கள். "திருவே என் செல்வமே" என்று தொடங்கும் பாடலை அறியாத சைவர் எவருமிருக்க முடியாது. சுந்தரர் பாடிய பதிகங்கள் இரண்டு. மார்க்கண்டனுக்காகக் காலனை உதைத்தது, சிலந்தியைக் கோச்செங்கட் சோழனாக்கியது, திருமாலுக்குச் சக்கரமளித்தது, அர்ச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்தது, திரிபுரங்களையெரித்து அம்மூவருக்கும் அருள்புரிந்தது முதலியவற்றை ஒரு பதிகத்தில் பாடியருளுகினார். இறைவன் திருப்பெயரை 'மாசிலாமணியே' என்று மற்றொரு பதிகப்பாடலில் குறிக்கிறார். "கண்ணிலேன் உடம்பில் அடுநோயாற் கருத்தழிந்துனக்கே பொறையானேன்" என்று தான் கண்ணிழந்தமையையும் உடம்பில் நோயுற்றமையையும் குறிக்கிறார்.

மாணிக்கவாசகர், சிவபுராணத்தில் "கோகழியாண்ட குருமணி தன்தாள்வாழ்க" என்றும், குயிற்பத்தில் "கோகழி நாதனைக் கூவாய்" "கோகழி யுள்ளானை வருக நீ கூவாய்" என்றும், "பண்டாய" என்று தொடங்கும் வெண்பாவில் "என்றனையும் ஆளாக் கொண்டாளுகின்ற மிக்க கோகழியெம்கோமாற்கு" என்றும் கூறியிருப்பனவெல்லாம் இத்தலத்தையே குறிக்கும் என்று தலபுராண ஆசிரியர் கூறுகின்றார். கோ+கழி=பசு வுருவத்தைக் கழித்த இடம்-தேவி பசு வுருவம் நீங்கப்பெற்ற பதி என்று பொருள் கொள்ளவேண்டும் என்பது அவ்வாசிரியரின் கருத்து.

சேந்தனார், அருளிய திருவிசைப்பாவில் இத்தலத்தைப்பற்றி ஒரு பதிகம் பாடியருளியிருக்கிறார். அது ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கிறது. "அழிவொன் றிலாச் செல்வச் சாந்தையூர் அணி ஆவடுதுறை", "பொய்யாத வேதியர்......ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர்மிகு...ஆவடுதுறை", "மாதிமணங்கமழும் பொழில் மணி மாட மாளிகை வீதிசூழ் சோதிமதிலணி...... ஆவடுதுறை" என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

சேக்கிழார், பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணம், திருமூல நாயனார் புராணம் முதலியவற்றில் இத்தலச் சிறப்பைக் கூறியிருக்கிறார்.

அருணகிரிநாதர், இரண்டு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கின்றார். அவை "சொற்பிழை வராமல்", "சோதிமாமதிபோல் முகமும்" என்று தொடங்குவன. "மிக்க திருவாவடுநற்றுறைக்குட் செழித்த பெருமாளே" என்றும், "வாச மாமலராளொடு செந்திரு மார்பில் வீறிய மாயவனும் பணி மாசிலாமணி ஈசர் மகிழ்ந்தருள் பெருமாளே" என்றும் அப்பாடல்களின் இறுதியில் கூறியுள்ளார். வடமொழி ஸ்காந்தபுராணத்தில் உருத்திரசங்கிதையில் கோமுத்தி க்ஷேத்திர மாகாத்மியம் கூறப்பெற்றிருக்கிறது. திருவாவடுதுறை ஆதீனத்து அடியார் குழாத்துள் ஒருவரான சாத்திரம்—சாமிநாத முனிவர் என்பார் தமிழில் செய்யுள் வடிவில் "துறைசைப் புராணம்" என்ற பெயருடன் இயற்றியிருக்கின்றார். கோமுத்தி க்ஷேத்திரகாண்டம், ஆவடுதுறைசைக் காண்டம், தியாகேசபுரக் காண்டம் என்ற மூன்று காண்டங்களையுடையது; அறுபத்தெட்டு அத்தியாயங்களும், 2560 பாடல்களும் கொண்டது. ஐந்தெழுத்து திருவிழா, நால்வர் அருள்பெற்றது, சேரமான் பெருமாள், கோச்செங்கட் சோழன், வரகுணபாண்டியன் முதலியோர் வழிபட்டது, திருமூலர், திருமாளிகைத் தேவர் வரலாறுகள் முதலியவற்றை மிக விரிவாகவும் அழகாகவும் இந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய "யமக அந்தாதியும்", தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் அருளிய "திருவாவடுதுறைக் கோவையும்" இத்தலத்தைப்பற்றியன. அண்மையில் வெளிவந்த

ஆதீன வெளியீடான "அரசவனத்து அறநிலையம்" என்ற நூலிலும் இத்தலத்தைப்பற்றிப் பரக்கக் காணலாம்.



ஆவுருநாயகி

திருமூலர்:- நந்தியம் பெருமான் அருள் பெற்ற யோகியொருவர், பொதிகைமலை அகத்தியனுரைக் காணப்புறப்பட்டார், கேதாரம், பசுபதி நேபாளம், காசி, திருப்பருப்பதம், காளத்தி, ஆலங்காடு, ஏகம்பம், திருவதிகை, தில்லை முதலிய தலங்களை வழிபட்டுத் திருவாவடுதுறையை யடைந்தார். அங்கு இறைவனை வழிபட்டு மீளும்போது காவிரிக் கரையில் பசுக்கூட்டங்கள் கதறுவதைக் கண்டார். அந்தணர் வாழ்கின்ற சாத்தனூரில் மூலன் என்னும் இடையன் ஒருநாள் வழக்கம்போல் பசுக்களை மேய்க்க வந்தபோது நிலத்து வீழ்ந்து இறந்தான். அதைக் கண்ட யோகியார் பசுக்களின் துயர் நீக்க எண்ணி, தமது உடம்புக்குத் தகுந்த அரண் செய்துவிட்டு, பரகாயப் பிரவேசம் என்ற கூடுவிட்டுக்கூடு பாயும் சித்தியால் மூலன் உடம்பில் உயிரைப்பாய்த்தினர். திருமூலராய் எழலும் பசுக்கள் களிப்பெய்தின. திருமூலர் வீடு செல்லவில்லை. மூலன் மனைவியழைக்க அதற்கிசையாது ஒரு பொது மடத்தில் புகுந்து சிவயோகத்திலிருந்தார். பின்னர், திருமூலர் சென்று தன் உடலைப்பார்க்க அது காணப்படவில்லை. ஆகமப் பொருளை மண்ணின்மேல் தமது வாக்கினுல் தமிழில் செய்ய இறைவன் திருவுளங் கொண்டே தமதுடலை மறைப்பித்தார் என்று தெளிந்தார். திருவாவடுதுறை சென்று அரச மரத்தடியில் அமர்ந்து சிவயோகம் புரிந்து மூவாயிரம் ஆண்டு இப்புவியிலிருந்து ஆண்டுக்கொன்ருக திருமந்திரம் ஓதி, மீண்டும் திருக்கயிலை சென்றடைந்தார். இவர் இருந்த காலத்தை ஆராய்ச்சியாளர் பலவாருகக் கூறுகின்றனர். சுந்தரர், "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று கூறியிருப்பதால் திருமூலர் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டுக்கு முற்பட்டவர் என்று தெரிந்துகொள்ளலாம். நூலுக்கு, 'திருமந்திரமாலை' என்ற பெயர் உண்டென்பதைச் சேக்கிழார் கூறுகிருர். பன்னிரண்டு திருமுறைகளுள் இது பத்தாம் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. சைவசித்தாந்தச் செம்பொருள் களையும், யோகப்பயிற்சி நுட்பங்களையும் இந்நூல் கூறுகிறதென்று பொதுவாகக் கூறலாம். "தண்நிலவார் தாம்தந்த ஆகமப்பொருளை மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினுல் தமிழ் வகுப்ப" என்ற சேக்கிழார் வாக்கு ஈண்டு நோக்கத்தக்கது. திருமூல நாயனுர் புராணம் 28பாடல்களைக்கொண்டிருப்பதை 28ஆகமங்களைக் குறிப்பதுபோல்அமைந்துள்ளதென்று ஆன்ருேர் கூறுவர். இந்நூலில் மூவாயிரம் நீங்



இச்சாதீர்த்தம்

கலாக ஒன்பது தந்திரங்கள் உள்ளன; 232 அதிகாரங்களும், 3047 பாடல்களும் இருக்கின்றன. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்", "அன்பே சிவம்" என்பன போன்ற பல இந்நூலில் திகழ்கின்றன. விரிக்கில் பெருகும் என அஞ்சி விடுக்கின்றனம்.

திருமாளிகைத்தேவர்:—போகநாதர் என்ற சித்தருடைய மாணுக்கர் திருமாளிகைத் தேவர், திருவாவடுதுறையில் உறைந்தார். காவிரியில் நீராடித் திருமஞ்சனம்கொண்டு திரும்பும்போது, எதிரே பிணம்வர, சிவ பூசைக்கு இழுக்காகுமென எண்ணி விநாயகரைத் துதித்தார். பிணம் உயிர்த்தெழுந்தது; பிணப்பறையும் அகன்றது. அவ்விநாயகருக்குக் "கொட்டு தவிர்த்த விநாயகர்" என்று இன்றும் பெயர் வழங்கி வருகிறது. கோயில் மதில்மேலிருந்த நந்திகளை உயிர்ப்பித்து ஏவினுர் என்றும் இன்னும் பல அற்புதங்கள் நிகழ்த்தினுர் என்றும் புராணம் கூறுகிறது. இவர் அற்புதச் செயல்களைத் தொகுத்து,

குடங்கர்விசும் பிடைநிறுவிக் குணபம்நடந்
திட இயக்கிக் கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி ஓட்டிமதில் நந்திகளை
வரவழைத்து வரைநன் காட்டின்
உடம்பினெழு புகைமாற்றிக் கொங்கணர்பாத்
திரம்சுவற்றி உணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்தெமக் கருள்திருமா
ளிகைத்தேவர் இணைத்தாள் போற்றி

என்ற பாடலில் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பாடியிருக்கிருர். திருமாளிகைத் தேவர் காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியெனத் தெரிகிறது. ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் முதல் நான்கு பதிகங்களை இவர் பாடியுள்ளார். அவை சிதம்பரத்தைப்பற்றியவை. அவைகளில் சிலவற்றை நாள்தோறும் ஓதுவாமூர்த்திகள் கோயிலில் பாடுவதை நாம் காண்கிறோம். இவருடைய திருக்கோயில் ஆதீன மடத்தில் ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகள் சந்நிதிக்கு இடது பக்கத்தில் இருக்கிறது.

இவ்வாதீனத்தில் கல்வி கற்று, பெருநூல்கள் இயற்றிய பெரும் புலவர்களும்

துறவிகளும் எண்ணிலர். அவர்கள் சைவத் திற்கும் தமிழுக்கும் செய்த தொண்டுகள் அளவிடற்கரியன.

திருவாவடுதுறை ஆதீனம்:—திருவாவடு துறையின் மற்றொரு தனிச்சிறப்பு இங்கு தமிழ் நாட்டுச் சைவப் பெருமடங்களில் ஒன்றாகிய திருவாவடுதுறை ஆதீனம் இங்கு திகழ்வதே. இம்மடத்தை ஆதியில் தோற்றுவித்தவர் ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகள். பஞ்சாக்கர தேசிகர் என்றும் கூறுவர். இதுவரை இருபது மகாசந்நிதானங்கள் அருளாட்சி செய்திருக்கின்றனர். இப்போது இருபத்தொன்றாவது மகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ளவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். ஸ்ரீ நமசிவாய மூர்த்தி அச்சகமும், நல்ல நூல் நிலையமும் இங்கு இருக்கின்றன. இதுவரை 167 சைவ சமய சாத்திர தோத்திர நூல்களைக் கண்கவர்வனப்புடையதாக அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இவ்வாதீனத்தின் ஆட்சியில் திருவாவடுதுறை, திருவிடைமருதூர், மாயூரம், ஆவுடையார் கோயில், திருவீழிமிழலை, திருநல்லூர், திருநீலக்குடி முதலிய கோயில்கள் இருந்து வருகின்றன. பல திருப்பணிகளையும், அறக்கட்டளைகளையும் செய்து வருகின்றன.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. 'திருக்கோயில்' 1962 மேமாத இதழில் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள் அவற்றைப்பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அவை சோழ, பாண்டிய மன்னர் காலத்தவை. இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டிய கற்றளிப் பிச்சர், மண்டபங்கள் முதலியவற்றைக் கட்டியவர்கள், இவ்வூரிலிருந்த மடங்கள், அறச்சாலைகள் நானாவித நடனசாலை, திருவிழாக்கள், இறைவனின் திருப்பெயர்கள், மருத்துவசாலை, மருத்துவம் இலக்கணம் கற்பார்க்கு உணவளித்தது, செப்புத் திருமேனிகளும் பிரதிமங்களும் செய்தமைத்தது, பரிகலன்கள் திருவாபரணங்கள் அளித்தது, திருமூலர்பற்றிய நாடகநூல், திருமாளிகைத்தேவர் பற்றிய குறிப்பு, கோயிலுக்கு நிலந்தவங்கள் அளித்தது முதலியன் பற்றி அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

ஸ்ரீரங்கநாதசுவாமி வகையரு தேவஸ்தானம்

ஸ்ரீரங்கம்

ஜூன் திங்கள் 'திருக்கோயில்' இதழில் 448-ம் பக்கம் பூஜாநேரங்கள் சேவா காலங்கள் பற்றிய அறிவிப்பில் சேவாகால அறிவிப்பில் முதல் இரண்டு காலநேரங்களைப் பின்வருமாறு வாசிக்கவும்.

(1) காலை 6-30 முதல் 7-00 விஸ்வரூபம்
(2) காலை 10-00 முதல் 11-30

பழனி: தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், மலைக்கோயில் படிக்கட்டில் சென்னை, கல்கி ஸ்ரீ சதாசிவம் அவர்களின் உபயமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 'கல்கி மண்டபம்' என்ற சிங்கார மண்டபத்தை மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் 28—6—62-ல் திறந்துவைத்தார்கள்.

மாதர்வேலூர்: மாதலீசுவரர்கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

இராமேசுவரம்: இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா 24—7—62 முதல் 10—8—62 வரை நடைபெறும்.

இறைபணியாளர் மாற்றங்கள்

இறைபணியாளர்கள் :		இறைபணியாளர் மாற்றப்பட்டுள்ள கோயிலின் பெயர்
திரு. டி. எம். ஆறுமுகம்	...	நாகப்பட்டினம்—ஸ்ரீ காயாரோகணசாமி நீலாய தாட்சியம்மன் கோயில்.
திரு. எம். கோபால்	...	தான்தோன்றிமலை — ஸ்ரீ கல்யாணவெங்கடரமண சுவாமி கோயில் கரூர்—ஸ்ரீ அபயப்பிரதான ரங்கநாதர் கோயில்
திரு. ஏ. விநாயகமூர்த்தி	...	திருச்சி—ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில், ஸ்ரீ பைரவ நாதர் கோயில் வாணபட்டரை—ஸ்ரீமாரியம்மன் கோயில்
திரு. டி. புருஷோத்தமன்	...	அந்தநல்லூர்-ஸ்ரீ வடதீர்த்தநாதர், திருச்செந்துறை—ஸ்ரீ சந்திரசேகரசுவாமி கோயில், புலிவலம்—ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில்
திரு. என். முத்துகுமாரசுவாமி	...	சாட்டியக்குடி—ஸ்ரீ வேதபுரீசுவரர் கோயில்
திரு. டி. நாகராஜன்	...	வேதாரண்யம்—ஸ்ரீ வேதாரண்யீசுவரர் கோயில்
திரு. எம். கிருஷ்ணசாமி	...	திருத்தங்கூர்—ஸ்ரீ இரஜதகிரீசுவரர் கோயில் திருக்கொள்ளிக்காடு—ஸ்ரீ அக்னீசுவரர் கோயில்
திரு. எச். வைத்தியநாதன்	...	நாகப்பட்டினம் — ஸ்ரீ நவனீதகிருஷ்ணசாமி கோயில், ஸ்ரீ சட்டநாதர் கோயில் வேளிப் பாளையம், ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில்
திரு. எஸ். வெங்கடாசலம்	...	பட்டீசுவரம்—ஸ்ரீ தேனுபுரீசுவரர் கோயில்—ஸ்ரீ கோதண்டராமர் கோயில், உடையலூர் கைலாசநாதர் கோயில்
திரு. சி. மாணிக்க முதலியார்	...	மூவலூர்—ஸ்ரீ மார்க்கசகாய சுவாமி கோயில், சித்தர்காடு ஸ்ரீ சம்பந்தர் கோயில் — ஸ்ரீ ஆலந் துறையப்பர் கோயில்
திரு. என். இராஜமாணிக்கம்	...	திருநெல்லிக்காவல் — ஸ்ரீ நெல்லிவனநாதசாமி கோயில், திருநாட்டியத்தான்குடி — ஸ்ரீ இரத்தினபுரீசுவரர் கோயில்

சென்னை—மயிலாப்பூர் மாதவப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 21-6-62 முதல் 1—7—62 வரை நடைபெற்றது. கோபுரம் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்று டை கோயிலில் மகா சம்புரோட்சணம் 21—6—62ல் நடைபெற்றது. அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் விழாவை ஆரம்பித்துவைத்தார்கள்.

கும்பகோணம்—நாகேசுவரசுவாமி கோயிலில் துர்க்காம்பிகைக்கு தங்கக்கவசம், மகா மண்டபத்திறப்பு, இலட்சார்ச்சனை பூர்த்தி 21, 22—6—62 தேதிகளில் நடைபெற்றன.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை—ஆதிபுரீசுவரர் கோயிலில் 1956-ஆம் ஆண்டு முதல் திரு. நடேசனார் அவர்களால் நடைபெற்றுவரும் திருவிளையாடற்புராண விரிவுரையின் பூர்த்திவிழா 8—7—62ல் நடைபெறும்.

சென்னை-புரசை :—கங்காதரேசுவரர் வகையரு தேவஸ்தானத்தைச் சேர்ந்த பாதாள பொன்னியம்மன் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

ஆறுமுகப்பெருமான்
குத்தாலம் உத்தவேதீசுவரர் கோயில்



குத்தாலம் ஓங்காளீசுவரர் கோயில்
காளீ இலிங்கத்திற்குப் பூசைசெய்தல்

குத்தாலம்

(உக்தவேதேசுவரர் கோயில்)

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் [மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழக்குகின்ற தென்னையே

—திருஞானசம்பந்தர்.

பொருந்திய குரம்பைதன்னைப்
பொருளெனக் கருதவேண்டா
இருத்தியெப் பொழுதும் நெஞ்சு
ளிறைவனை யேத்துமின்கள்
ஒருத்தியைப் பாகம்வைத்தங்
கொருத்தியைச் சடையுள்வைத்த
துருத்தியஞ் சுடரினானைத்
தொண்டனேன் கண்டவாறே

—திருநாவுக்கரசர்.

மின்னுமா மேகங்கள்
பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந்
திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி
அகன்கரை யுறைவார்
அடியிணை தொழுதெழு
மன்பரா மடியார்
சொன்னவா றறிவார்
துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச்
செடியனே னாயேன்
என்னைநான் மறக்குமா
றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி
யிடர்கெடுத் தானை

—சுந்தரர்.

ஒரு ஆறு இரண்டாகப் பிரிந்து மறுபடியும் கூடுவதால் நடுவில் ஏற்படும் மணல் திட்டை ஆற்றிடைக்குறை என்பர். இதையே துருத்தி என்ற பழந்தமிழ்ச்சொல் குறிக்கும். அரங்கம் என்றும் கூறப்படும். மைசூர் நாட்டில் ஸ்ரீரங்கப்பட்டினமும், சோழநாட்டில் திருவரங்கமும் காவிரியாற்றின் நடுவே அமைந்த அத்தகைய வைணவத் திருப்பதிகள். "கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டு" என்ற ஆழ்வார் திருவாக்கும் ஈண்டு நோக்குக. திருப்பூந்துருத்தி, திருத்துருத்தி என்ற இரண்டு சிவத்தலங்களும் ஆற்றிடைக் குறையிலேயே இருந்திருக்க வேண்டும். ஆனால் அவை இப்போது காவிரி ஆற்றின் கரைமேல் விளங்குகின்றன. காலப்போக்கில் ஆற்றின் ஒரு பிரிவு மறைந்துபோயிருக்க வேண்டும். திருத்துருத்தி என்னும் பாடல் பெற்ற தலம் இப்போது குத்தாலம் (குற்றாலம்) என்று வழங்குகிறது. இது தஞ்சைமாவட்டத்தில் மாயூரம் பகுதியிலிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலம் வேறு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் இத்தலத்துக்கெழுந்தருளி இறைவனைப் பாடும்போது திருக்கோயில் காவிரியாற்று இடைக்குறையில் இருந்ததென்று தெரிகிறது. "பொன்னியின் நடுவு தன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியான்" என்று காவிரியாற்றின் நடுவே இருந்ததை விளக்கமாகக் குறிக்கிறார். ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டினரான சுந்தரர் இத்தலத்துக்கெழுந்தருளியபோது "அன்னமாம் காவிரி அகன் கரை உறைவார்" என்று பாடுகிறார். அப்போதே ஆற்றின் ஒரு பிரிவு மறைந்துவிட்டதுபோலும். ஆதலினாற்றான் காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலமாக திருத்துருத்தி கணக்கிடப்பெற்றிருக்கிறது.

குத்தாலம் என்று வழங்கும் திருத்துருத்தித் தலம் குத்தாலம் என்ற பெயருடைய இருப்புப்பாதை நிலையத்திலிருந்து முக்கால் கல் தொலைவிலிருக்கிறது. மாயூரம், கும்பகோணம் முதலிய இடங்களிலிருந்து நிறைய பஸ்கள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன. எல்லா வசதிகளையுமுடைய ஊர். இத்தலவிருட்சம் உத்தாலம் என்ற ஒருவகை ஆத்திமரம். உத்தாலம் என்ற பெயர் குத்தாலம் என மருவி ஊருக்கும் பெயராக அமைந்துவிட்டது. கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலும் திருமுறைகளிலும் திருத்துருத்தியென்ற பெயரே காணப்படுகிறது.

திருக்கோயில் மேற்கு நோக்கியிருக்கிறது. ஐந்து நிலை மாடக்கோபுரம் மேற்கு வாயிலை அணி செய்கிறது. அம்பிகை சந்நிதிக்கு நேரே தெற்கில் ஒரு வாயிலும், வடமேற்கு மூலையில் ஒரு வாயிலும் உள்ளன. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. சுவாமி, அம்பிகை சந்நிதிகளுக்குத் தனித்தனி பிரகாரங்கள் இருக்கின்றன. கோபுர வாயிலைக் கடந்து உட்சென்றதும் தென்புறம் துணைவந்த விநாயகர் சந்நிதி இருக்கிறது. கயிலையினின்றும் உமாதேவியாரை மணந்து கொள்ள இத்தலத்துக்கு சிவபெருமான் எழுந்தருளியபோது துணையாக வந்ததால்

இப்பெயர் பெற்றார். இறைவன் சந்நிதிக் கெதிரில் தலவிருட்சமான உத்தாலமரம் இருக்கிறது. அதன் அடியில் இரண்டுபாதங் கள் காணப்படுகின்றன. உமையம்மையார் வேண்டுகோளின்படி அவரைத் திருமணம் செய்துகொள்ள மணவாளநாதராக எழுந்தரு ளினார். இப்போது பாதுகை வடிவம் மாத் திரமே காணப்படுகிறது. இதற்கெதிரில் நறுஞ்சாந்திளமுலை யம்மையார் திருவுருவம் இருக்கிறது. மூலஸ்தானத்தில் எழுந்தருளிய சிவலிங்கமூர்த்தியின் திருப்பெயர்கள் சொன் னவாறறிவார், உக்தவேதீசுவரர் என்பன. இறை வன் சந்நிதிக்கெதிரில் வெளிப் பிரகாரத்தில் தேவியின் திருச்சந்நிதி தெற்கு நோக்கியிருக் கிறது. அமிர்தமுகிளாம்பிகை, அரும்பன்னவன முலையம்மை என்பன அம்பாளின் திருநாமங் கள். சிவபெருமான் தேவியிடம் விதி முறைப்படி மணந்துகொள்வதாகச் சொல்லி இத்தலத்தில் அவ்வாறே செய்துகொண்டார். தாமே விதித்ததைத் தாமே அறிந்துகொண் டமையின் சொன்னவாறறிவார் என்ற திரு நாமம் பெற்றார். அம்பிகை கோயிலின் பின் புறம் ஒரு திருக்குளமும் அதன் கரையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சந்நிதியும் இருக்கின் றன. வடகிழக்கு மூலையில் ஈசானியமூர்த்தி சந்நிதி இருக்கிறது.

இத்தல தீர்த்தலங்கள் இரண்டு. கோயி லுக்கு வடபால் ஓடும் காவிரி ஒன்று. இதன் பெருமையை சுந்தரர்,

"தவஞ்செயும் போகரும் யோகரும் புலரிவாய்
மூழ்கச் செல்லுமா காவிரி"

"ஆடுவார் பாவந்தீர்த்து அஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரி"

"எண்திசை யோர்களும் ஆடவந்திங்கே
சுழிந்திழி காவிரி"

எனப் பலவாறாகப் போற்றிப் புகழுகின்றார். மற்றொன்று சுந்தரதீர்த்தம் என்பது. தாமரைத் தடாகம் என்றும் பதுமதீர்த்தம் என்றும் அதற் குப் பெயர்கள் உள்ளன. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தபோது சுந்தரர் தாம் செய்து கொடுத்த வாக்கினின்றும் தவறிய தால் தம் கண் ஒளி இழந்ததுடன் உடற் பிணியும் உற்றார். இறைவனைப்பாடி காஞ்சி புரத்தில் ஒருகண் பார்வையையும், திருவாரூ ரில் மற்றொருகண் ஒளியையும் பெற்றார். அவர் இத்தலத்திற்கு வந்தபோது "அடி யேன்மேல் உற்ற பிணி வருத்தமென்னை ஒழித் தருளவேண்டும் என" இறைவனை வணங்கி னார். "வடகுளத்துக்குளி" என்று சிவபெரு மான் திருவாக்கு எழுந்தது. அவ்வாறே சுந் தரரும் இந்த தீர்த்தத்தில் முழுகி நோய் நீங் கப்பெற்றார். "துருத்தியார் தமைத்தொழுது புக்கதனில் முழுகுதலும் புதியபிணி அது நீங்கி அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயி னார்" என்று சேக்கிழார் பெருமான் ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இந்த நிகழ்ச்சியைக் கூறியிருக்கிறார். கார்த்திகை ஞாயிறில் காவிரி தீர்த்தம், பதும தீர்த்தம் இவைகளில் நீராடி இறைவனை வழிபட்டால் எல்லா நலன்களும் பெறுவர் என்று தலபுரா ணம் கூறுகிறது.

கோயிலில் ஐந்துகால பூசைகள் நாள் தோறும் நிகழ்கின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. தருமபுர ஆதீன ஆட்சிக்குட்பட்ட கோயில்களில் இது வும் ஒன்று.

திருஞானசம்பந்தர் இத்தலத்துப் பெரு மான்மீது இரண்டு திருப்பதிகங்கள் ஓதி யருளியிருக்கின்றனர். ஒருபாடலில் "வெயிற் கெதிர்ந்து இடம் கொடாது அகங்குளிர்ந்த பைம்பொழில் துயிற்கெதிர்ந்த புள்ளினங்கள் மல்குதண்துருத்தி" என்று வெயில் புகமுடி யாத சோலைகள் இருந்தன என்று கூறி யிருப்பதை இப்போதும் காணலாம். "துருத்தி எம்பித்தர் பித்தனைத்தொழப் பிறப்பறுத்தல் பெற்றியே" என்று ஒருபாட லில் பயன் கூறுகிறார். மற்றொரு பதிகத்தில் திருத்துருத்தியையும் திருவேள்விக்குடியை யும் சேர்த்துப் பாடுகிறார். பகலில் துருத்தி யிலும், இரவில் வேள்விக்குடியிலும் இறை வன் தங்குவதாக ஒவ்வொரு பாடலிலும் கூறுகிறார். "மங்கையொ டொருபகல் அமர்ந்தபிரான் வெறியுலாந்துருத்தியார் இர விடத்துறைவர் வேள்விக்குடியே" என் றின்னோரன்னபிற.

திருநாவுக்கரசர் இத்தலத்து இறைவன் பேரில் ஒருபதிகம் பணித்துள்ளனர். உலகப் பற்று, உடல்பற்று இவைகளை நிலையாக எண்ணவேண்டாம் என்றும், துன்பத்தை ஒழிக்க வேண்டுமென்றால் துருத்திப்பெரு மானை அருத்தியொடு தொழவேண்டும் என் றும் கூறுகிறார். "பிண்டத்தை (உடலைக்)

கழிக்கவேண்டில் பிரானையே பிதற்று மின்கள்'' என்று சொல்கிறார்.

சுந்தரர் இத்தலத்துக் கெழுந்தருளி இறைவன் ஆணையின் வண்ணம் வடகுளத் தில் படிந்தெழுந்து உடலுறுபிணி நீங்கி ஒளிதிகழ் மேனியரானார் என்றதை முன்னே கண்டோம். அவரும் ஒருபதிகம் பாடியருளி யுள்ளார். ஒரு பாடலில் ''என் உடம்படு பிணி இடர் கெடுத்தானை'' என்று இந்நிகழ்ச் சியைக் குறித்திருக்கிறார். அதே பாடலில் இறைவன் திருப்பெயரை, ''சொன்னவாறறி வார் துருத்தியார்'' என்றுரைக்கிறார்.

மாணிக்கவாசகர் ''துருத்திதன்னில் அருத் தியோடிருந்தும்'' என்று கூறியதோடு பின் வரும் பாடலையும் பாடி யருளியிருக்கிறார்:—

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியே
னணிகொள்தில்லை கண்டேனே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் இத் தலத்தைப் பற்றிப் பின்வரும் வெண்பாவைப் பாடியுள்ளார் :—

வஞ்சியன நுண்ணிடையார்
வாள்தடங்க ணீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற்
கொண்டிருந்து —கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா
என்னுமு னெஞ்சே
திருத்துருத்தி யான்பாதம் சேர்.

நம்பியாண்டார் நம்பிகள் ஒரு பாடலில் இப்பதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:—

நிதியார் துருத்திதென் வேள்விக்
குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்துப்
புகர்பின்னை மாற்றிடென்று
துதியா அருள்சொன்ன வாறறி
வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனன்வயல் நாவலர்
கோனென்னும் நற்றவனே.

சேக்கிழார் பெரியபுராணத்தில் சுந்தரர் இத்தலத்துக்கு எழுந்தருளி நோய் நீங்கப் பெற்ற வரலாற்றைக் கூறியிருக்கிறார்.

கீழ்வரும் சிவாலய மான்மியக்கோவையின் பாடல் ஒன்றிலும் இந்நிகழ்ச்சி குறிக்கப் பெறுகிறது:—

மங்கலந் திகழு நாவலூரார்க்கு
மருவுவெண் ணோய் தவிர்த்தவனே
எங்களாண் டவனே துருத்திமாநகரில்
இவர் முகிழாம்பிகைக் கிசைந்த
சங்கரா வேதேச் சுரவெனை யாள்வாய்
சம்புவே சதாசிவப் பொருளே
செங்கர மதனில் தமருகு முடைய
செல்வமே கருணைவா ரிதியே.

இப்பாடலில் தேவி, இறைவன் பெயர்களான முகிழாம்பிகை, வேதேச்சுரன் என்று கூறி யிருப்பது குறிக்கத்தக்கது.

இன்னும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருத்துருத்திப் புராணம் என்பது செய்யுள் வடிவானது. 40 படலங்களையுடையது; 1627 பாடல்கள் கொண்டது. அதில் அம்மையார் திருமணம், உருத்திரசன்மன் பேறுபெற்றது, சுந்தரர் நோய் நீங்கினது, சூரியன் வழிபட்டது, பல முனிவர்கள் வழிபட்டுப் பேறுபெற்றது, அக்கினிதீர்த்தம், காளிதீர்த்தம், புண்டரீக தீர்த்தம், காமதீர்த்தம், கதிரவதீர்த்தம், மார்க்கண்டதீர்த்தம் முதலிய தீர்த்தங்களின் பெருமை இவற்றை விரிவாகக் கூறியிருக் கிறார். இந்நூலாசிரியரே ''திருத்துருத்திக் கச்சிவிநாயகர் பதிகம்'', ''திருத்துருத்திச் சுப்பிரமணியர் பதிகம்'' என்ற நூல்களையும் இயற்றியிருக்கின்றார். ப. சிங்காரவேற் பிள்ளை யென்பவர் ''அரும்பன்ன வனமுலையம்மை பதிகம்'' என்ற நூலை யாத்துள்ளனர். தருமை ஆதீனத்தார், திருத்துருத்தித் தல வரலாறு என்ற வசன நூலை அழகிய படங்க ளுடன் வெளியிட்டிருக்கின்றனர்.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய விரி வான கட்டுரையொன்று வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களால் எழுதப்பட்டு 1962 மார்ச் மாதம் 'திருக் கோயில்' இதழில் வெளியிடப்பெற்றிருக்கின் றது. எனினும் சுருக்கமாக அவற்றில் கண்டவற்றை இங்கே சொல்லப்படுகிறது. இத்திருக்கோயிலைக் கருங்கல்லால் கட்டியவர் கண்டராதித்தர் மனைவியும் உத்தமசோழ னின் தாயுமான செம்பியன்மாதேவியார் ஆவர். இச்செய்தியைக் கோயிலிலுள்ள கல்வெட் டொன்று பின்வருமாறு கூறுகிறது:—''இத் திருக்கற்றளி எடுப்பித்து இத்தேவர்க்...... ஸ்ரீ உத்தமசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செம்பியன்

மாதேவியார் கோராசராச கேசரிபன்மர்க்கு ஆண்டு எ-ஆவதில்." இங்கு குறிக்கப் பெற்ற இராசகேசரிவர்மன் கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்ட முதலாம் இராசராச சோழனுவன். இவனுடைய ஏழாவது ஆட்சி யாண்டில் கோயில் கட்டப்பெற்ற தென்ருல் கி. பி. 992 என்பதாகும். ஆகவே இக் கோயில் எடுக்கப்பெற்று இற்றைக்கு 970 ஆண்டுகளாகின்றன. இவ்வூர், முதலாம் இராசராச சோழன் காலத்தில் உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டிலும், முதற் குலோத்துங்கன் காலத்தில் இராச நாராயண வளநாட்டிலும், மூன்ருங் குலோத்துங்கன் காலத்தில் சயங்கொண்ட சோழ வளநாட்டிலும் அடங்கியிருந்ததாகத் தெரிகிறது. கிரந்த கல்வெட்டொன்று கோயிலுக்குக் கல்யாண ஆலயம் என்ற பெயருண்டு என்பதை அறிவிக்கிறது. காவிரிக் குத் தென்கரைக் கோயில் என்பதை "திண்டிறல் வென்றித்தண்டாற் கொண்ட கோவி ராச கேசரிபன்மற்கு ஆண்டு கஎ(17) ஆவது தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் தேவதானம் வீங்கு நீர்த்துருத்தி சொன்னவாறறிவார்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறிகிருேம். இறைவன் திருப்பெயர்களை, 'சொன்னவாறறிவார்', 'வீங்குநீர்த் துருத்தியுடையார்', 'கற்றளியுடைய மகாதேவர்' என்று குறிக்கின்றன. தேவாரத்தில் காணப்படும் சொற்கள் கல் வெட்டுக்களில் பயிலப்பெற்றிருப்பது கண்டு மகிழத்தக்கது. நாள்தோறும் நான்குகால பூசை நிகழ்ந்ததையும், அப்போது இறைவனுக்கு, பயற்றுப்பொங்கல், பருப்பமுது, தயிரமுது இவை படைக்கப்பெற்றன என்றும், வழிபாட்டுக் காலங்களில் பறை, மத்தளம், சங்கு, காளம், செகண்டிகை, தாளம், கைம்மணி இவைகள் ஒலிக்கப்பெற்றன என்றும், நடனமும் நிகழ்ந்ததென்றும் கல்வெட்டுக்களினின்றும் அறிகிருேம். இப் போது ஆண்டுதோறும் சித்திரையில் பிரம் மோற்சவம் நடைபெறுகின்றது. ஆனுல் அக்காலத்தில் வைகாசியில் நடைபெற்றதாக இரண்டு கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அம்மன்கோயில் சுற்றுமதில், உள்மதில், கோபுரம் இவைகள் கி. பி. 1630-ல் பிப்பிலி சிதம்பர தீட்சதரால் கட்டப்பெற்றன. கோயிலில் திருவாராதனை செய்யும் நம்பி (குருக்கள்), திருவமுதாக்குதல், திருமஞ்சன திருமெய்ப்பூச்சுத் தேய்த்தல் (சந்தனம் அரைத்தல்) முதலியன செய்யும் பிராமணப் பிள்ளை (பரிசாரகர்), திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொகுப்பார் (பூமாலை கட்டுபவர்), திருவலகிடல், திருமெழுக்கிடல் இவை செய் வார், திருமெய்க்காப்பார், கரணத்தான், இராசநீதி ஓடிச்செய்வார், ஸ்ரீகாரியம் செய் வார், திருப்பதியம் (தேவார திருமுறை) பாடுவார் இவர்களுக்கெல்லாம் நாள் ஒன் றுக்கு இவ்வளவு என்று விதித்து ஒரு ஆண் டுக்கு நெல் இவ்வளவு என்று கணக்கிட்டுக் கொடுக்கப் பெற்றதையும் கல்வெட்டுக்கள் விவரமாக அறிவிக்கின்றன. இவைகளி னின்றும் கோயிலின் ஆட்சி எவ்வாறு நடை பெற்றதென்று தெரிகிறது.

இவ்வூரில் ஏழு ஈசுவரர் கோயில்கள் இருந்தனவென்று தெரிகிறது. உக்தவேதீச் சுரம், விக்கிரமசோழீச்சுரம், ஓங்காளீச்சுரம், மன்மதேச்சுரம், சப்தரிஷீச்சுரம், விசுவேச் சுரம், வருணேச்சுரம் என்பன அவை. முதல் நான்கும் தனித்தனிக் கோயில்களாக இப் போது திகழ்கின்றன. மற்ற மூன்றும் அழிந்துவிட்டன. அவற்றிலிருந்த சிவலிங்க மூர்த்திகள் குத்தாலம் பெரிய கோயிலில் இருக்கின்றன.

விக்கிரம சோழீச்சுரம்: ஊருக்குக் கிழக் குக்கோடியில் இருக்கிறது. கிழக்கு பார்த்த சந்நிதி; கோபுரம் உண்டு; இரண்டு பிரகா ரங்கள் உள்ளன. கோயிலுக்கு வெளியில் சந்நிதிக்கு வடபக்கம் அக்கினிதீர்த்தம் இருக் கிறது. சோழன் மனைவி இந்த தீர்த்தத்தில் முழுகி நோய் நீங்கப்பெற்ருள். அக்கினி பகவான் தான் மற்றவர்களைச் சுட்டெரித்த பாவம் நீங்க இவ்விறைவனை வழிபட்டுப் பேறு பெற்ருன். வைகாசியில் உற்சவம் நடைபெறுகிறது. கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் சுவாமி காவிரிக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கிருர். கோயிலில் கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. இறைவன் இறைவியின் திருநாமங்கள் சோழீசுவரர், அக்கினீசுவரர், சௌந்தரநாயகி என்பன. இக்கோயிலைப் பற்றி துருத்தித் தலபுராணம் அக்கினீசப் படலத்தில் கூறப்பெற்றிருக் கிறது.

ஓங்காளீச்சுரம்: இறைவன் பெயர் ஓங்கா ளீசுவரர்; தேவியின் திருநாமம் ஆனந்த வல்லி. காளி இறைவனைப் பூசித்ததாகச்

செம்பொனார்கோயில்

(திருச்செம்பொன்பள்ளி—சுவர்ணபுரீசர் கோயில்)

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே

—திருஞானசம்பந்தர்.

அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்
திருவ ராயிடு வார்கடை தேடுவார்
தெருவெ லாமுழல் வார்செம்பொன் பள்ளியார்
ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே

—திருநாவுக்கரசர்.

திருச்செம்பொன்பள்ளி என்ற பாடல் பெற்ற சிவத்தலம் இப்போது செம்பொனார் கோயில் என்று வழங்கப்பெறுகிறது. இது தஞ்சைமாவட்டத்திலுள்ள மாயூரத்திற்குக் கிழக்கே ஏழுகல் தொலைவிலிருக்கிறது. மாயூரம்-தரங்கம்பாடி கிளை இருப்புப்பாதையில் செம்பொனார் கோயில் என்ற நிலையத்திலிருந்து அரைகல் தொலைவிலுள்ளது. மாயூரமிருந்து பஸ்கள் அடிக்கடி இவ்வூர் வழியாகச் செல்கின்றன. இறைவனுடைய திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. ஒரு பிரகாரம்தான்.

கிழக்கு வாயிலைத்தாண்டியதும் வடக்கே நவக்கிரகம், சூரிய சந்திரர்கள் சந்நிதிகள் இருக்கின்றன. நேரே மூலஸ்தானத்தில் சிவலிங்கமூர்த்தி யெழுந்தருளியிருக்கிறார். அவருடையதிருப்பெயர்கள் சுவர்ணபுரீசுவரர், சுவர்ணலட்சுமிபுரீசர் என்பன. அவருடைய சந்நிதிக்குத் தென்புறம் மேற்கு பார்க்க அம்பிகை சந்நிதி இருக்கிறது. இறைவியின் திருநாமங்கள் மருவார்குழலி, சுகந்தகுந்தாளம்பிகை, சுகந்தவனநாயகி, தாட்சாயணி முதலியன. மதுரை மீனாட்சியைப்போல் இங்கு அம்பாளுக்கு இரண்டு திருக்கரங்களே உள்ளன. தக்கன் யாகம் நடந்த பறியலூரைப் பார்ப்பதுபோல அம்பிகை மேற்கு பார்க்க இருக்கிறதாகச் சொல்லுகின்றனர்.

தென்மேற்கு மூலையில் சப்த மாதாக்கள் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. மேற்குப் பிரகாரத்தில் தலவிநாயகர், நால்வர், சீனிவாசப்பெருமாள், சிபிச்சக்கரவர்த்திக்குக் காட்சி கொடுத்த மான்மழுவேந்திய சிவபெருமான், பாலசுப்பிரமணியர், கஜலட்சுமி, ஜேஷ்டாதேவி சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் க்ஷேத்திரலிங்கம், சண்டேசுவரர் சந்நிதிகளும் இருக்கின்றன.

இத்தலவிருட்சம் வன்னி. சுவாமி-அம்பாள் சந்நிதிகளுக்கு நடுவே இருக்கிறது. வில்வம் என்றும் சொல்கின்றனர். அது வடக்குப் பிரகாரத்திலிருக்கிறது. கோயிலுக்கு முன்னால் தென்புறம் இருக்கும் திருக்குளம் இந்திரதீர்த்தம். சூரியபுஷ்கரிணி என்றும் கூறுகின்றனர். இத்தலத்துக்கு அருகாமையில் ஓடுகிற காவிரியும் ஒரு தீர்த்தமாகச் சொல்கின்றனர். இதில் போடப்படும் எலும்புகள் பூமரங்களாவதாகச் சொல்லப்படுகிறது.

கோயிலில் நாலுகால பூசை நிகழ்கிறது. எல்லா மாதங்களிலும் நடைபெறவேண்டிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பிரமோற்சவம் சித்திரை 7-ஆம் தேதியிலிருந்து சொல்லப்படுகிறது காளி சிவலிங்கமூர்த்தியைப் பூசிப்பது போன்ற திருவுருவம் மிக அழகாக உள்ளது.

மன்மதேச்சுரம்: பஸ் நிலையத்துக்கு எதிரிலுள்ள கிழக்கு பார்த்த கோயில். மன்மதன் வழிபட்ட இடம். சுவாமி மன்மதேசுவரர்; அம்பிகை ஆதிசக்தி அம்பாள்.

திருமால்கோயில்: மேற்கண்ட சிவன் கோயில்களேயன்றி இவ்வூரில் ஒரு பெருமாள் கோயிலும் இருக்கிறது. கிழக்கு பார்த்த சந்நிதி. எம்பெருமான் திருநாமம் ஆதிகேசவப்பெருமாள்; நாச்சியார் திருப்பெயர் செங்கமலத்தாயார் என்பது.

ஓங்கிமே னுழிதரு மொலிபுனற்
கங்கையை யொருசடைமேல்
தாங்கினா ரிடுபலி தலைகல
னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடும் பகலிடம்
புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே

—திருஞானசம்பந்தர்.

18-ஆம் தேதிவரையில் நடைபெறுகிறது. இந்த பன்னிரண்டு நாட்களிலும் சூரியனுடைய கதிர்கள் மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கமூர்த்திமேல் படுகின்றன. ஆதலின் இத்திருவிழாவை சௌரமகோற்சவம் என்பர். தமிழ் நாட்டில் பல கோயில்களில் சூரியகிரணங்கள் மூலஸ்தான மூர்த்திமேல் விழுகின்றன. ஆனால் இங்குபோல் வேறெங்கும் பன்னிரண்டு நாட்களுக்கு விழுவதில்லை.

செம்பொனர் கோயிற்புராணம் என்ற வசன நூல் ஒன்று 1918 ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. அதில் தலத்திற்கு சுவர்ணபுரி, கந்தபுரி, இந்திரபுரி என்ற பெயர்கள் சொல்லப்படுகின்றன. இத்தலத்தில் இந்திரன் விருத்திராசுரனைக் கொல்வதற்காக இறைவனை வழிபட்டான்; முருகன் தாரகாசுரனை வதைப்பதற்காகச் சிவபெருமானைப் பூசித்தார்; அகத்தியர் வழிபட்டுப் புருஷார்த்தங்களையடைந்தார்; நான்முகன் பூசித்துப் படைப்புத் தொழிலைப்பெற்றார்; இரதி பூசித்து மன்மதனையடைந்தாள்; வசிட்டர், எட்டுத்திக்குப் பாலகர்கள், காவிரி, சிபிச்சக்கரவர்த்தி, முதலியவர்கள் வழிபட்டுப் பேறுபெற்றனர். தட்சன் யாகத்தை அழிக்க வீரபத்திரர் இத்தலத்தில் உற்பத்தியானதாகக் கூறப்படுகிறது. தட்சன் இங்கு பூசை செய்ததாகப் புராணம் கூறுகிறது.

1925-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் இக்கோயிலில் ஆறுகல் வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். இராசாதிராசன் காலத்திய கல்வெட்டொன்றில் திருவாலங்காட்டுக் கோயிலுக்கு விளநகர் சபையார் நிலம்விட்ட செய்தியை அறிவிக்கிறது. திரு இந்தளூர் நாட்டு மணற்குடிச் சபையார் அபிமான நல்லூரில் அரசரின் நன்மைக்காக வழிபட வருவார்க்கு உணவளிப்பதற்காக நிலம் வழங்கியதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டில் ஆக்கூரில் தூண்டாவிளக்கெரிக்க நாற்பது பொற்காசுகளுக்கு நிலம் வாங்கி உழவரிடம் ஒப்படைக்கப்பெற்றது கூறப்படுகிறது. சிங்களவர் துணைகொண்டு பாண்டியர் சோழநாட்டின்மேல் படையெடுத்து வந்தபோது இவ்வூரிலுள்ள தேவரடியாரும் கோயில் சபையாரும் கோயிலிலிருந்த எல்லாத் திருவுருவங்களையும் கொண்டுபோய், திருவிடைக்கழி முருகன் கோயிலில் பாதுகாப்பில் வைத்ததாகக் கல்வெட்டு கூறும் சிறந்த செய்தி. பெரிய புயற்காற்றினால் கோயிலின் தப்பாத வேதியன் திருவாசல் வடக்குச்சுவரும், தேர்நிலையும் வீழ்ந்த செய்தியும் ஒரு கல்வெட்டினால் அறியப்படுகிறது. அரசனின் நன்மைக்காக, தலைச்சங்காட்டுச் சபையார் ஒருவனிடமிருந்து நிலம் வாங்கி கோயில் பூசை முதலியவற்றிற்காக அளித்ததை ஒரு கல்வெட்டால் அறிகிறோம். இதில் இராசசுந்தரன் வீதி என்ற தெருப்பெயர் குறிப்பிடப்பெறுகிறது. தஞ்சை சரபோஜி மன்னன் காலத்தில் கலி 4821-ல் செம்பொன்னுதர் கோயிலுக்கு தலைச்சங்காடு சபையார் கிராமங்களின் நன்மைக்காக ஆண்டுக்கு ஒருமுறை வரியுடன் கூட தறிகளின் உற்பத்தியளவை யொட்டி வரி வசூலித்துக்கொள்ள காவிரிப்பூம்பட்டினம் ஐயாவையனும் தாண்டவராய முதலியாரும் தண்டல்காரர்களாக நியமித்த செய்தியை ஒரு கல்வெட்டுமூலம் தெரிந்துகொள்கிறோம்.

செம்பொன்பள்ளி என்ற பாடல்பெற்ற தலம் இப்போது செம்பொனர் கோயில் என வழங்கப்பெறுகிறது. இவ்வூருக்குத் தென்கிழக்கில் பழய திருச்சம்பள்ளி, வடகிழக்கில் புதிய திருச்சம்பள்ளி என்ற இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. செம்பொனர் கோயிலில் குமரகோயில், இரேணுகாதேவி கோயில் இவைகளும் உள்ளன.

தந்தையுந் தாயுமாகித்
தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர்கூடி
முறைமுறை யிருக்கச்சொல்லி
எந்தைநீ சரணமென்றங்
கிமையவர் பரவியேத்தச்
சிந்தையுட் சிவமதானர்
திருச்செம்பொன் பள்ளியாரே

—திருநாவுக்கரசர்.

சிறுபுலியூர்—கிருபாசமுத்திரப் பெருமாள் கோயிலில் வைகாசோற்சவம் 3-6-62 முதல் 13-6-62 வரை நடைபெற்றது.

திருஅழுந்தூர்

வேதபுரீசுவரர் கோயில்

வானேமலை யேயென மன்னுயிரே
தானேதொழு வார்தொழு தாண்மணியே
ஆனேசிவ னேயழுந் தையவரெம்
மானேயென மாமட மன்னினையே

—திருஞானசம்பந்தர்.

நம்முடைய நாட்டில் ஒரே ஊரில் பாடல்பெற்ற சிவத்தலமும் மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசமும் இருக்கின்றன. சிதம்பரம்—திருச்சித்திரகூடம், காஞ்சியில் ஏகாம்பரர்—வரதராஜர், சென்னையில் கபாலீசுவரர்—பார்த்தசாரதிப்பெருமாள், கும்பகோணத்தில் கும்பேசுவரர்—சாரங்கபாணி, மதுரையில் சொக்கநாதர்—கூடலழகர் முதலியவை இவ்வகையைச் சேர்ந்தவை. திருவழுந்தூர் என்னும் பதியும் அத்தகைய தொன்றே. இங்கு பாடல்பெற்ற சிவத்தலமும், மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசமும் இருக்கின்றன. கோயில்கள் ஒன்றையொன்று எதிர் நோக்கியுள்ளன. இப்போது இவ்வூர் தேரழுந்தூர் என்று வழங்கப்பெறுகிறது. மாயூரத்தில் காவிரியாற்றின் வடகரையில் திருஇந்தளூர் என்று ஆழ்வாரால் பாடப்பெற்ற வைணவப்பதியை இப்போது திருவிழந்தூர் என மக்கள் வழங்குகின்றனர். இங்கு எடுத்துக்கொண்டது இதனின் வேருயது.



தேரழுந்தூர் என வழங்கும் திருஅழுந்தூர் தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—கும்பகோணம் இருப்புப்பாதையில் தேரழுந்தூர் என்ற நிலையத்திற்குத் தெற்கே இரண்டுகல் தொலைவிலுள்ளது. மாயூரமிருந்தும், அணைக்கரையினின்றும் குத்தாலம் வழியாகவும் பஸ்கள் இவ்வூருக்குச் செல்கின்றன. அகத்தியமுனிவர் கீழே இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்ததை அறியாது ஊர்த்துவரதன் என்ற அரசன் வானவெளியில் தேரூர்ந்து செல்ல அது செல்லாது அழுந்தியதால் தேரழுந்தூர் என்று பெயர் ஏற்பட்டது என்று சொல்கின்றனர். தேவாரத்திலும், திவ்வியப் பிரபந்தத்திலும், பண்டைத்தமிழ் இலக்கியங்களிலும்,கோயில்கல்வெட்டுக்களிலும் இவ்வூர் அழுந்தூர், அழுந்தை என்றே குறிக்கப்படுகிறது.

இவ்வூருக்குள்ளே நுழைந்ததும் நடுவே தேர்நிலை இருக்கிறது. இங்கிருந்து கிழக்கிலும் மேற்கிலும் நோக்கினல் இரண்டு கோபுரங்கள் தோன்றும். மேற்கேயிருப்பது ஆமருவியப்பன் கோயில்; கிழக்கேயுள்ளது வேதபுரீசுவர் கோயில். திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு வந்ததும் இரண்டு கோபுரங்களையும் எது சிவன்கோயில் என்று திகைத்தாரென்றும், விநாயகப்பெருமான் கிழக்கேயுள்ள கோயிலைச் சுட்டிக் காட்டினரென்று ஒருசெய்தி கேட்கப்பெறுகிறது. தேர்நிலைக்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கி உயரமான இடத்தில் இந்த கணேசமூர்த்தியின் கோயில் இருக்கிறது. இவரை, திருஞானசம்பந்தப் பிள்ளையார் என அழைக்கின்றனர்.

சிவபெருமான் திருக்கோயில் ஐந்துநிலை மாடக் கோபுரத்துடன் மேற்கு நோக்கியிருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. கோபுரவாயிலைக் கடந்து வெளிப்பிரகாரத்தை யடைந்ததும் வடபுறத்தில் மடேசுவரர், மடேசுவரி சந்நிதிகள் இருக்கின்றன. மடேசுவரர் கிழக்கு நோக்கியும், மடேசுவரி தெற்கு பார்க்கவும் எழுந்தருளியுள்ளனர். இதுவே ஆதிக்ஷேத்ரம் என்றும் கூறுகின்றனர். சம்பந்தர் தேவாரத்தில் "மாமட மன்னினையே" என்று கூறியிருப்பது இதையே குறிக்கும் என்பர். வெளிப்பிரகாரத்தின் தென்புறம் கிழக்குநோக்கி அம்பாள் கோயில் இருக்கிறது. தேவியின் திருநாமம் சௌந்தரநாயகி. உட்பிரகாரத்தில் முருகன், மகாலட்சுமி, நடராஜர், சோமாஸ்

கந்தர் முதலியவர்கள் சந்நிதிகளும், கிழக்கு உட்பிரகாரத்தில் நவக்கிரகமும், தலவிருட்சமும் இலிங்கமும் இருக்கின்றன. தெற்கு உட்பிரகாரத்தில் பிரதான விநாயகர் சந்நிதியிருக்கிறது. மூலஸ்தானத்தில் சிவலிங்க மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளவர் வேதபுரீசுவரர்.

இக் கோயிலில் நாள்தோறும் நாலுகால பூசை நிகழ்கிறது. சித்திரைப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக்கொண்டு பத்துநாட்கள் உற்சவம் நடைபெறுகின்றன. கோபுரத்திற்கு வெளியில் தென்புறமுள்ள திருக்குளம் சுத்தாமிர்ததீர்த்தம். இதை வேததீர்த்தம் என்றும் கூறுகின்றனர். சந்தனமரம் இத்தலவிருட்சம்; கிழக்கு உட்பிரகாரத்திலிருக்கிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் பேரில் பதினொரு பாடல்களையுடைய பதிகம் ஒன்று ஓதியருளியுள்ளனர். இவ்வூர் மறையோர் இறைவனைத் தொழுது வழிபடுதலில் வல்லவர் என்று குறித்திருக்கிறார். அப்பரும், சுந்தரரும் க்ஷேத்திரக்கோவைப் பாடல்களில் இப்பதியைப் பாடியிருக்கின்றனர். திருக்கயிலாயத்தில் பரமசிவனும் திருமாலும் சொக்கட்டான் ஆடினர்; நடுவராக இருந்த பார்வதிதேவியார் தன் தமயன் மகாவிஷ்ணு வெற்றிபெற்றதாகக் கூறவே, ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்புக் கூறியதாக எண்ணிய சிவபெருமான் அம்மையாரைப் பூலோகத்தில் பசுவாகப் போகச் சபித்ததாகவும், அப்பசுவைக் காப்பாற்ற திருமால் கோசகனாக அவதாரம் எடுத்தார் என்றும், அம்மையாரின் சாபம் திருவாவடுதுறையில் நீங்கப் பெற்றதென்றும், சிவபெருமான் துறவி வேடங்கொண்டு திருவழுந்தூர் வந்து சந்தனமரத்தின் அடியிலிருந்துகொண்டு அந்தணர்களுக்கு வேதம் ஓதிவைத்ததால் வேதபுரீசுவரர் என்றபெயர் ஏற்பட்டதென்றும், சாபம் தீர்ந்தவுடன் தேவியாருக்கு சௌந்தர நாயகி என்ற நாமம் உண்டாயிற்றென்றும் கூறப்படுகின்றது. வில்வலன் வாதாபி என்ற இருவரையும் உண்டதால் (நரமாமிசபட்சணம்) ஏற்பட்ட பாவம் நீங்க இங்கு அகத்தியர் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றார் என்றும் சொல்லப்பெறுகிறது. இங்குள்ள சுத்தாமிர்த தீர்த்தத்தில் காவிரி நித்திய வாசம் செய்வதால் இதில் நீராடுபவர்கள் எல்லாநலன்களையும் பெறுவர் என்றும் உரைக்கப்படுகின்றது. இன்னும் வேதங்கள், விண்ணவர்கள், அட்டதிக்குப் பாலகர்கள், முனிவர்கள் முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டனர் என்றும் தெரிகிறது.

சங்க இலக்கியங்களில் அழுந்தூர் என்று குறிக்கப்பெறுவதால் இது மிகப்பழைய ஊர் என்று தெரிகிறது. சிவபெருமான் கோயிலும் பழமையானதென்பதும் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தவை. அவற்றில் "திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டு வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும் பண்ணியருளிய திரிபுவனதேவன்" எனவும், "மதுரையும் கருவூரும், ஈழமும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீசோழ கேரளதேவன்" எனவும் இவ்வரசன் குறிக்கப்பெறுகிறான். ஜெயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் திருவழுந்தூர் என்று ஊர் குறிக்கப்பெறுகிறது. இறைவன் பெயர் "திருவழுந்தூர் உடையார் திருமடமுடைய நாயனார்" என்று காணப்படுகிறது. தேவாரத்தில் மாமடம் என்று கூறியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்காக நாள்தோறும் காவிரி ஆற்றினின்றும் திருமஞ்சனம் கொண்டுவந்து, திருமஞ்சனசாலையில் நிரப்பி வைப்பதற்காக ஏற்படுத்திய நிவந்தங்களைப்பற்றி இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. கோபுரத்தில் சங்கு ஊதுவது போன்றுள்ள ஒரு உருவத்தைக் கம்பர் வளர்ப்புத் தந்தையான உவச்சர் என்று கூறுகின்றனர். கோயிலின் மூலஸ்தான மூர்த்தியின்மேல் மாசி மாதம் 23, 24, 25 இந்த மூன்று நாட்களிலும் சூரியகிரணங்கள் விழுகின்றன. இவ்வூரைப்பற்றிய பழம் பாடலொன்று பின்வருமாறு:—

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபம் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும் தேடிக்காணு
ஓதகத்தார் வாழும் அழுந்தூர்.

இவ்வூரிலிருக்கும் ஆமருவியப்பன் கோயிலைப்பற்றிய கட்டுரை இவ்விதழில் வேறொரு இடத்தில் காண்க.

திருவெதிர்கொள்பாடிச் சிவன்கோயில் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு]

திருவெதிர்கொள்பாடி என்பது சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் ஒன்றும். இது தஞ்சாவூர்ச்சில்லா மாயூரந்தாலூகாவில் குற்றாலத்துக்கு வடகிழக்கே இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. சிவநெறிக் குரவராகிய சுந்தரமூர்த்திநாயனாரால் பாடப் பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இக்காலம் மேலைத் திருமணஞ்சேரி என்று வழங்கப்பெறுகின்றது.

இறைவரின் திருப்பெயர்:—இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருவெதிர் கொள்பாடி உடையார் என்னும் திருப்பெயரால் கூறப்பெற்றுள்ளனர்.

திருக்கோயில் கட்டப்பெற்றகாலமும் அதைக் கட்டியவரும்:—இதுபொழுதுள்ள கற்கோயில் திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர் காலத்திலோ அல்லது அவர்க்குச்சற்று முன்னரோ கட்டப்பெற்றது என்று தெரிகின்றது. அதைக் கருங்கல்லால் கட்டியவன் கீரனூர் கிழவன் அரசுக்குடியான் திருநீலகண்டன் சேரமான் தோழன் ஆவன். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவது விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டு உடையார் திருவெதிர் கொள்பாடி உடையார் தேவதானத்துக் காணியுடைய இன்னயனூர் கோவில் இத்திருக்கற்றளி செய்த கீரனூர் கிழவன் அரசுக்குடியார் திருநீலகண்டர் சேரமான் தோழன் இராவைச் சந்திக்குவைத்த சந்தி விளக்கு ஒன்று. ஒன்றும் சந்திராதித்தவரை உபையஞ் செலுத்தக்கடவோம். இச்சிவப் பிராமணரோம்' என்னும் கல்வெட்டால் புலப்படுகின்றது. [இக்கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் இருக்கிறது.]

இறைவியாரின் திருப்பெயர்:—இக்கோயில் உள்ள திருக்காமக் கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவியாரின் திருப்பெயர் பெருங்கருணைப் பிராட்டியார் என்பதாகும். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதினொன்றுவது இந்நாயனுர் தேவ......ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற அத்தத்துநாள் இக்கோயில் திருக்காமக் கோட்டமுடைய பெருங்கருணைப் பிராட்டியார் கொடையார் கோப்பெருஞ்சிங்கர்க்குப் பதினொன்றுவதும் பன்னிரண்டாவதும் பதின்மூன்றுவதும் முன்னின்று கடமை இருதே ஓடிப்போதினில் இவர்க்கு இவர் நின்ற இடத்தே கைகொண்டு காட்டிக் குடுக்கையில்......என்று தொடரும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். [இக்கல்வெட்டு மகா மண்டபம், அர்த்தமண்டபம் இவைகளின் தென்புறச் சுவர்களில் இருக்கிறது.]

கோபுரத்தைக் கட்டியவர்:—இக்கோயிலின் முன்னுள்ள மூன்றுநிலைக் கோபுரத்தைக் கட்டியவர் தொண்டைமண்டலத்துக் குன்றத்தூர் நாராயண முதலியார் மகன் வயிர முதலியாராவர். இச்செய்தியை "தொண்டைமண்டலம் குன்றத்தூர் நாரண முதலியார் புத்திரன் வயிர முதலியார் திருக்கோபுரம்" என்னும் அக்கோபுரக் கல்வெட்டால் அறியலாம். [இது கோபுரவாசலின் தென்பக்கத்தில் பொறிக்கப்பெற்றுள்ளது.]

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி:—இத் திருக்கோயிலில் திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்தவர் கண்ணமங்கலமுடையாரான வீமப்பிள்ளையின் பாரியாரும் மிழலைநாட்டுக் கோனூரான புலியூருடையார் ஆதித்த தேவரின் மகளாரும் ஆவர். இவ்வம்மையாரின் திருப்பெயர் கல்வெட்டில் சிதைந்துவிட்டது. இவ்வம்மையார் இத்திருவெதிர்கொள்பாடியில் கீழைத் திருவீதியில் பூண்டி உடையார் புகலிவேந்தர் இருந்த ஆலாலசுந்தரன் குகையை எடுத்துக் கட்டியுள்ளார். எனவே இவ்வூரில் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருப்பெயரால் திருமடம் இருந்த செய்தி பெறப்படுகின்றது.

இக்கோயில் கல்வெட்டுக்களைப் படித்து எழுதலாயிற்று.

இச்செய்தி "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜராஜ தேவர்க்கு யாண்டு ஆருவதின் எதிராமாண்டு கண்ணமங்கல முடையார் வீமப்பிள்ளை பாரி, புலியூருடையான் ஆதித்ததேவர் மிழலைநாட்டுக் கோனூர் மகளார்...யார் திருவெதிர்கொள்பாடி உடையார்க்கு திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவிக்க வேணுமென்று இவர் சொல்லி இக்கோயில் தானத்தாரையும் உதையங்குடியார்களையும் அழைத்து......என்று தொடங்கும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

திருக்குளத்தில் உள்ள கல்வெட்டு:—இக்கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளத்தின் கீழ்கரையில் நாட்டப்பட்டிருக்கும் ஒரு கல்லில் காணப்பெறும் "ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜந் திருமங்கலத்து உடையார் விக்கிரம சோளீஸ்வரமுடையார் திருநாமத்துக்காணி" என்னும் கல்வெட்டால் இத்திருக்குளம் இராஜராஜன் திருமங்கலத்து விக்கிரம சோழீச்சரமுடையார்க்கு உரிமையுடையது என்று பெறப்படுகின்றது. இந்த எதிர்கொள்பாடிக்கு வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் திருமங்கலம் என்று ஓர் ஊர் இருக்கின்றது. அவ்வூர்ச் சிவன்கோயில் கல்வெட்டுக்கள், அவ்வூரின் பெயர் இராஜராஜன் திருமங்கலம் என்றும், அவ்வூர்ச் சிவபெருமானின் திருப்பெயர் விக்கிரம சோழீச்சரமுடையார் என்றும் அறிவிக்கின்றன. எனவே எதிர்கொள்பாடியில் உள்ள இத்திருக்குளம் திருமங்கலத்துச் சிவபெருமானுக்கு உரியது என்று அறியக்கிடக்கின்றது.

அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்:—இத் திருவெதிர்கொள்பாடி உடையார் திருக்கோயிலைக் கற்றளி செய்த கிரனூர் கிழவன் அரசுக்குடியான் திருநீலகண்டன் சேரமான் தோழன் இப்பெருமானுக்குச் சந்திவிளக்கு ஒன்றைக் குலோத்துங்கசோழ தேவரின் மூன்றாம் ஆட்சி யாண்டில் வைத்துள்ளான். இக்கோயிலிற் பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்த கண்ணமங்கலம் வீமப்பிள்ளையின் மனைவியார் உதையங்குடியில் தாம் சீதனமாகப்பெற்று அநுபவித்து வந்ததும் இருகரையன் என்று பேர் கூவப்பெற்றதுமான நிலத்தில் காலே சின்னத்தைப் பள்ளியறை நாச்சியார்க்குத் திருவமுதுக்காகக் கொடுத்துள்ளனர்.

இக்கோயில் மாடாபத்யமாய் அநுசங்காத்த பூண்டி உடையான் விசுவேசுரன், திருவேள்விக்குடி மணவாளநம்பி தேவதானம் திருவேள்விக்குடி நல்லூரில், கீழைக்குழவி, சிங்கவிளாகம் என்னும் பெயர்கள் வாய்ந்த நிலங்களில் மூன்றே முக்காலே நாலுமா அரைக்காணி நிலத்தை வாங்கி இந்நாயனூர்க்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது இடப நாயிற்று அபரபட்சத்து ஞாயிற்றுக்கிழமையும் சதுர்த்தி திதியும் பெற்ற ரோகிணி நாளாகும்.

இத்திருவெதிர் கொள்பாடிக் கோயிலுக்கு அளிக்கப்பட்டனவாகத் திருவேள்விக்குடிக் கல்வெட்டினால் அறியப்படும் நிவந்தங்கள்:—

இராசேந்திர சிங்கவளநாட்டுக்குறுக்கை நாட்டு இடையாற்று வெள்ளான் வெண்காடன் சாத்தனும், மந்திமன்றனும், குப்பை கூத்தனும், அவனிமா தேவடிகளும், மணஞ்சேரி அழகனும், மணஞ்சேரிசோலை கேசனும் ஆகிய இவர்கள் இடையாற்று மணம்பு என்று பேர் கூவப்பட்ட நிலத்தில் நான்குமா முக்காணி நிலத்தை இறையிலியாகக் கொடுத்துள்ளனர்.

இராசேந்திர சிங்கவளநாட்டு நல்லாற்றூர் நாட்டு ஆலங்குடியில் முடப்பந்தூறு என்ற பேர் கூவப்பட்ட நிலத்தில் வடக்கில் ஒன்றே இரண்டு மாவில் கீழ்க்கடை நிலம் ஆறுமாவை ஸ்ரீபலிபுறமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தின் நான் கெல்லையாவது:- கீழ்பாற்கெல்லை மூலங்குடிக் கண்ணாற்றுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஆலங்குடி நிலத்துக்கு வடக்கும், மேல்பாற்கெல்லை...நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை குறுக்கை நாட்டுப் பிரமதேயம் முருகவேள் மங்கலத்துக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லையுள் அகப்பட்டதாகும். இராசேந்திர சிங்க வடநாட்டுக் குறுக்கை நாட்டுச் சோத்த மங்கலத்தில்* எழுமாநிலம் இத்திருவெதிர் கொள்பாடி உடையார்க்குத் திருநந்தவனப் புறமாகப் பாண்டூர் கிழவன் குணதீரன் என்னும் வாணதேவன் முதலானோரால் கொடுக்

* இச்சோத்தமங்கலமே இக்கட்டுரையாளர் சுந்தரேச வாண்டையாரின் சொந்த ஊராகும்.

கப்பட்டுள்ளது. உய்யக்கொண்டார் வள நாட்டுப் பேராவூர் நாட்டுக் கூடலூரில் முதல் இராசராச சோழனின் இருபத்தேழாம் ஆண்டில் அவ்வூர்க்கிழவன் மாறன் செட்டி யாலும் நிலங்கள் விடப்பட்டிருந்தன. கங்கைகொண்ட சோழனின் (இராசேந்திரன் I) இரண்டாம் ஆண்டில் முதல் இராசராச சோழரின் தேவியார் அருமொழி யாரால் ஐம்பது பசுக்கள் விடப்பட்டன. அவற்றுள் அம்மன்னனது ஐந்தாம் ஆண்டில் இருபத்தாறு பசுக்களே எஞ்சியிருந்தன.

சரித்திரப் பகுதிகள்

இவ்வெதிர்கொள்பாடிக்கு உரியன வாய்த் திருவேள்விக்குடிக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள நிவந்தங்களில் பெரும்பாலன முதல் இராசராச சோழரின் இருபது, இருபத்துநான்கு, இருபத்தேழாம் ஆண்டுகளில் விடப்பெற்றனவாகும். ஆனால் அவை கங்கைகொண்ட சோழனின் (முதல் இராசேந்திர தேவனின்) ஆறும் ஆண்டில் கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளன. இங்ஙனம் ஒரு அரசர் காலத்தில் விடப்பட்ட நிவந்தங்களின் மூல ஓலை அல்லது செப்பேடுகளைப் பார்த்து பின்வந்த அரசர்கள் கல்லிற் செதுக்கிவைப்பது வழக்கம் என்பதைத் திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிற் கல்வெட்டுக்களினுலும் அறியலாம்.

"உடையார் ராஜேந்திரசோழ தேவர்க்கேய் யாண்டு இரண்டாவது உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தேவியார் ராஜராஜ மண்டலத்துத் திரு...அரங்கன் அருமொழி"— என்னும் திருவேள்விக்குடிக் கல்வெட்டுப் பகுதியால் முதலாம் இராசராச சோழர்க்கு அருமொழி என்பார் தேவியார் என்பதும் அவர் பாண்டியன் மகளார் என்பதும் அறியலாகும். திருவெதிர்கொள்பாடி என்னும் ஊர் திருவெருதுபாடி என்று திரிந்து வழங்கி வந்துள்ளதைத் திருவெதிர்கொள்பாடிக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

சிறுபுலியூர் :—கிருபாசமுத்திரப்பெருமாள் கோயிலில் வைசாகோற்சவம் 3—6—62 முதல் 13—6—62 வரை நடைபெற்றது.

திண்டுக்கல் :—காளகஸ்தீஸ்வரசுவாமி கோயிலில் அருணகிரிநாதசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள் உற்சவ மூர்த்திகள் பிரதிஷ்டை விழா 6—6—62ல் நடைபெற்றது.

சோழவந்தான் :—ஜெனகை மாரியம்மன் கோயிலில் திருவிழா 4—6—62 முதல் 16—6—62 வரை நடைபெற்றது.

திருமாகாளம் :—சோமயாஜி மாற நாயனரின் ஸோமயாக மகோற்சவம் 5—6—62 முதல் 11—6—62 வரை நடைபெற்றது.

சென்னை :—ஏகாம்பரேசுவரர் கோயிலில் திரு எஸ். பார்த்தசாரதி அவர்களால் கண்ணப்ப நாயனர் சரித்திரம் 5—6—62 தேதியிலும், திருஞானசம்பந்தர் சரித்திரம் 7—6—62 தேதியிலும் நிகழ்த்தப்பெற்றன.

திருநாரையூர் :—திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற நம்பியாண்டார் நம்பி நினைவுப் பன்னிருதிருமுறை நிதியிலிருந்து திருமுறைத் திருவிழா 5—6—62ல் நடைபெற்றது.

சிங்கம்புணரி :—சேவுகப்பெருமாள் ஐயனர் கோயிலில் பிரம்மோற்சவம் 3—6—62 முதல் 12—6—62 வரை நடைபெற்றது.

விஜயபுரம் :—இரேணுகாதேவி அம்பாளுக்கு ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

ஸ்ரீமுஷ்ணம் :—பூவராகசுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த வேதாந்த தேசிகர் சந்நிதி ஜீரணோத்தாரண சம்புரோக்ஷணம் 13—6—62ல் நடைபெற்றது.

ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

கங்கையிற் புனிதமாய காவிரி யாற்றி டைக் குறையிலே காவிரிநங்கை தன்னிரு கரங்களாலும் அரவணைத்துச் செல்லும் பிரதேசத்திலே மணக்கால்நம்பி ஆளவந் தாரை அழைத்துச் சென்றுகொண்டிருந்தார். நாற்புறமும் வண்டினம் முரலும் சோலையும் மயிலினம் ஆலும் சோலையும், கொண்டல் மீதணவும் சோலையும், குயிலினம் கூவும் சோலையுமாய் எங்கு பார்த்தாலும் ஒரே மரகதமயமாய், மனோரம்மியமாய் விளங்கிய பசியநிறம் பக்குவ ஜீவனுகச் செல்லும் ஆள வந்தார் உள்ளத்தைப் பரவசப்படுத்தியது. மனம் பையப்பைய இவ்வுலகோடு ஒட்டாத ஏதோ ஒன்றை நாடிச் செல்வதை ஆளவந் தார் உணர்ந்தார். மணக்கால்நம்பிகள் சொன்ன செல்வமே அது. அதுதான் எப்படி யிருக்கும் என்றறிய அவர் உள்ளம் துடித் தது. பாராத அச்செல்வத்தைப் பற்றிச் செல்லும்போதே அவர் உடல் உணர்ச்சி மிகுதியால் நடுங்கிற்று. உள்ளத்தே அவரை யும் அறியாமல் ஒரு மகிழ்ச்சியூட்டும் சாந்தி பெருகிப் பாய்ந்தது. இவருடைய மெய்ப் பாடுகளை யெல்லாம் தன் ஓரக்கண்ணுல் பார்த்துக்கொண்டே வந்த மணக்கால்நம்பிகள் உள்ளத்தே களிமிக்கவராயினும் அதனை வெளிக்காட்டாதே மெல்ல ஆளவந்தாரை அழைத்துச்சென்று அரங்கவிமானம் புக்கார். அங்கே

"இருளியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்திஅணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவு அரசப் பெரும் சோதிஅனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவிப்

பள்ளிகொள்ளும் கருமணியைக் கோம ளத்தை அரங்கமாலை ஆளவந்தாருக்குக் காட்டி அனந்தன்பணமுடி ஆதியாக அரங் கன் திருவடி வரையில் நன்கு ஸேவிக்கப் பண்ணி 'ஆளவந்தாரே! இதோ. உமது மூதாதையர் உமக்குக் காட்டச் சொல்லிய செல்வம்! என்று கூறிக் காட்டியருளினுர். ஆளவந்தார் தம்மிரு கண்ணினுலும் பார்த் தார், பார்த்தார், பார்த்துக்கொண்டே நின் ருர். அவர் உடல் செயலற்ற நிலையில் நின் றது. உள்ளமோ அந்த அழகுத் திருவுருவத் தின்சௌந்தர்யத்திலே ஈடுபட்டு இலயித்தது. மணக்கால் நம்பிகள் அரங்கனின் அவயவங் களை ஒவ்வொன்ருகக் காட்டி விவரிக்கவும் ஆளவந்தாருடைய சிந்தனை எப்பெருமானின் செம்பொன்னுடையின் மேல் சென்றது. அவரது உயிர் நான்முகப்புத்தேளை உயிர்த்த ஒண்கமலக்கொப்பூழில் ஒன்றியது; அரங் கனது உதரபந்தம் அவர் உள்ளத்தே உலவி யது; அவனது திருவார மார்பு அவரை அப் படியே அடிமையாக்கியது; அவனது செய்ய வாய் அவர் சிந்தையை ஈர்த்தது. எம்பெரு மான் திருக்கண்களை மணக்கால்நம்பிகள் குறிப்பிட்டுக் காட்டினுர். "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களை" ஆளவந் தார் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி நிறை வில் ஒன்றும் தோன்றவில்லை. எம்பெருமான் கார்த்தண்கமல கண்ணென்றும் அகவலையை ஆளவந்தார்மேல் ஒருங்கே பிறழவைத்தான். ஆளவந்தார் உள்ளம் என்னவெல்லாமோ செய்தது. முன்திடமாயிருந்த அவர் உள்ளம் பேதைமை யெய்தியது. இந்நிலையில் அவர் நிற்பதை ரஸித்து நோக்கிய மணக்கால் நம்பிகள் ஆளவந்தாரைத் தட்டி யுணர்த்தி "ஆளவந்தாரே. அரங்கனை அடிமுடியாக நன்ருக ஸேவியும். அந்த மங்கள விக்ரஹ கத்தை உளக்கண்ணுல் ஊன்றிப்பாரும்" என்ருர். ஆளவந்தாரும் அரவணையானைப் பாதாதிகேசம் படிப்படியாக ஊன்றி நோக் கினுர். அந்தக் கருமணியின் நீலச்சோதி வெள்ளத்திலே கால் பாவாமல் தத்தளித்தார். அவர் நெஞ்சம் அவர் வசமின்ருய் நிறை யழிந்து போயிற்று. அவருடைய ஆருயிர் அவன் அகவலையிலே பட்டது!

"ஊற்றுமாறு மணல்கேணி என்ன
உள்ளம் மடிந்து உருகி
சாற்றும் உரையும் தடுமாறி
தடக்கைகூப்பித் தாள்கூப்பி
போற்றி! அரங்க! நமோ!"

என்று அப்படியே பூமியிலே விழுந்தார்.

விழுந்தவர் கொஞ்சம் தேறி எழுந்து மீண்டும் அரங்கத்தரவணையானை அடிமுடியாக ஸேவித்தார். அவர் மனத்தில் ஒரு நிறை வெய்தியதை உணர்ந்தார். உணர்ந்ததுமே இந்த அழகுருவை இதுவரை காணாத அபாக்யவானாக இருந்துவிட்டோமே. எத்தனை நாட்களை வீணாக்கி விட்டோம் என்ற பச்சாத்தாபம் மேலிட்டது. நாள்கள் "பழுதே பலபலவும் போயின" என்று அஞ்சினார். இதுவரை வாணாளை வீணே கழித்து விட்டோமே. அதனால் நம் ஜன்மம் ஸாபல்யமாகாதே போய்விடுமோ என்ற அச்சம். அச்சமேலிட்டால் அதன் விளைவையுன்னியும் இதுவரை இழந்த இழவை எண்ணியும் உள்ளம் கரைந்து அழுதார். அழுகை அவர் மனத்திலுள்ள பயத்தை ஓரளவு கரைத்துக் கண்வழியே வெளியே கண்ணீராக உந்தியது. சற்றுத் தெளிவுற்றார். இழந்த இழவுதீர மீண்டும் அரங்கனை அணுகி நோக்கி அநுபவித்தார். மறுபடியும் அவ்வழகுக் கடலிலே ஆழ்ந்தார். கால் நிலைகொள்ளவில்லை. விழுந்தார் தொழுதார். தொழுதெழுந்தவர் அரங்கன் திருக்கண்களின் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் ஆகர்ஷக்கப்பட்டு அவனுடைய திருமேனி முழுதையும் பன்முறை ஸேவித்து அவ்வெழில் நீலமேனியிலே தன் நெஞ்சு நிறையைப் பறிகொடுத்தார்.

மணக்கால்நம்பிகளோ ஒன்றும் பேசாது ஆளவந்தார் இறைவன் ஸன்னிதியிலே மெல்லப் பக்குவமாவதை ரஸித்து நோக்கியிருந்தவர் கடைசியாக "என்ன யாமுனரியரே! தேவரீர் பிதாமகர் வைத்துப்போன நிதியைக் கைக்கொண்டீரோ?" என்று கேட்டார். மணக்கால்நம்பி அங்கு கூடவே நின்றதை அதுவரை உணராமலே அரங்கராஜனை அநுபவிப்பதில் ஈடுபட்டிருந்த ஆளவந்தார் அப்போதுதான் இந்நிலவுலக உணர்வு பெற்றார். உடனே ஸ்ரீமணக்கால் நம்பிகளின் திருவடிகளிலே விழுந்து வணங்கி ஸ்வாமீ! தேவரீர் செய்த மஹோபகாரத்துக்கு அடியேன் தலையல்லால் கைம்மாறிலேன். ஸ்வாமீ! இந்நிலையான செல்வத்தை அடியேனுக்குக் காட்டிக் கொடுத்தீரே!" என்று பல்வகையாக நம்பிகளிடம் தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். நிலையான செல்வம் மனத்திலே இடம்பெற்றுவிடவே அதன் சீர்ப் பெருக்குக்கே அவருள்ளம் இடம் காணாது சிறுத்தது. ஆகவே நிலையற்றவையான பிற செல்வங்களுக்கு அங்கு இடமேது? அவற்றைப்பற்றிய சிந்தனைகள் எல்லாம் அவருடைய புத்துணர்வுக்குப் பாதகங்களாகவே தோற்றின. அவற்றை அறவே நீக்கிவிடவேண்டுமென்ற துடிப்பும் அதிகரித்தது. எனவே அவர் மணக்கால்நம்பிகளை நோக்கி "ஸ்வாமீ! க்ஷேத்ராணி, மித்ராணி, தநாநி, நாத, புத்ராச்ச தாரா. பசவோ க்ருஹாணி, த்வத்பாதபத்ம ப்ரவணாத்ம வித்தோ பவுந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா; என்றபடி இந்நிலை பெற்றுய்வார்க்கு, பசு, மனைவி, புதல்வர், நண்பர், தனம், க்ருஹம், பூமி இவையெல்லாம் எதிரிடையன்றோ? ஆகையாலே அவற்றையெல்லாம் அறநீக்கி அவன் பணிக்கே என்னை அர்ப்பணித்துக்கொள்ள நிச்சயித்து விட்டேன். அதற்குரிய நிலைபேற்றை (ஆச்ரமப் ராப்தியை) அடியேனுக்கு தேவரீர் அருள வேண்டும் என்று வேண்டினார். மணக்கால் நம்பியும் பரமனருள் பாலிப்பதைக் கண்டு உளமகிழ்ந்தவராய் ஆளவந்தாருக்கு துறவு நிலை பெறுதற்குரியவற்றையெல்லாம் செய்தும் செய்வித்தும் அவரைச் சந்நியாசியாக்கினார். மணக்கால்நம்பியும் அவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து, பிரபத்தி நிஷ்டையையும் உபதேசித்து அவரை ஆசார்யனாகப் பிரகடனம் செய்ய ஆளவந்தாரும் நம்பெருமாள் ஸேவையிலே மிகவும் ஈடுபாடுடையவராய் எழுந்தருளியிருந்தார். மணக்கால் நம்பியும் இந்த தர்சனத்துக்குரிய யாவற்றையும் அவருக்கு அறிவிக்க ஆளவந்தாரும் அவற்றிலே ஊற்றமும் தேற்றமும் பெற்றவராய் தாம் பெற்ற பேறுவையமும் பெறுமாறு அவற்றை முறைப்படி பிரவசனம் செய்துவர அவர் புகழ் நாளுக்கு நாள் ஓங்கி நின்றது. அவர் பெருமையறிந்து அவர் திருவடிகளிலே,

"பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பேரருளில்
உரியதிருமலைநம்பி, ஓங்கும் அருளுடையாய்ச்சி
தெரிவரிய தெய்வத்துக் கரசுநம்பி, சீரமரும்
அரியை விடாதேத்து சிறுபுள்ளூர் ஆவுடைப் [பிள்ளை;

கோதிலாத கோமடத்துக் குலவு
திருவிண்ண கரப்பன்,
வேதம்வல்ல திருமாலையாண்டான்,
விளங்கும் ஈசாண்டான்,
ஓதுதெய்வ வாரியென உரைக்கும்
ஆண்டான், திருமோகூர்க் ....

காதும் வினைகள் அறக்கடிந்த அப்பன்,
கச்சி நம்பியொடும்,
வானமாமலையாண்டான், மாறனேரி மறுவறு
சீர்ப்புகழ்நம்பி, மாயவஞ்ச
ஊனமிலா ஆளவந்தாராழ்வார், பின்னும்
ஓங்குதிருமோ கூரில்நின்றார். குன்றா
மானமுடைத் திருக்குரு கூர்த்தாசர்,
மிக்கவகுளாபரணச் சோமாசியாரும்,
தேனமரும் தொடைத் தெய்வப்பெருமாள்,
அன்றித் தென்திருமாலிருஞ்சோலைத்
தாசர், "சீரார்"
"அன்புடை ஆட்கொண்டியம்மங்கி,
சீயராண்டான் மற்றவராதி
அனந்த மேலோர்"

பெரியநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய திருமலைநம்பி, அருளுடையாய்ச்சி, தெய்வத்துக்கரசுநம்பி, சிறுபுள்ளூராவுடைப்பிள்ளை, திருவிண்ணகரப்பன், திருமாலையாண்டான், ஈசாண்டான், தெய்வவாரியாண்டான், திருமோகூரப்பன், திருக்கச்சிநம்பி, வானமாமலையாண்டான், மாறனேர்நம்பி, ஆளவந்தாராழ்வார், திருமோகூர் நின்றார், திருக்குருகூர்த்தாசர், வகுளாபரணச்சோமாசியார், தேவப்பெருமாள், திருமாலிருஞ்சோலைத்தாசர், ஆட்கொண்டியம் மங்கி, சீயராண்டான் இவர்களும் கோவிந்த தாசர், நாதமுனிதாஸர் முதலியோரும் இன்னும் எண்ணில் பலரும் அடியாராய்ச் சேர்ந்தனர். அரசனாகிய சோழன் சோழனாண்டான் என்னும் திருநாமத்தோடு ஆளவந்தார் ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்தான். அவன் தேவியான திருவரங்கத்தம்மையும் ஆளவந்தார்க்கு அடிமைபூண்டாள்.

ஆளவந்தாரும் அவர்களுக்கு வேதசாஸ்திர விளக்கங்கள் எல்லாம் கூறி அனைத்துக்கும் மேலாக அனைத்து வேதங்களின் உண்மைகளையும் ஆய்ந்தெடுத்து இன் தமிழ்ப் பாமாலைகளாகத் தொடுத்து இறைவனடியிலே சூட்டி இன் கவிபாடும் பரமகவிகளான ஆழ்வார்களின் ஏற்றத்தையும் அவர்கள் அருளிய 'அருளிச்செயல்'களின் ஏற்றத்தையும் அவர்களுக்கு விளக்கியருள அவர்களும் அவற்றின் ஸாரமெல்லாம் அறிந்து அனுபவித்து அதிலேயே ஊறிய மனமுடையராய், அவ்வனுபவ வெள்ளம் உள்ளடங்காமல் பொங்கிவழிய ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்குத் தனியன் (புகழ்கூறும் தனிப் பாடல்) சாற்றியும், அவற்றின் பெருமைகளைப்பற்றி உபன்யாசங்கள் செய்தும் புகழ் பெற்றனர். ஆளவந்தாரின் கோஷ்டி மகிமையைக் கண்ட மணக்கால்நம்பி உள்ளடங்கா மகிழ்வெய்தி நாதமுனிகளின் திருவடிகளை மனத்திலே எண்ணி வணங்கினார்.

இப்படி ஆளவந்தார் கோஷ்டியும், அவரை ஆச்ரயித்தவர்களின் உபன்யாச முழக்கமும் நாளுக்குநாள் பெருகி வளர்ந்து வருகையில், ஒருநாள் மணக்கால்நம்பி ஆளவந்தாரை அழைத்து "யாமுனாரியரே! நம் பெருமாள் அருளாலும், உமது பிதாமகனார் நாதமுனிகளின் திருவடி பலத்தாலும் நம் தர்சனம் அகிலமெங்கும் புகழோடு பரவுமது காண மகிழ்கிறோம். ஆழ்வார்களின் ஈரத் தமிழ் அனைவருள்ளங்களையும் நனைக்கும்படி செய்த பெருமை உம்முடையதே. உம் பாட்டனார் உமக்கறிவிக்கும்படி நம்மிடம் சொல்லிப்போந்த எல்லா அர்த்தங்களையும் நாமுமக்கறியச் சொல்லிவிட்டோம். நீரும் அவற்றைப் பலவகையில் பெருக்கி உமது பிதாமகர் பெருமையை பன்மடங்காக்கிவிட்டீர். இன்னும் ஓரே ஒரு ரஹஸ்யம் (மறைப்பொருள்) உமது பாட்டனார் குருகை காவலப்பன் என்ற பெரியாரிடம் கூறிவைத்திருக்கிறார். அதனையும் நீர் கேட்டறிந்துகொள்ளுதல் நலம்" என்று கூறினார். ஆளவந்தாரும் "ஸ்வாமீ இவ்வளவு அர்த்தங்களையும் தேவரீரிடமும் தேவரீருடைய ஆசார்யரிடம் வைத்துப்போன என்பிதாமகனார் அவ்வொரு மறைப்பொருளை மட்டும் ஏன் விடுத்தார்? அதனை ஏன் பிறிதொருவரிடம் விட்டுச் சென்றார். அதனை அடியேன் அறியலாமோ?" என்று பணிவோடு கேட்டார். மணக்கால் நம்பியும் "ஆளவந்தாரே! உமது வினா சரியே! உமது பாட்டனார் குருகை காவலப்பனுக்கு அம்மறை பொருளை யருளியதுபோலவே எனதாசார்யரான உய்யக்கொண்டாருக்கும் அருளிச்செய்வதாகவே அவரை அழைத்தார். அவர் 'பிணம் கிடக்க மணம் புணரலாமோ. சரீரம் விடும் காலத்தே அனுபவிக்க அமையும்,' என்று கூறிவிட்டார். எனவே அம்மறைப் பொருள் அவருக்கும் நமக்கும் கிட்டாது போயிற்று. உமது பிதாமகனார் குருகை காவலப்பனையே உமக்கு அதனைக் கூறுமாறு நியமித்துள்ளமையின் நீர் அவரிடம் சென்று அதனை அறிந்துகொள்ளும்" என்றார். ஆளவந்தார் 'அப்படியே செய்கிறேன் ஸ்வாமீ! அந்த ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசம் எதுவோ?' என்று கேட்க நம்பிகள்

கங்கைகொண்ட சோழபுரத்திலே எழுந்தருளியிருக்கிறார்'' என்றார். ஆளவந்தார், திருமாளிகை எங்கோ என்ன நம்பிகள் அந்த ஸ்வாமி திருமாளிகையில் வாசம் செய்யவில்லை. கோயிலருகே ஒரு குகை போன்ற இடம் இருக்கிறது. அவர் நாட்டாரோடியல்வொழிந்து யோகத்திலே நாராயணனை நண்ணி அதே த்யானத்தில் எழுந்தருளியிருக்கிறார். போய் சேவித்து அர்த்தங்களை அறிந்துவாரும் என்று விடையிறுத்தார். ஆளவந்தாரும் கூடிய சீக்கிரம் கங்கை கொண்ட சோழபுரம் செல்வதாக ஒருப்பட்டார்.

இதன் பின் சிலகாலம் மணக்கால்நம்பி அர்த்த விசேஷங்களை அருளிச்செய்துகொண்டிருந்தார். ஆனால் அவர் திருமேனி இளைப்புற்று அந்திகாலம் நெருங்கிவிட்டதென்பதைக் காட்டியது. ஒருநாள் அவர் கனவிலே ஸ்ரீமந்நாதமுனிகள் எழுந்தருளி ''நம் யமுனைத் துறைவனிடம் அவனுக்குப் பின் நாட்டை யளித்துய்யச் செய்து நம் தர்சனத்தைப் பேணவல்ல ஒருவரைத் தேடிவைக்கச் சொன்னோம் என்பதைக் கூறி நாம் மிக விரும்பி மறைவிலே வைத்திருந்ததும் உய்யக்கொண்டார்மூலம் உம்மிடமிருப்பதுமான அந்தபவிஷ்யதாசாரிய விக்கிரகத்தை அவருக்குக் காட்டியருளும்'' என்றார். நம்பிகளும் தெண்டனிட்டு அடியேனுடைய ஆசார்யருடைய ஆக்ஞையும் அதுவே அடியேன் அதனை மறக்கவில்லை என்று விண்ணப்பித்தார். நாதமுனிகளும் ''யமுனைத்துறைவன் அந்த விக்கிரக வியக்தியை சாக்ஷாத்கரிக்க (நேரில் காண)ப் பெற்றானெனின் என் மனத் தாபம் நீங்கும்'' எனவுரைத்து மறைந்தார். மணக்கால் நம்பியும் மறுநாள் விடிவோரையிலே ஆளவந்தாரைத் தனியே அருகழைத்துத் தம் பக்கத்திலே இருத்திக்கொண்டு ''நாம் இப்போது சொல்வதை நன்கு கேட்டுக் கொள்ளும். நீர் நாதமுனிகள் திருமேனி சம்பந்தமும் பெற்றீர். திருவடி சம்பந்தியுமானீர். ஆகையால் அவருடைய திருவடிகளையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் நினைத்துப் போரவேண்டும். நமக்கு உம்முடைய சம்பந்தமிருந்தபடியால் அவர் என் அதிருஷ்டவசமாகக் கனவிலே சேவை சாதித்துத் தம் திருப்பவள வாய்திறந்து சில கூறி அடியேனைக் கடாக்ஷித்து ஆட்கொண்டார்'' என்றுரைத்தார். ஆளவந்தார் வியப்போடு நம்பிகளை நோக்கி ''அவர் திருவாய் மொழிகளை அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேன். அறியலாமோ?'' என்று வினவினர். மணக்கால் நம்பிகள் தாம் மறைவிலே வைத்திருந்த பவிஷ்யதாசார்ய விக்கிரகத்தைக் (முன் நாதமுனிகளுக்கு குருகூரிலே மாறன் அருளிய விக்ரஹம்) காட்டி, ''இதைத் தாம் விரும்பிய விஷயமென்று உமக்குக் காட்டி இதைத் தஞ்சமாகப் பற்றி நீரிருக்க வேண்டுமென்று உமக்குச் சொல்லும்படி நாதமுனிகள் நியமித்தருளினார். அதனால் இந்த அவதார ரகசியத்தை நீர் பேணிவந்து இவ்விக்கிரக வியக்தியை சாக்ஷாத்கரிப்பீர், அவரே நம் தர்சனத்தைப் பின்னால் பேணிப் பரப்புமவர்'' என்று கூறி அப்பவிஷ்யதாசார்ய விக்ரகத்தையும் அவர் பொறுப்பில் ஒப்புவித்தருளினார். ஆளவந்தாரும் மிகவும் உளம் மகிழ்ந்தவராய்த் தமக்குக் கிடைத்த பெரும் பேற்றுக்கு மணக்கால் நம்பிக்கு நன்றி தெரிவித்து எழுந்தருளினார்.

இது நிகழ்ந்த சில நாளிலே ஸ்ரீ மணக்கால் நம்பிக்கு மேல்வீடு தரப் பெரிய பெருமாள் திருவுள்ளம் பற்றவே, மணக்கால் நம்பிகள் ஆளவந்தாரை அழைத்து ''உமக்குப் பின் தர்சனத்தை வளர்ப்பாரைத் தேடி வையும் இது உமது பிதாமகர் நியமனம். அதைத் தலைக்கட்டிவைப்பது உமது கடமை. தவிர கோயிலை விடாது பேணி தீர்க்காயுசாயிரும்'' என்று ஆசிர்வதித்துத் தம்மாசார்யரான ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவடிகளைத் தியானித்துக்கொண்டே திருவடியில் சாய்ந்தார். ஆளவந்தார் தொடக்கமான ஸ்ரீபாதத்து முதலிகள் (முதலிகள் என்பது ஒரு ஆசார்யனிடம் நேரே சம்பந்தம் பெற்ற அடியார்களைக் குறிக்கும் வைணவ சம்பிரதாயச் சொல்) மிகவும் சோகமுற்றுப் பின் ஒருவழியாகத் தெளிந்து தேறினர். ஆளவந்தார் மணக்கால் நம்பிகளின் மாசற்ற சாமத் திருமேனியை பிரமமேத முறையாலே நற்கடனாற்றி மற்றும் செய்யவேண்டியவற்றை எல்லாம் செய்து முடித்தார்.

ஸ்ரீ மணக்கால் நம்பிகள் திருநாடலங்கரித்த சில நாட்கள் கழிந்தவாறே ஆளவந்தார் நம்பிகள் தம்மிடம் நியமித்திருந்ததை உளங்கொண்டு தம் ஸ்ரீபாதத்து முதலிகள் சிலரோடு குருகைகாவலப்பனை சேவிக்கத்

திருவுள்ளமாய், கங்கைகொண்ட சோழபுரம் சென்று சேர்ந்தார். அங்கே நம்பிகள் சொன்ன அடையாளப்படி குகைபோன்ற ஓரிடத்திலே குருகைகாவலப்பன் யோகத்திலே நிஷ்டையா யிருந்ததைக் கண்டு சேவித்தார். அவரது யோக நிஷ்டையைக் கலைக்கலாகாது என்று எண்ணியவர்களாய் ஆளவந்தாரும், முதலிகளும் குருகைகாவலப்பன் எழுந்தருளியிருந்த இடத்தருகே பின்புறமாக ஒரு சுவர் மறைவிலே ஒதுங்கி நின்று அவர் நிஷ்டை கலையும் நேரத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

இவர்கள் இங்ஙனம் மறைவிருந்ததைக் குருகைகாவலப்பன் தன் உள்ளுணர்விலே உணர்ந்தார். இறைவன் தன் செயல்கள் மூலம் அவரை உணர்த்தினர். உணர்ந்த குருகைகாவலப்பன் சட்டென்று பின்புறம் திரும்பி "இங்கு சொட்டைக்குலத்திலுள்ளார் யாரேனும் வந்திருப்பதுண்டோ? என்று வினவினர். உடனே ஆளவந்தார் மறைவிலிருந்து வெளிவந்து, குருகைகாவலப்பனை சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு வணங்கி, மிக விநயமாக, "ஸ்வாமீ! அடியேன் யமுனைத் துறைவன். தேவரீர் ஆக்ஞையை எதிர்பார்த்து நிற்கிறேன். அது நிற்க, அடியோங்கள் எவ்வித அரவமும் செய்யாது நின்றிருக்க தேவரீர் எவ்விதம் உணர்ந்தீர். அதுவும் வந்திருப்பது அடியேன் என்பதைத் தெரிந்தது எவ்வாறு? அடியோங்களுக்கு விளங்க வுரைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். குருகைகாவலப்பன் மந்தகாஸம் செய்தார்.

"கருமுகில் வண்ணன் என்னுள்
கலந்தநாள் கமலவல்லி
திருமுலைத் தடங்களாலே
சேர்த்துற அணைத்தாள் அன்னுள்
அருள்முகம் பாராதென்னே
டனுபவித்து ஒழுகிவாழுந்
பொருவிலா மாயன் முக்கால்
புண்ணியக் கொழுந்தே அன்னாய்!"

"பின்புநீ நிற்றலால் என்
பிடரியை மடக்கிப் பின்னே
இன்புறப் பார்ப்பான் மீண்டும்
இருப்பன்அக் கொழுவன் கண்ணன்
அன்ப! மற்றவைதான் சொட்டைக்
குலத்தவர்க் கன்றிச் செய்யான்
என்பதை அறிந்து அம்மேலோர்
எய்தினர் உளரோ என்றேன்"

அப்பா! புண்ணியத்தின் கொழுந்து போன்றவனே! கேள். நீலமேக வண்ணன் என்னுள்ளே குடிபுகுந்த அன்று நிகழ்ந்த நிகழ்ச்சி. என்னிடத்தே வந்துவிட்டால் தன்னை விடுவனே என்ற சங்கையால் அவனைத் தன் ஆலிங்கனத்தாலே பிடித்து வைத்துக்கொள்ளவேணும் என்று ஸ்ரீதேவி அவனை ஆரத் தழுவிக்கொண்டாள். ஆனால் அவன் பக்த பராதீனனல்லவா! திருமகள் செவ்வி மூகத்தையும் திரும்பிப் பாராதே என்னுள் வந்து புகுந்தான். அப்படி அவன் வந்து புகுந்த நாள்முதல் இருவரும் ஒருவரை ஒருவர் விடாது பற்றி வாழ்கிறோம். இவ்விதம் என் தொடர்பே தனக்கு மனக்குகந்த அநுபவமாகக் கொண்டு வாழும் அவன் இன்று என் பிடரியை வளைத்து என்னைக் குனியப்பண்ணி என் தோளின் பின்புறமாக எட்டிப் பார்த்து மீண்டான். இப்படி ஒரு தடவையல்ல மூன்று தடவை செய்தான். என்னையன்றிப் "பக்கம் நோக்கி யறியாதவன்" இப்படி மூன்று தரம் செய்ததும் எனக்கு விளங்கிவிட்டது. என்னினும் உன் பிதாமகனர் தோன்றிய சொட்டைக் குலத்திலுள்ளவர்பால் அவனுக்கு ஆதரம் அதிகம் என்று நான் அறிவேன். என்னைவிட்டுப் பிறரைப் பாராதபடி அவனை எனக்கே ஆக்கிக்கொண்டுவிட்டதாக என்னுள்ளே ஓரளவு இறுமாப்புடன் இருந்த என்னை ஒன்றிரண்டல்ல, மூன்று தரம் தலைகுனியப் பண்ணிப் புறம்பே அக்கள்வன் நோக்கினதுமே நான் உணர்ந்துகொண்டேன். 'சொட்டைக்குலத்திலுள்ளார் எவரேனும் வந்திருக்க வேண்டும் என்று அதனால்தான் கேட்டேன். இப்போது விளங்கிவிட்டதல்லவா? சரி வா! எப்போது வந்தாய்! என்னிடம் என்ன கார்யமாக வந்தாய். கோயிலில் எல்லாம் செவ்வனே நடந்தேறுகின்றனவா? என்றெல்லாம் பலபடியாக ஆளவந்தாரோடு அளவளாவிக் கேட்டார்.

(தொடரும்)

இறைபணியாளர் மாற்றம்

இறைபணியாளர் பெயர்		இறைபணியாளர் எந்தக்கோயிலுக்கு மாற்றப் பட்டிருக்கிறரோ அக்கோயிலின் பெயர்.
திரு. எஸ். சுப்பிரமணியம்	...	ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயில், அமைந்தகரை, சென்னை.
		,, ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில்,சென்னை.
திரு. எம். பழனியப்பன்	...	ஸ்ரீசங்கமேசுவரர் கோயில், கோட்டை, கோயம் புத்தூர்.
		,, கூப்பிடு விநயகர் கோயில், கோயம்புத்தூர்.
		,, கோனியம்மன்கோயில், கோயம்புத்தூர்.
திரு. சி. விசுவநாதன்	...	ஸ்ரீ அர்த்தநாரீசுவரர்கோயில், திருச்செங்கோடு.
		,, நஞ்சுண்டேசுவரர் கோயில், எடப்பாடி.
		,, இராஜகோவிந்தன் அறக்கட்டளைகள், திருச் செங்கோடு.
திரு. கே. நடராஜமாணிக்கம்	...	ஸ்ரீவிருத்தகிரீசுவரர் கோயில், விருத்தாசலம்.
திரு. சி. ஆர். திருநாவுக்கரசு	...	ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில், சவுந்த பாளையம்.
திரு. ஆர். என். இராதா கிருஷ்ணன்.		ஸ்ரீமார்க்கபந்துசாமி கோயில், விரிஞ்சிபுரம்.
		,, உத்திரரங்கநாதர் கோயில், பள்ளிகொண்டா.
		,, எல்லையம்மன்கோயில், வெட்டுவாணம்.
திரு. டி. ஏ. முருகேசன்	...	ஸ்ரீமருந்திசுவரர் கோயில், திருவான்மியூர்.
		,, அப்பர் சுவாமிகள் கோயில், மைலாப்பூர், சென்னை.
திரு. டி. என். உமாபதி	...	ஸ்ரீவில்வநாதசுவாமி கோயில், திருவலம்.
		,, வெங்கடேசப்பெருமாள் கோயில்.
		,, ஆதிகேசவப்பெருமாள் கோயில்
		,, மோநாதசுவாமி கோயில், பிரமமாபுரம்.
திரு. ஏ. கோபாலசுவாமி	...	ஸ்ரீ இராஜகோபாலசுவாமி கோயில், மன்னார்குடி.
திரு. டி. பி. வெங்கடாசலம்	...	சுவாமிநாதசுவாமி கோயில், சுவாமிமலை.
திரு. எல். வெங்கடாசலம்	...	வெங்கடாசலபதிசுவாமி கோயில், ஒப்பிலியப்பன் கோயில்.
திரு. ஆர். இராமசாமி	...	ஸ்ரீசுந்தரேசுவரர் கோயில் திருமயிலாடி.
		,, நாகேசுவரர் கோயில், சீர்காழி.

திரு. எம். ஆர். சீனிவாசன்	...	ஸ்ரீபாஸ்கரீசுவரர்கோயில், பருத்தியப்பர்கோயில்.
திரு. ஆர். முருகேசன்	...	ஸ்ரீ மத்தியார்ச்சுனேசுவரர் கோயில், பேட்டைவாய்த்தலை.
திரு. வி. கே. வேலுசாமி	...	ஸ்ரீசுவேதாரண்யீசுவரர்கோயில், திருவெண்காடு.
திரு. ஏ. ஏ. வெங்கடாசலம்	...	ஸ்ரீபிரம்மபுரீசுவரர் கோயில், அம்பல்.
		,, மகாகாளநாதசுவாமி கோயில், கோயில் திருமாகாளம்.
திரு. வி. என். சுவாமிநாதன்	...	ஸ்ரீகல்யாணரங்கநாதசுவாமி கோயில், திருநகரி.
		,, யோகீசுவரசுவாமிகோயில், யோகீசுவரம்.
திரு. எஸ். இலட்சுமணன்	...	புதுக்கோட்டை தேவஸ்தானம், புதுக்கோட்டை.
திரு. டி. என். பாஸ்கரன்	...	ஸ்ரீனிவாசப்பெருமாள்கோயில், நாச்சியார் கோயில்.
திரு. கே. சிவசாமி	...	ஸ்ரீரங்கநாதசுவாமி கோயில், முல்லாசாயிபுதெரு, சென்னை.
		,, அருணசலீசுவரர்கோயில், வரதராஜப்பெரு பெருமாள் கோயில், பள்ளியப்பன்தெரு, சென்னை.
திரு. எம். சி. பிள்ளை	...	ஸ்ரீஏகாம்பரேசுவரர்கோயில், செட்டிகுளம்.
		,, மதுரகாளியம்மன்கோயில், திருவாச்சூர்.
திரு. எஸ். எஸ். சம்பந்தம்	...	ஸ்ரீபாவா அவுஷதீசுவரர்கோயில், திருத்துறைப் பூண்டி.
		,, வர்த்தமானீசுவரர்கோயில், சேகல்.
		,, நன்னெறிநாதசுவாமி கோயில், தண்டலன் சேரி.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

சந்தாதாரர்களில் பலர் "திருக்கோயில்" (1961-62 ஆண்டு) சந்தா பணம் ரூ. 10/- இன்னும் செலுத்தவில்லை. இதுவரை பணம் செலுத்தாத சந்தாதார்கள் தயவு செய்து பணத்தை பண அஞ்சல் மூலம் அவ்வவ் வட்டார உதவி ஆணையருக்கு உடனே அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருவண்பரிசாரத் தலத்திற்கு நம்மாழ்வார் பாடிய பதிகத்தில் ஏழு செய்யுள்கள் அநுபவிக்கப்பட்டன. இனி, மற்ற பாசுரங்களை யநுபவிப்போம்.

8. என்றே யென்னை உன்னேரார்
 கோலத்திருந் தடிக்கீழ்
நின்றே யாட்செய்ய நீ
 கொண்டருள நினைப்பதுதான்
குன்றேழ் பாரேழ் சூழ்கடல்
 ஞாலம்முழு வேழும்
நின்றே தாவியநீள்
 கழலாழித் திருமாலே.

குலபருவதங்களேழையும் திவுகளேழையும் சூழ்ந்த கடல்களையும் ஏழுலகங்களையும் நின்ற நிலையிலே நின்று சுவாதீனப்படுத்திக் கொண்ட நெடிய திருவடிகளையுடைய பெருமாளே! சக்கரப் படையையுமுடைய திருமகள் கொழுநனே! அடியேனைத் தேவரீருடைய அழகிய திருவடிகளின் கீழே நிலைநின்று அடிமை செய்வேணும்படி தேவரீர் அங்கீகரிக்கத் திருவுள்ளம் பற்றுவது என்றைக்கோ? என்பது பதப்பொருள். இனி இதன் உட்கருத்தைக் கேண்மின்.

திருவண்பரிசாரத் திருமாலாகிய திருவாழ்மார்பனிடத்திலே தமக்காக ஒரு வாய்ச்சொல்கூடச் சொல்லுவாரில்லையே! என்று கிலேசப்பட்டார் முந்தின பாட்டிலே. 'பிறர் கதையிருக்கட்டும், எம்பெருமான் றன்னையே கேட்போம்' என்று துணிந்து 'பிரானே! உன் திருவடிக் கீழேயிருந்து நிச்சலும் மங்களாசாசனம் பண்ணுகைக்கு நிலையாளாக என்னைக்கொள்வது என்றைக்கு?' என்று எம்பெருமானையே முன்னிலையாக்கிக் கேட்கிறார். இவர் கேட்கத் தொடங்குவதற்கு முன்னமே எம்பெருமான் புன்முறுவல் செய்து ஆபிமுக்கியம் தோற்ற நிற்கையாலே நாம் எது விரும்பினாலும் எம்பெருமான் நிறைவேற்றக் குறையிராதென்று துணிந்து கொண்டாராழ்வார்; அதனால், பிரானே! என் கோரிக்கையை நீ நிறைவேற்றுவதில் தடையிராது; அதுபற்றிக் கவலையில்லை; அப்படி நிறைவேற்றுவது என்றைக்கு? என்பதொன்றே தெரியவேண்டுவது என்கிறார். ஆகவே பாசுரத்தின் தலையிலுள்ள என்றே? என்னுஞ் சொல்லே இங்கு உயிரானது. பெருமானே! நீ அனுக்கிரகஞ் செய்வதில் ஐயமில்லை; அஃது என்றைக்கு? என்பதுதான் தெரியவேண்டுமென்கை. அந்த நாளைக் குறிப்பிடலாகாதோ வென்கிறார்.

ஆழ்வீர்! எதற்கு நான் நாள் குறிப்பிட வேணுமென்று எம்பெருமான் வினவ, என்னையுன் ஏரார் கோலத்திருந்தடிக்கீழ் நின்றே யாட்செய்யக் கொண்டருள நீ நினைத்திருக்கும் நாளைக்குறிப்பிட வேணுமென்கிறார். என்னை என்று வாயால்மட்டும் சொல்லுகிறாரல்லர்; தம் உடலையும் படியெடுத்துக் காட்டுகிறார்; ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னியிருந்து உனக்கு அநவரதம் மங்களாசாசனம் பண்ணி யல்லது தரித்திருக்க மாட்டாத எனது நிலைமையைப்பாராய்; உள்ளுள்ள ஆசை வடிவிலே தோன்றவில்லையா உனக்கு? உற்றுப்பாராய் பெருமானே! என்கிறார்.

உன் ஏரார் கோலத்திருந்தடிக்கீழ்:—உனது திருவடிகளின் இனிமையை நினைத்துக் கொண்டால் அத்திருவடிகளின் நிழலும் ரேகையுமாக இருப்பதன்றி, தனிப்பட ஒரு பொருளாக இருக்க என்னாலாகுமோ? என்று காட்டுகிறபடி. திருவடிகளுக்கு 'ஏரார் கோலம்' என்றும் 'திருந்து' என்றும் இரண்டு அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. "ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம்" என்றபடியே திவ்வியாயுத சின்னங்கள் பொருந்தியிருக்கப் பெற்றமை கொண்டு ஏரார்கோலமென்றது. திருந்து என்றது அடியார்களைத் திருத்திப் பணிகொள்ள வல்லமையைச் சொன்னபடி; அதாவது, அற்ப பலனை நச்சி வந்து பணிந்தவர்களையும் எம்பெருமான் தன் திருவடிகளின் போக்யதையிலே யீடுபடுத்தி வேறு பலன்களில்விருப்பத்தை மறக்

கும்படி செய்கையாம். பகவத்கீதையில் கண்ணபிரான் கூறின வார்த்தையொன்றுண்டு—"கர்மண்யேவ அதிகாரஸ்தே மாபலேஷு கதாசந" என்பது. அவரவர்கள் செய்யவேண்டிய கருமத்தைச் செய்யவேண்டுமேயொழிய, பலனை ஒருபோதும் விரும்பக்கூடாதென்பது இதன் கருத்து. கருமங்களைச் செய்பவர்கள் பலனை விரும்பினால் என்ன பிசகு? ஒரு பலனுக்காகத்தானே கருமஞ் செய்வது; செய்பவனுக்குப் பலனில் விருப்பம் விளைந்தால் என்ன பாதகம்; என்று கேள்வி பிறக்கும். கேண்மின்; நம்முடைய புத்தி அற்பமாகையாலே அற்ப பலனைத்தான் விரும்பத் தெரியும் நமக்கு; நம்முடைய ஹிதங்களையறியும் எம்பெருமான் தானே பலன்கொடுக்கும் பணியை வைத்துக்கொண்டானாகில் அவனதருளால் நமக்கு மிகச் சிறந்த பலன் கிடைக்கத் தட்டில்லை; இதற்காகவே 'பலனை நீ விரும்பாதே' என்று பகவான் சொல்லிவைத்திருப்பது. அப்படியாரேனும் அற்ப பலனை விரும்பினாலுங்கூட திருவடிகள் அவர்களைத் திருத்திப் பணிகொள்ளுமென்கிறது இங்கு.

இத்தகைய திருவடிகளின் கீழே, நின்றே யாட்செய்ய நீகொண்டருள நினைப்பது என்றே? என்று வினவுகின்றார். இந்த வினாவில் மிகச் சிறந்ததொரு நூற்கொள்கை விளங்கும். (அதாவது) எம்பெருமான் திருவடிகளில் நாமாக அடிமை செய்யப்புகுவது தகுதியன்று; ஆனைகிடக்க அதன் மேலே நாமாக ஏற நினைத்தால் என்னாகும்? யானைப்பாகனுடைய அனுமதியின்றியே ஏறலாகாதன்றோ. அதுபோல பெருமானுடைய அனுமதி கொண்டே நாம் தொண்டு செய்ய வேணுமென்பது நூற்கொள்கை. இவ்வாழ்வார் தாமே "ஏவ மற்ற மரராட் செய்வார்" என்றருளிச் செய்தது குறிக்கொள்ளத்தக்கது. ஸ்ரீ ராமாயணத்தில் "க்ரியதாமிதி மாம் வத" என்று சொல்லி இளையபெருமாள் காட்டின சாஸ்த்ரார்த்தமிது. அது தோன்றவே "நீ கொண்டருள நினைப்பது என்றே?" என்கிறாரிங்கு. நின்றே யாட்செய்கையாவது நிலை நின்று ஆட்செய்கை. 'உட்கார்ந்துகொண்டு ஆட் செய்யலாகாது, நின்றுகொண்டே ஆட் செய்யவேணும்' என்கிறதன்று. நின்று என்பதற்கு நிலைநின்று என்று பொருள். அற்ப பலனை விரும்பி ஆட்செய்தால் அப்பலன் கை புகுந்ததும் அகன்றொழிய நேரும். அடிமை செய்கையையே பலனாகக்கொண்டால் நிலை நின்று அடிமை செய்யலாகுமென்க.

இங்ஙனே ஆழ்வார் வினவவும் எம்பெருமான் இதற்கு மறுமொழியொன்றும் கூறிற்றிலன்; இதற்கு என்ன காரணமிருக்குமென்று ஆழ்வாராராய்ந்தார். 'கருமயோகம் ஞானயோகம் பக்தியோகம் முதலிய ஒரு வகையுபாயத்திலும் தொடர்பு அற்றவுமக்கு நான் என்ன மறுமாற்ற முரைப்பது!' என்றிருந்தானெம்பெருமான் என்று கொண்ட ஆழ்வார் குன்றேழ்பாரேழென்று தொடங்கிப் பின்னடிகள் கூறுகின்றார் எம்பெருமானுக்கு சமாதானமாக. பிரானே! தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டாயே! (அதாவது) சிறியார் பெரியாரென்னும் வாசியின்றியே எல்லார் தலையிலும் திருவடியை வைத்தருளினையே ஒரு காலத்தில், அது யாரிடத்தில் என்ன கைம்முதல் கண்டு செய்தது? என்று எம்பெருமானை நோக்கிக் கேள்வி கேட்கிறார்போலும். பெருமானே! நீ திருவண்பரிசாரத்தி லெழுந்தருளியிருக்கிற விருப்புக்கே நான் பரியவேண்டியிருக்க, அதற்கு மேலே அதிமாநுஷமான செயலையும் நீ செய்தருளினால் நான் பரியாதிருக்க முடியுமோ? என்னுங் கருத்தினால் உலகளந்த சரிதையை யெடுத்துரைக்கின்றார் என்றுங் கொள்ளலாம். கையுந் திருவாழியுமான திருமாலே! ஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டு கல்லுங்கரடுமான பூமியை நீயளந்த சிரமம்தீர நான் உன் திருவடிகளைக் கிட்டி உபசாரம் பண்ணப்பெறும் நாள் என்று கொல்? என்று கேட்டாராயிற்று...

9\. திருமால்! நான்முகன் செஞ்சடை
யானென் றிவர்கள், எம்
பெருமான் தன்மையை
யாரறிகிற்பார் பேசியென்?
ஒருமாமுதல்வா! ஊழிப்பிரான்!
என்னையாளுடை
கருமேனிய னென்பன்
என்காதல் கலக்கவே.

திருமாலே! பிரமனென்றும் உருத்திரனென்றும் சொல்லப்படுகிற விவர்களில் யார்தாம் எம்பெருமானான வுன்னுடைய ஸௌளகுமார்யப் பெருமையை அறியவல்லார்? இது சொல்லி என்ன பயனுண்டு? ஒப்பற்ற ஸகல

ஜகத்காரண பூதனானவனே! ஸர்வஸ்வாமியே! என்னுடைய பிரேமமானது நெஞ்சைக்கலக்க 'என்னை யடிமைகொண்ட கரிய கோலத் திருவுருவனே!' என்றிவ்வளவே யன்றோ நானுஞ் சொல்லவல்லேன் - என்பது பதப்பொருள். இனி விசேஷவுரை கேளீர்.

கீழ்ப்பாசுரங் கேட்ட எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! நமக்குப்பரிந்து காப்பிடவேண்டுமென்று மவா உமக்குள்ளது என்பதை நன்கறிந்துகொண்டேன்; நமக்குப் பரிவார் பலருண்டே; பிரமன் முதலான தேவர்கள் பலருளரே; அப்படியிருக்க, நீர் ஏதுக்குத் துடிக்கிறீர்?' என்று கேட்டான். அதற்கு ஆழ்வார் சொல்லுவது; பிரானே! பிரமன் முதலானோருளரென்பதை நானறியேனோ? அவர்கள் உன்னுடைய ஸௌகுமாரத் தன்மையை அறியப்பிறந்தவர்களோ? என்று.

இப்போது ஆழ்வார் திருவண்பரிசாரத் தெம்பெருமானுடைய ஸௌகுமார்யத்தி லீடுபட்டன்றோ துடிக்கிறார்; இந்தத் துடிப்பு மற்று யார்க்கும் இராதென்பது ஆழ்வாருடைய உறுதி. எம்பெருமான் பராத்பரன், பரமகாருணிகன், ஸகல ஜகத்காரணபூதன் என்று இவை முதலான பெருமைகளை யறிந்திருப்பார் பலர் இருக்கலாம்; அவன்பரமஸௌகுமாரன் என்பதை யறிந்திருப்பார் ஒருவருமிலர் என்று ஆழ்வார் கருதியிருப்பது ஸத்தியமானதே. இரண்டாமடியில் தன்மை என்ற சொல்லால் ஆழ்வார் நினைப்பது ஸௌகுமாரத் தன்மையையேயாம். மெய்யன்பர்களின் வயிற்றெரிச்சலுக்கு உறுப்பானது அதுவேயன்றோ? "யாரறிகிற்பார்?" என்றவுடனே "பேசி என்?" என்றது வெகு சாதுரியமான வார்த்தை. பகவானுடைய மற்ற பெருமைகளை உபதேசத்தாலே அறிந்து கொள்ள முடியும்; அவனுடைய ஸௌகுமார்யப் பெருமை மட்டும் உபதேசங் கொண்டு அறியக்கூடியதன்று; அந்த அறிவு ஏதோ ஜன்மாந்தர பாக்யவசத்தாலே உண்டானால் உண்டாகக்கூடுமே யொழிய ஒருவர் சொல்லிக்கொடுக்க அதனாலுண்டாகக்கூடியதன்று; ஆகவே [பேசி என்?] இதைப்பற்றி நாம் பேசுவதில் என்ன பயன்? என்றவாறு.

இங்ஙனே சொன்ன ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! அவர்கள் நம்மை யறியமாட்டார்களென்பது கிடக்கட்டும்; அறிந்த நீர் பேசிக்காணீர்' என்று கூற, என்னால்தான் பேசலாயிருந்ததோ வென்கிறார் பின்னடிகளில். நான் பேசக்கூடியதும் 'ஒருமா முதல்வனே! ஊழிப்பிரானே! என்னையாளுடைக் கருமாமேனியனே!' என்றிவ்வளவேயன்றி வேறு என்ன பேசவல்லேன்? உன் ஸௌகுமார்ய மறிந்து பேசவல்ல திறமை எனக்குத்தானுண்டோ? என்றாராயிற்று.

10. கலக்கமில்லா நற்றவமுனிவர்
கரைகண்டோர்
துளக்கமில்லா வானவரெல்லாம்
தொழுவார்கள்
மலக்கமெய்த மாகடல்தன்னைக்
கடைந்தானை
உலக்கநாம் புகழ்கிற்பது
என்செய்வதுரையீரே.

ஸம்ஸாரக் கலக்கமற்ற நல்ல தபஸ்விகளான ஸநகர்ஸநந்தனர் முதலிய முனிவர்களென்ன, ஸம்ஸாரத்தைக்கடந்து அக்கரை சென்ற முக்தர்களென்ன, ஒருகாலும் ஸம்ஸார ஸம்பந்தமடையாத நித்யஸூரிகளென்ன, ஆகிய இவர்களெல்லாரும் பரிவு பூண்டு மங்களாசாஸனம் பண்ணுமவர்களாயிரா நின்றார்கள்; தேவர்கட்கு அமுதமளிக்கக் கடலைக் கலக்கிக் கடைந்த பெருமானை அற்பரான நாம் ஒரு முடிவுகண்டு புகழ்ந்தோமாவது கைகூடுமதோ? சொல்லுங்கள் என்பது பதப்பொருள். விசேஷவுரை கேளீர். இப்பதிகம் முழுவதாலும் ஆழ்வார் தெரிவித்த அர்த்தமென்ன? என்று பார்ப்போமாயின், ஐயோ! எம்பெருமானுடைய ஸௌகுமார்யமறிந்து அதற்குத் தக்கபடி பரிவாரில்லையே! என்று தமக்குண்டான அச்சத்தையும் துயரத்தையுமே தெரிவித்தாராயினர். அவ்வச்சத்தையும் துயரத்தையும் தவிர்க்கைக்காக எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! நமக்கு ஸநகாதிகளான முனிவர்கள் முக்தர்கள் நித்யஸூரிகள் கிட்டிநின்று பரிகின்றார்கள்; அது தவிர நாமும் அரிய பெரிய செயல்கள் செய்யவல்லோமாயிருக்கின்றோம், ஆகவே நமக்குப் பிறர் பரிந்து ஆகவேண்டிய தொன்றுமில்லை காணும்' என்றருளிச்செய்ய, ஆழ்வார் ஒருவாறு அச்சமும் துயரமும் தீர்ந்து, எம்பெருமான் சொன்ன அந்த நன்மொழிகளைத் தாம் அநுஸந்தித்து இனியராகிறார் இப்பாட்டில்.

'இவ்விஷயம் ஆழ்வார்க்கு முன்பே தெரியாதோ? எம்பெருமானுணர்த்தித்தானே இது தெரிந்துகொள்ள வேண்டும்?' என்று சிலர் கேட்கக்கூடுமென்று இங்கே ஈட்டில் நம்பிள்ளை யருளிச்செய்வது பாரீர்—"இவர் தமக்கு இன்னபோது இன்னது பயஹேது வாம், இன்னபோது இன்னது பரிஹாரமாம் என்று தெரியாதிறே" என்று. இத்தல், எம்பெருமான் திறத்தில் ஆழ்வார்க்கு அச்சமுண்டாகிற வழியும் அது பரிஹாரமடைகிற வழியும் நம்போல்வாரால் அறிய முடியாதவை என்றதாயிற்று.

பாட்டின் இரண்டாமடியின் முடிவில் "தொழுவார்கள்" என்பது மங்களாசாஸனம் பண்ணுவார்களென்ற பொருளில் பிரயோகிக்கப்பட்டது. இங்ஙனே மங்களாசாஸன பரர்கள் குறையற்றிருக்கும்போது நமக்கென்ன பணியென்று தலைக்கட்டினாராயிற்று.

11. உரையா வெந்நோய் தவிர
அருள்நீண் முடியானை
வரையார் மாடமன்னுகுரு
கூர்ச்சடகோபன்
உரையேய் சொற்றொடை
ஓராயிரத்துளிப்பத்தும்
நிரையேவல்லார் நீடுலகத்துப்
பிறவாரே.

இப்பதிகம் கற்பார் எம்பெருமானுடைய தனிமை கண்டு அஞ்சவேண்டும் நிலமான ஸம்ஸாரத்திலே பிறவாரென்று பயனுரைத்துத் தலைக்கட்டின பாசுரமிது. திருக்கல்யாண குணங்களே வடிவெடுத்தவனான எம்பெருமானுக்கு என் வருகிறதோவென்று அஞ்சுமது லோகவிலக்ஷணமான நோயாகையாலே உரையா வெந்நோய் எனப்பட்டது. வாய்கொண்டு சொல்லவொண்ணாதபடி வெவ்விதான நோய் என்றபடி. இந்நோய் தவிரும்படி அருள் செய்தனனும் எம்பெருமான். அவ்வருளை அவன்றான் எப்படி காட்டினான்? வாய்விட்டு ஏதேனும் அருளிச்செய்தானோவென்ன, இல்லை; அங்ஙனே அருள்செய்தமை தோற்றத் திருமுடியை அசைத்தானென்பார் "அருள்நீண் முடியானை" என்றார்.

மலைநாட்டுத் திருப்பதி யனுபவத்தில் திருவண்பரிசாரத் திருப்பதி யனுபவம் முற்றுப்பெற்றது.

அடுத்த இதழில் திருவாட்டாற்றுத் திருப்பதி யனுபவம் நிகழும்.

(தொடரும்)

சென்னை :—வடபழனி ஆண்டவர் கோயிலில் 5—6—62ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் கோவை திரு. கு. நடேச கவுண்டர் அவர்கள் தாம் இயற்றிய "சுவாமிநாத சுவாமி பிள்ளைத்தமிழ்" என்னும் நூல்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

மதுராந்தகம் ;—கோதண்டராமசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—6—62 முதல் 25—6—62 வரை நடைபெற்றது.

மன்னார்குடி :—இராஜகோபாலசுவாமி கோயிலில் தெப்போற்சவம் 10—6—62 முதல் 19—6—62 வரை நடைபெற்றது.

திருவாமாத்தூர் :—கௌமார மடாலயம் - மகான் வண்ணச்சரபம் - திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள் என வழங்கும் அருட்பெருந்திரு தண்டபாணி சுவாமிகளது 64-ம் ஆண்டு நிறைவுக் குருபூசை கும்பாபிஷேக விழா 21—6—62ல் நடைபெற்றது.

பட்டீச்சரம்:—தேனுபுரீசுவரசுவாமி திருச்சத்திமுற்றம் சக்திவனேசுவரசுவாமி தேவஸ்தானங்களில் முத்துப்பந்தல் உற்சவம் 13—6—62 முதல் 15—6—62 வரை நடைபெற்றது.

சோழவந்தான் :—பிரளயநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[திரு. மாணிக்கவாசக அடிகள், தஞ்சை]

திருஞானசம்பந்தர், சிவகிரியையின் சிறப்பைப் பற்பல திருப்பதிகங்களிற் பல படியாக வற்புறுத்தி யருள்வதைத் திருமுறைப் பாராயணம் புரிவோர் நன்குணர்வர். திருவாளொளிப்புத்தூர்த் திருப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாடலும் முடிவில், மாமலர் தூவி வழிபடுதல் வேண்டும் என்று குறிக்கின்றது. கிரியைகளுட் சாலச்சிறந்தது மலர் தூவி வழிபடுவதாகும். அதுவே திருவடியைச் சேர்விப்பது என்னும் உண்மையை நாயன்மார் எல்லாரும் தத்தம் வாழ்க்கையிற் காட்டியருளினர்.

1. 'கடிகமழ் மாமலர் இட்டுக் கறைமிடற்றான் அடி காண்போம்'

2. 'விரைகமழ் மாமலர் தூவி விரிசடையான் அடி சேர்வோம்'

3. தாள்நெடு மாமலர் இட்டுத் தலைவனதாள் நிழல் சார்வோம்'

4. 'கார்இடு மாமலர் தூவிக் கறைமிடற்றான்அடி காண்போம்'

5. 'இனமலர் ஏய்ந்தன தூவி எம்பெருமான் அடி சேர்வோம்'

6. 'தளை அவிழ் மாமலர் தூவித் தலைவனதாளினை சார்வோம்'

7. 'தடமலர் ஆயின தூவித் தலைவனதாள்நிழல் சார்வோம்'

8. 'சயவிரி மாமலர் தூவித் தாழ்சடையான் அடி காண்போம்'

9. 'விரிமலராயின் தூவி விகிர்தனசேவடி சேர்வோம்'

10. 'தொண்டர்கள் மாமலர் தூவித் தோன்றி நின்றானடி சேர்வோம்'

என இவ்வாறு ஒருமுறைக்குப் பத்துமுறையாக வற்புறுத்தும் அளவு இன்றியமையாததும், உயரியதும் ஆன சிவகிரியை இச் சிவபூஜையே என்று இத் திருப்பதிகத்தால் அறியலாம்.

இங்குக் காட்டிய திருவடிபத்திலும் மலரிடுதல்,மலர் தூவுதல், அம்மலர்கள் ஏய்ந்தனவாதல், இனமாதல், மணம்கமழ்தல், நெடுந்தாள் உடைமை, தளை அவிழ்தல், அவற்றை இட்டும் தூவியும் வழிபடுவோர் தொண்டர் ஆதல், அத்தொண்டர்க்கு அவ்வழிபாட்டின் பயனாக வாய்ப்பது திருவடிசேர்தல் ஆகிய பேரின்பப் பேறு, அதுவே 'பூவார் மலர்கொண்டு அடியார்' தொழும் சிவகிரியைக்கு முடிந்த பெரும்பயனாதல் முதலிய பல உண்மைகள் உணர்த்தப்பட்டன. திருவடிக்காட்சியும், சேர்வும், சார்வும் ஆகிய பயனுக்கு மாமலர் இடுதலும் தூவுதலும் ஆகிய சிவகிரியை ஏதுவாதலை இத்திருப்பதிகம் வற்புறுத்திற்று. இதனை உணர்வோர் சிவ பூஜையை மேற்கோண்டு செய்து இம்மை நலங்களையும், மறுமைப் பயன்களையும், வீட்டின்பத்தையும் பெறக்கடவர். புறவழிபாடு செய்ய இயலாதவர் அகவழிபாடு செய்யப் பழகி இப்பயனை எய்துவதும் ஆகமவிதியில் அடங்குவதாதலின், அவ்வக வழிபாட்டைச் செய்து வருதல் சைவர்க்குத் தலையாய கடனாகும்.

திருவாடானைத் திருப்பதிகத்தில் நம் காழிவேந்தர், 'போதினாற் புனைந்து ஏத்துவார்தமை வாதியா,வினை; மாயுமே;' 'தோடுலா மலர் தூவிக் கைதொழ வீடும் நுங்கள்வினைகளே'; தம்கையால் தொழுது ஏத்த வல்லவர் மங்கும்நோய்; பிணிமாயுமே'; 'வண்ணமாமலர் தூவிக் கைதொழ எண்ணுவார் இடர் ஏகுமே'; 'கையணி(ம்) மலரால் வணங்கிட வெய்ய வல்வினை வீடுமே'; 'தேன்அணி(ம்) மலரால் வணங்கிட ஊனம் உள்ள ஒழியுமே'; 'நலங்கொள்மாமலர் தூவி நாள்தொறும் வலங்கொள்வார் வினை மாயுமே'; 'கந்தமாமலர் தூவிக் கைதொழும் சிந்தையார் வினை தேயுமே'; 'ஆடானை[illegible]உறையும் ஈசனை ஏத்தத் தீவினைபறையும்; நல்வினை பற்றுமே'; 'தூய மாமலர் தூவிக் கைதொழத் தீய வல்வினை தீருமே'; என்று

சிவ பூஜையால் எய்தும் நலங்களுள் முதன்மையுற்ற வினை நீக்கம் உறுதியாக உணர்த்தப்பட்டது. வினைத்தீர்வே உயிர் கட்கு முதலாகக் கொள்ளத்தக்க குறிக்கோள்.

சிவபூஜையை எப்பொழுதும் செய்யலாம். 'அந்தி அமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்' 'மறைக்காட்டு இரவும் எல்லியும் பகலும் ஏத்துதல் குணம் எனலாமே' 'இலையார் மலர் கொண்டு எல்லி நண்பகல் நிலையாய் வணங்க நில்லாவினைகளே' 'காலம்பெற மலர்நீரவை தூவித் தொழுது ஏத்தும் ஞாலம்புகழ் அடியார் உடல்உறுநோய் நலியாவே' 'காலை நன்மாமலர் கொண்டடி பரவிக் கைதொழு மாணியைக் கறுத்த வெங்காலன் ஓலமிட முன் உயிருமாடுமாள உதைத்தவன் உமையவள் விருப்பன் எம்பெருமான்' 'கையின் மலர்கொண்டு நலகாலையொடுமாலை கருதிப் பலவிதம் வையகம் யொம் கருவி நின்று தொழுது ஏத்தும் எழில் வைகாவிலே'; இவற்றுல் எப்பொழுதும் சிவபூஜை செய்யலாம் எனல் விளங்கிற்று. 'துஞ்சலும் துஞ்சல் இலாதபோழ்தினும் நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும் வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்தகூற்று அஞ்சு உதைத்தன அஞ்செழுத்துமே' என்றதால் திருவைந்தெழுத்து வழிபாட்டிற்குக் கால வரையறையே இல்லை என்பது தெளிவாயிற்று.

'நனவினும் கனவினும், நம்பா!, உன்னை மனவிலும் வழிபடல் மறவேன்' உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின் ஒண்மலரடியலால் உரையாது என்னா.'

'நனவிலும் கனவிலும் நாளும் தன் ஒளி நினைவிலும் எனக்குவந்து எய்தும் நின்மலன்' என்பவற்றை எண்ணிப்பார்த்தால், கடவுள் வழிபாட்டிற்குக் கால வரையறையே இல்லை என்பது வெள்ளிடைமலையாம். எப்போதும் வணங்கும் இயல்பு எல்லார்க்கும் வாய்த்தல் அரிது. அதனுல், நாற்போது, முப்போது, இருபோது, ஒருபோது என்னும் காலவரையறை கொள்ளலாயினர். நாற்போது ஞானிகளுக்குரியதாயிற்று. 'முனையார் மதியம்சூடி என்று முப்போது இனையாது ஏத்த இருந்தான் எந்தையூர்......வெண்காடே' 'தொடையார் மாமலர் கொண்டு இருபோது உம்மை அடைவாராம் அடிகள்' 'பொடிகள் பூசிப்பலதொண்டர்கள் கூடிப் புலர் காலையே ஒருபோது அடிகள் ஆரத் தொழுது ஏத்த நின்ற (வ்) அழகன் இடம் ......மதிமுத்தமே' என்னும் ஒருபொழுது இருபொழுது முப்பொழுது ஆகும் வரையறை அமைந்தது. (தொடரும்)

மதுரை:—திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தைச் சேர்ந்த பன்னத்தெரு பன்னகா பரமேஸ்வரப் பெருமாள் ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 14—6—62ல் நடைபெற்றது.

மாதர்வேளூர்:—மாதலீசுவரசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

சிதம்பரம்:—நடராஜமூர்த்தியின் ஆனித்திருமஞ்சன மகோற்சவம் 29—6—62 முதல் 8—7—62 வரை நடைபெறும்.

திருநெல்வேலி:—சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆனிப் பெருந்திருவிழா 6—7—62ல் ஆரம்பமாகின்றது. 14—7—62ல் பெருந்தேர்விழா நடைபெறும். விழாவில் தினந்தோறும் மாலையில் வசந்தமண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

உடுமலைப்பேட்டை:—விஸ்வநாதர் கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21—6—62ல் நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்:—கிருஷ்ணசுவாமி கோயிலில் தெப்பத்திருவிழா 17—6—62ல் நடைபெற்றது.

சிவஞானபோதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

ஐந்தாம் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி:—கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளது. [கண் படில்—கண்படுதற்கண், உறங்கும்போது.]

(ஆ) வார்த்திகம்:—இனிக் கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவுளதென்றது. ஓடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின், ஓடுங்காத விடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

குறிப்பு:—இது சூத்திரப் பகுதியின் பொழிப்புரை. இதன்கண் பிரகிருதி என்றது பருவுடம்பை.

பிராணவாயு தவிர எஞ்சியுள்ள ஐம்பொறிகள், அந்தக் கரணங்கள் முதலிய கருவிகள் செயலற்று ஓடுங்கி நிற்கும் நிலையே உறக்கம் எனப்படுவது. அவ்வுறக்க நிலையில் உடம்பின்கண் புறப்பொருள்கள் பற்றிவரும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் அதற்கு வேண்டிய அசைவும் இல்லை; நனவின்கண் அவை உள்ளன. பிராணவாயு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் என்னும் நான்கு நிலைகளிலும் ஒரு படித்தாகப் புறம்போந்தும் உள் அடங்கியும் இயங்குதலின், அஃது உடம்பை இயக்கி இன்பத்துன்ப நுகர்ச்சி எய்தும் ஆன்மா ஆகாது—என்பது கருத்து.

(இ) 1. தன்னுற் கூறப்படும்பொருள்:—உடம்பைச் செலுத்திப் புறத்து விடயங்களான்வரும் இன்பத்துன்பங்களை நுகர்வதாகிய ஆன்மாப் பிராணவாயுவின் வேறும்.

2. ஐயப்பாடு:—ஆன்மாவாவது பிராணவாயுதானோ அன்றோ என்பது.

3. இங்குப் பிறர் கூறும் பக்கம்:—பிராணவாயுவே ஆன்மாவாம்; அதற்கு உயிர்த்தல் பற்றி உயிர் என்ற பெயரும் உள்ளது. ஐம்பொறிகளின் தொழிற்பாடும் சூக்குமவுடம்பின் தொழிற்பாடும் நனவு, கனவு என்னும் நிலைகளினன்றி உறக்கம் பேருறக்கம் என்னும் நிலைகளில் இல்லை. ஆதலால் அவை ஆன்மா அல்ல என்றல் பொருந்தும். பிராணவாயு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் என்னும் நான்கு நிலைகளிலும் புறம்போந்தும் உள்புக்கும் தொழிற்படுதலின், அதுவே பருவுடல், ஐம்பொறி, நுண் உடம்பு என்பவற்றை விடயங்களில் செலுத்தி அறிந்தும், ஓடுக்கி விடயங்களை அறியாதும் நிற்பது ஆகும் எனக்கொள்ளுதலே பொருத்தமாம். இங்ஙனம் கூறுவோர் பிராணான்மவாதிகள் எனப்படுவர், உலகாயதருள் ஒரு சாரார்.

4. அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:-உடம்பை இடமாகக்கொண்டு அதையும் பிற கருவிகளையும் புறத்து விடயங்களிற் செலுத்தி அவற்றான்வரும் இன்பத் துன்ப நுகர்ச்சியைப் பெறும் முதன்மை உடையதே ஆன்மா ஆகும். உடம்பு இன்பத்துன்ப நுகர்ச்சிக்கு வாயிலாகாதபடி ஐம்பொறியும் மனம் முதலியனவும் ஓடுங்கி நிற்கவும் பிராணவாயு இயங்குகின்றது. ஆதலால் அஃது இன்பத்துன்ப நுகர்ச்சிக்கு உரிய ஆன்மா அன்று; மேலும் கருவிகளைக் கொண்டு அறிவதாய முதன்மை பிராணவாயுவுக்கே இருப்பின், அஃது இயங்கா நிற்பவும் கருவிகள் ஓடுங்கமாட்டா; ஒரு முதலாளி அலுவலில் ஈடுபட்டிருக்கும்போது அவன் றன் வேலையாட்கள் ஓழிவு எடுத்துக்கொள்ள மாட்டார் ஆதல்போல. "அறிந்திடும் முதலி ஆகின் அது நிற்கக் கரணம் போகா." ஆதலால், ஆன்மா பிராணவாயுவுக்கு வேறேயாம்.

இதுகாறும் ஆன்மா மாயா காரியங்களுள் ஒன்றன்று என்பது நனவு, கனவு, உறக்கம் பேருறக்கம் என்னும் நிலைகளில் காணப்படும் நிகழ்ச்சிகளைக்கொண்டு உணர்த்தப்பட்டது. இனி, அது பிரமமும் அன்று என்பது உணர்த்தப்படும்.

ஆறும் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி:—உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.

(ஆ) வார்த்திகம்:—இனி, உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளது என்றது, அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

(இ) 1. தன்னுற் கூறப்படும் பொருள்:—ஆன்மா பிரமம் அன்று, அதற்கு வேருனது. பிரமம்தானே முழுதுணர்ந்து உயிர்களுக்கு அறிவை வளர்ப்பது; ஆன்மாவோ அறிவிக்க அறிவது.

2. ஐயப்பாடு:—ஆன்மா பிரமந்தானே அதனின் வேறோ என்பது.

3. பிறர் கூறும் பக்கம்:—பிரமம், இது காறும் ஆன்மாஅல்ல எனப்பட்ட பருவுடம்பு முதலியவற்றைப்போல அறிவில் பொருளன்று. அறிவே பிரமம் (பிரஞ்ஞானம் பிரஹ்ம—என்பது வேதம்); ஒருவனே ஆன்மா எனவும் வேதங் கூறுகின்றது. ஆதலின், உலக முதற்பொருளாய் ஞானமாத்திரமாயுள்ள பிரமமே ஆன்மா எனக்கொள்வதே பொருத்தம். ஆன்மாவைப் பிரமத்தின் வேறு என்றலும், அதுதான் பல என்றலும் மிகை என்னும் குற்றமாம்.—இங்ஙனம் கூறுவோர் பிரமவாதிகள்; இக்கொள்கை விஞ்ஞான ஆன்மவாதம் எனவும் படும்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:—ஆன்மாக்களாகிய நாம் அன்றாடம் நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படங்கல் என்னும் நிலைகளில் இறங்கிச் சென்று உலகப் பொருள்களை முற்றும் மறக்கின்றோம்; பின், தொழிற்படும் கருவிகள் ஒன்றும் இன்றிக் கேவலமாய் (தனியாய்) அங்ஙனம் அறிவு சிறிதும் விளங்கப்பெறாது இருக்கும்போது கலை முதலிய கருவிகளால் அறிவிக்க அறிந்து உயிர்த்தலும், உறங்கலும், கனவு காண்டலும், நனவு நிலை எய்தலும் என மேல் நிலைகளில் ஏறி உலகப்பொருள்களை விடயிக்கின்றோம். இதனால் ஆன்மா அறிவிக்க அறிவது என்பது உணரப்படும். ஆயின் முதற்பொருளாகிய பிரமம் எக்காலத்தும் மாறுதலின்றிப் பொருள்களை அறிந்தவாறே அறிந்து நிற்கும் இயற்கை முற்றுணர்வுடையது என்பது தலையாய அறிஞர் எல்லார்க்கும் உடன்பாடாவது. ஆதலால், அறிவிக்க அறியும் செயற்கைச் சிற்றுணர்வுடையதாகிய ஆன்மா அறிந்தாங்கு அறியும் இயற்கை முற்றுணர்வுடைய முதற்பொருளின் வேறே.

பூருவபக்கம்:—நீங்கள் கூறுவது ஒருவாறு ஒக்குமாயினும், அறிந்தாங்கு அறியும் பிரமம் அவிச்சைக் காலத்துத்தானே அறியாது கருவிகளோடு கூடியே அறியும் என யாம் கொள்ளுவோம். ஆதலால், ஆன்மாவைப் பிரமத்தின் வேறன்று எனவே கொள்ளலாம் அல்லவா?

சித்தாந்தம்:—அவிச்சை என்பது அறியாமை; பேருணர்வாகிய பரம்பொருளுக்கு அவிச்சையோடு உறவு எப்படி வந்தது என்னும் வினவிற்கு நீ விடை தருதல்வேண்டும். நிற்க. பிரமம் எனக் கருதிக்கொள்ளும் நீ கருவிகளோடு கூடியுள்ள போதும் உன் இயல்பை உணராய்; "கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்—நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் திருக்குறளில் கற்றதனுல் என்னும் சொற்குறிப்பால் உயிர்கள் எல்லாம் நூல்களைக்கொண்டு உணர்த்த உணரும் உபதேசிகள் (உபதேசத்தைப் பெறுதற்கு உரியன) என்பது பெறப்படும்; வால் அறிவன் என்னும் சொற்குறிப்பால் முதற்பொருள் மறந்து மறந்து அறியாது அறிந்தவாறே திரிபின்றி அறிந்து நிற்கும் தூய பேரறிவுடையது என்பது பெறப்படும். இங்ஙனம் தலையாய பிரமாண நூல்களைக் கொண்டு உன்னியல்பையும் தலைவன் இயல்பையும் தெரிந்து உணர்த்தினுல் அன்றி உணரமாட்டாத நீ உன்னைப் பிரமம் எனக் கருதுவது பகற்கனவேயாம். ஆதலின், நீ முதல்வனின் வேறு என நுணுகி உணர்ந்து கொள்.

பூருவபக்கம்:—கருவிகளோடு கூடிய பொழுதும், அவிச்சை நீங்காமையின், உலகப் பொருள்களை அறியும் அறிவு மட்டுமே உண்டு, தன்னை அறியுமாறில்லை; தன்னை அறிதல் உபதேசத்தான் உளதாகும் எனக் கொண்டாற்படும் குற்றம் யாது?

சித்தாந்தம்:—'கொடிறும் பேதையும் கொண்டது விடாது' என்றாற்போல, உன் அறியாமையையே பிரமத்திற்கு உள்ளது என்று கூறிக்கொண்டிருக்கின்றாய். உபதேசம் என்பது ஒன்று உண்டாயின், உபதேசஞ் செய்வோனும் அதனைப் பெறுவோ

னும் வேறு வேறு இருத்தல்வேண்டும். உபதேசிப்போன் முன் உணர்ந்தோனுகவும், உபதேசம் பெறுவோன் பின் அவனுல் உணர்வோனுகவும் இருத்தல் வேண்டும் என்பதும் தெளிவு. ஆதலின், முதற்கண் உணர்ந்தோன் இயற்கை முற்றுணர்வினன் ஆக ஏனைப் பின் உணர்வோர் எல்லாரும் செயற்கை உணர்வுடையோர் எனக்கொள்ளுதலே அறிவியலுக்கு ஒத்த முடிபு. இயற்கை முற்றுணர்வுடைய முதற்பொருளே ஆன்மா என்றல் பொருந்தாது.

மேலே, கருவிகள் எல்லாம் நீங்கிக் கேவலமாய் நின்ற அதீத நிலையில் ஒன்றையும் அறியமாட்டாது. பின் முதல்வன் கருவிகளைப் புணர்ப்பிக்க உணர்ந்து வருவது ஆன்மா, அங்ஙனம் கருவிகளோடு கூடிய போதும் தன்னியல்பை உணராமையால், அதனையும் உபதேசத்தால் உணர்தற்கு உரியது ஆன்மா என்னும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இன்னும், ஆன்மா கருவிகளோடு கூடிப்புறத்து விடயங்களை அறியும் போதும் அவற்றை இடையீடின்றி அறிவதன்று என்பதும் உணரத்தக்கது. பொருள்களை ஒருசேர அறியமாட்டாது, ஒன்றனை அறிந்தும், ஒன்றனை அறியப்புகுவதாயும், முன்னறிந்ததொன்றனை மறந்தும் இங்ஙனம் விட்டுவிட்டு அறிவதே ஆன்மா. அது மாயா காரியமாகிய அறிவில் பொருள்களுள் ஒன்றன்று என்பது முன் அதிகரணங்களால் உணர்த்தப்பட்டது; அஃது அனைத்தையும் ஒன்ருயறிந்து நிற்கும் முதற்பொருளும் அன்று; ஆன்மாவின் உண்மையைஉற்றுணர்வார், நிலத்தியல்பால் நீர் திரிந்து அத்தன்மையைத்தான் பற்றுமாறுபோல, தான் பற்றிய பொருளே தானுகச்சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் இயல்புடையது ஆன்மா எனக் கூறுவர்.

அறிந்தும் அறிவதே யாயும் அறியா(து)
அறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த(து)
எது? அறிவும் அன்ருகும்; மெய்கண்டான் [ஒன்றின்
அது அதுதான் என்னும் அகம்.

ஏழாம் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி:—மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது.

(ஆ) வார்த்திகம்:—இனி மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளதென்றது, அவை நாம் வெவ்வேறு பெயர் பெற்றலான்.

[மாயா காரியங்களால் இயன்று இயந்திரம்போல் நின்று தொழிற்படுவது உடம்பு; அக்காரியங்கள் நிலையாது அழிவன, கலை முதல் மண் அந்தம் வேறு வேறு பெயர்பெறுவன. மேலும் அவை தொக்க தொகுதிக்கண்ணும் உடம்பு எனவே பெயர்பெறும், ஆன்மா எனப் பெயர்பெரு. ஆதலால் மேலே ஆன்மா அன்று என மறுக்கப்பட்ட பருவுடம்பு, ஐம்பொறி, சூக்கும உடம்பு,பிராணவாயு என்பவற்றின் கூட்டமே ஆன்மா என்றலும் பொருந்தாது.]

(இ) 1. தன்னுற் கூறப்படும் பொருள்:—மாயா காரியங்கள் அனைத்தும் கூடிய கூட்டத்திற்கு (சமுதாயத்திற்கு) வேருயுள்ளது ஆன்மா.

2. ஐயப்பாடு:—ஆன்மாவாவது மாயா காரியமாகிய கருவிகள் அனைத்தும் கூடி இயைந்து நின்ற நிலையில் தோன்றி விளங்குவதோ அன்றி அக்கூட்டத்தின் வேருே என்பது.

3. பிறர் கூறும் பக்கம்:—ஆன்மா உடம்பு முதலியவற்றுள் ஒவ்வொன்றும் அன்று என்றது ஒக்கும்; ஆயினும், அவற்றுள் ஒன்று குறையினும் அறிவு நிகழவில்லை; எல்லாம் கூடி இயைந்து நின்ற நிலையில் அறிவு நிகழ்கின்றது. ஆதலால் அவை அனைத்தும் கூடிய கூட்டமே ஆன்மா என்றலே பொருந்தும்; அக்கூட்டத்தின் வேருய் ஆன்மா உளது எனக்கொள்ளவேண்டா. இங்ஙனம் கூறுவோர் புத்தரில் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் ஆவர். இவர்கள் உலக முழுவதும் புறக்கூட்டம் அகக்கூட்டம் என இருவகையுள் அடங்கும் என்பர். புறக்கூட்டம் என்பது நிலம் முதலிய நான்கு பூதங்கள். அகக்கூட்டம் என்பது சித்தமும் சித்தப்பகுதியும் என இருவகைப்பட்டு, உருவம், ஞானம், வேதனை, குறி, வாதனை என ஐந்தாக விரித்துக் கூறப்படும். சிந்திக்கப்படுவன எல்லாம் உருவக்கந்தம்; அவற்றை உணரும் உணர்வு அனைத்தும் ஞானக்கந்தம்; அவ்வுணர்வால் வரும் இன்பதுன்ப மயக்கங்கள் வேதனைக் கந்தம்; சிந்திக்கப்படும் பொருள்களுக்கு

இட்டு வழங்கும் பெயர்கள் குறிக்கந்தம்; அவற்ருல் உணர்வில் நிகழும் செய்கை வாதனைக்கந்தம். கந்தம் என்னும் சொல் சமுதாயம், கூட்டம் என்னும் பொருளை உடையது.

4. சித்தாந்தத் துணிபு:—மாயா காரியங்களை நீ உருவம், ஞானம் முதலாகப் பெயர் கூறி வழங்கினும் அவை தனித்தனியாவது தொகுதியாகவாவது ஆன்மா எனப் பெயர் பெருது, வேறு வேறு பெயர்பெறும். இனி, உண்மையான் ஆராய்வார்க்கு அவையெல்லாம் கலை முதல் நிலம்வரை சைவத்துள் வைத்தெண்ணப்படும் தத்துவங்களாகிய மாயாகாரியமாய் அழிவன என்பது உணரப்படும்; அவை பல தொக்க தொகுதிக்கண்ணும் பருவுடம்பு, நுண் உடம்பு, மிகு நுண் உடம்பு எனப் பெயர்பெறும்; ஆன்மா எனப் பெயர் பெரு. அவை ஒருங்கு கூடும் கூட்டத்தில் விளங்கும் ஞானத்தினியல்பைஉணர்ந்து பின் அப்பொருள்களினியல்பை நுணுகி உணர்ந்தால், கண்ணுக்குப் பொருள்களைக் காட்டும் விளக்குப்போல அவை நமக்கு உதவியாக உள்ளவை, நாம் விளக்கைக் கொண்டு பொருள்களைக் காணும் கண் விளக்கிற்கும் பொருள்களுக்கும் வேருதல்போல, பொருள்களை அறிந்துவரும் ஆன்மா அவ்வுடம்புகளுக்கும் அவற்றைக்கொண்டு உணரப்படும் புறத்து விடயங்களுக்கும் வேருய் உளது என்பது ஒன்றியிருந்து தற்சோதனை உள்நோக்கு உணர்வால் கண்டு கொள்ளத் தக்கது.

கலையாதி மண்ணந்தம்; காணில் அவை மாயை, நிலையாவாம்; தீபமே போல-அலையாமல் ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அது தனுவாம்; தான் அத்தின் வேருகுந்தான்.

[தனு-தூலம், சூக்குமம், பரம் எனப்படும் உடம்பு; தான்-ஆன்மா, அத்தின்-அந்தச் சமுதாயத்தினும். இறுதியில் உள்ள தான்-அசை நிலை.]

பாராதிபூதம் நீ அல்லை... உன்னிப்
பார்இந்திரியங் கரணம் நீயல்லை
ஆராயுணர்வு நீஎன்ருன்—ஐயன்
அன்பா யுரைத்தசொல் ஆனந்தம்தோழி—
சங்கர சங்கர சம்பு
—தாயுமானுர்.

மூன்ருஞ் சூத்திரம் முற்றிற்று.

(தொடரும்)



சுவர்ணபுரீசுவரர் கோயில் - செம்பனுர் கோயில்
அம்மன் சுவாமி விமானங்களின் தோற்றம்

திருநாவுக்கரசு நாயனர்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

திருப்புகலூர்க்கு எழுந்தருளல்

நாயனர் திருவாரூரிலே பேரன்பு கொண்டு தங்கியிருக்கும் நாட்களில், இறைவனது திருவருளினல், 'திருப்புகலூர்க்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடிப்பரவுதல் வேண்டும்' என்னும் அவா அவரது திருவுள்ளத்தில் மிக்கெழுந்து பெருகுவதாயிற்று. அதனல், அவர், புற்றிடங்கொண்ட புனிதரை வணங்கி விடைபெற்று ஒருவாறு ஒருப்பட்ட மனத்துடன், உடன் வந்த அடியார்களுடன் திருவாரூரை நீங்கிச் சென்று, இடையில் உள்ள தலங்களை வணங்கிக்கொண்டு திருப்புகலூரை அடைந்தருளினர்.

திருஞானசம்பந்தர் எதிர்கொள்ளல்

அப்பொழுது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர், அடியவர் கூட்டத்துடன் பலதலங்களை வணங்கிக்கொண்டு, திருப்புகலூரையடைந்து பெருமானை வணங்கி முருகநாயனரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தமையால், அவர், 'ஆளுடைய அரசர் திருவாரூரிலிருந்து எழுந்தருளி வருகின்ருர்' என்று கேள்வியுற்று, 'அவரை எதிர்கொண்டு அழைத்து வருதல் வேண்டும்' என்னும் பெருவிருப்பத்தினல், அடியவர் குழாம் புடைசூழ்ந்து வர, எதிர்சென்றருளினர்.

இருவரும் ஒருங்கு கூடல்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தப் பெருமான் எதிர்வருதலை யறிந்து மிக்க மகிழ்ச்சியுடன் விரைந்து செல்ல, இருவரும் ஒருவரையொருவர் வணங்கி அளவளாவினர். இருபக்கத்துத் தொண்டர் குழாங்களும் ஒன்று கூடிக் கலந்தபொழுது, அத் திருநீற்றுக் குழாத்தின் காட்சி இரண்டு நிலவுக் கடல்கள் ஒன்ருய்க் கூடிப் பெருகியதுபோன்றிருந்தது.

ஆதிரைச் சிறப்பை அறிவித்தருளல்

'அப்பொழுது ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய அரசுகளை நோக்கி, 'அப்பரே, திருவாரூரிற் கண்ட சிறப்புக்களை விளக்கமாகச் சொல்லியருள வேண்டும்' என்று கேட்க, அவர், திருவாரூரின் பல பெருமைகளையும் தெரிவித்து, எல்லாவற்றினும் மேலாக, திருவாதிரைத் திருநாட் சிறப்பைக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த ஒரு திருப்பதிகத்தினல் பெரிதும் வியந்து மனம் உருகி அருளிச்செய்தார். அத்திருப்பதிகத்தின் முதற் றிருப்பாடல்,

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்

என்பது.

துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்தும் நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்

என அடியவர்களது இயல்பினை இனிது விளக்கி அருளிச்செய்த திருப்பாடலும் அத் திருப்பதிகத்திலே உளது.

சொல்வேந்தர் அருளிச்செய்த திருப்பதிகத்தைக் கேட்டருளியவுடன் • திருஞான சம்பந்தர் திருவாரூருக்குச் செல்ல விரும்பியவராய் அவரை நோக்கி, 'அப்பரே, யான் திருவாரூரை வணங்கி மீண்டு வந்து இத்தலத்தில் உம்முடன் இருப்பேன்' என்று சொல்லித் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டுச் சென்ருர்.

நாயனர் திருப்புகலூரை வணங்குதல்

திருஞானசம்பந்தர் சென்ற பிறகு திருநாவுக்கரசர் புகலூர்ப் பெருமானை வணங்கும் அவா மிகுதியினல் திருக்கோயிலுக்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் பெரு

மானைக் கண்ணீர் பெருக அன்போடு வணங்கித் திருப்பதிகம் பாடிப் பரவினர்.

பின்னரும் நாள்தோறும் நாயனர் எல்லாக் காலங்களிலும் திருக்கோயிலுக்குச் சென்று பெருமானை வணங்கிக்கொண்டும் தாம் செய்யும் உழவாரத் திருப்பணியைச் செய்துகொண்டும் அத்தலத்திலே தங்கியிருந்தார்.

மற்றைய தலங்களை வணங்குதல்

அவ்வாறு தங்கியிருக்கும் நாட்களிலே திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, திருமருகல் என்னும் தலங்களுக்குச் சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, திருத்தொண்டாற்றி மீண்டருளினர். நாயனர் பின்பு இறைவன் திருவடியை அடையும் திருத்தலம் திருப்புகலூரே என்பதை அதுபோழ்து ஒருவரும் அறிந்தாரில்லை. அத்திருத்தலம் அத்தகையதாய் இருத்தல் பற்றியே போலும், அவ்விடத்திற்குச் செல்லுதல் வேண்டும் என்னும் அவா, நாயனருக்குத் திருவாரூரிலே மிக்கெழுவதாயிற்று!

நாயனர் இறுதியில் திருப்புகலூரிலே வதிந்தருளினமையால், அஞ்ஞான்று அருளிச்செய்த திருப்புகலூர்த் திருப்பதிகங்களும் பலவாகலின், இஞ்ஞான்று அத்தலத்தில் அருளிச்செய்த திருப்பதிகங்கள் இவை என அறியக்கூடவில்லை; ஆகவே திருப்புகலூர்த் திருப்பதிகங்களை ஈற்றில் நோக்குவோம்.

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகமாகக் கிடைத்துள்ளது, "பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே. இஃது இறைவனது பெருந்தன்மைகளையும், அவன் அடியார்கள் காண எழுந்தருளியுள்ள எளிமையினையும் நினைந்து உருகி அருளியதாகும். இதனுள், நாயனர் தமது வரலாற்றை நினைந்து உருகி அருளிய திருப்பாடல் ஒன்று அமைந்துள்ளது; அது வருமாறு:

எத்திக்கு மாய்நின்ற இறைவன் றன்னை
  ஏகம்ப மேயானை இல்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்கும் சமணர் பொய்யிற்
  புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவம் தீர்த்துப்
  பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துளே ஊறும் தேனைச்
  செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே

"உருகுமனத் தடியவர்கட்கு ஊறும் தேனை"

"கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னை"

"அரியபெரும் பொருளாகி நின்றான் தன்னை"

என்ற அருந்தொடர்களும் அதன் கண் இலங்குகின்றன.

திருநள்ளாறு

திருநள்ளாற்றிற்கு உள்ள திருப்பதிகங்கள் இரண்டு; அவை, "உள்ளா ருகதோர் புண்டரி கத்திரள்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமும், "ஆதிக்கண் நான்முகத்தில்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமும் ஆகும். அவற்றுள் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் பல்வேறு பொருள்களை அருளுவது.

"நள்ளாறு என நம்வினை நாசமே"

"நலியுங் கூற்றை நலிந்தநள் ளாறர்தம்
வலியும் கண்டிறு மாந்து மகிழ்வனே"

"வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடா
நஞ்ச நெஞ்சர்க் கருளும்நள் ளாறரே"
(நஞ்ச=நைந்த; உருகிய)

"நல்லன் என்றும் நல்லார்க்கு நள்ளாறனே"

என்னும் அரும்பொருள்களும் அதன்கண் வெளியாகியுள்ளன. திருத்தாண்டகத் திருப்பதிகம் இறைவனை நினைக்கப்பெற்றால் உய்தியைப் பெறலாம் என்பதனைத் தெரிவிக்கின்றது.

திருச்சாத்தமங்கைக்கு அருளிச்செய்த திருப்பதிகம் கிடைத்திலது.

திருமருகல்

திருமருகலுக்கு உள்ளது திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றே. அதன் முதற்றிருப்பாடலே முடிந்த பொருளை அறிவுறுப்பது. அது,

பெருக லாம்தவம் பேதைமை நீங்கலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லான்டி வாழ்த்தி வணங்கவே

என்பது. 'இறைவனை வழிபடுதலால் தவமும், தவத்தால் மலநீக்கமும், மலநீக்கத்தால் ஞானமும், ஞானத்தால் வீட்டின்பமும் அடையலாம்' என்பது அப்பாடலின் பொருள். இவற்றிற்கு வேறாக உயிர்கட்கு வேண்டுவன யாவை உள! மற்றும்,

............மருகற்பெரு மான்திரு
வேடங் கைதொழ வீடெளி தாகுமே,
............மருகற்பெரு மான்திறம்
நினைப்பவர்க்கில்லை நீணில வாழ்க்கையே
............மருகற்பெரு மான்திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கும் உம்பரே

என்னும் அரும்பொருள்களும் அத்திருப்பதிகத்துள்ளே காணப்படுகின்றன. பல திருப்பாடல்கள் அகப்பொருள் வடிவில் அமைந்து அடியார்கட்கு இறைவன் மாட்டு மீதூர்ந்து செல்லும் அன்பினை விளக்குகின்றன.

அடியார்கள் உடன் உறைதல்

நாயனார் திருப்புகலூருக்கு மீண்டுவந்து தங்கியிருக்கும் நாட்களில், திருவாரூருக்குச் சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அத்தலத்தை வணங்கி மீண்டு திருப்புகலூரை அடைந்தார். அவரைத் திருநாவுக்கரசு நாயனார் எதிர்சென்று வரவேற்று அவருடன் அத்தலத்தில் மகிழ்ச்சியோடு தங்கியிருந்தார்.

இருக்கும் நாட்களில், முதலில் சிறுத்தொண்ட நாயனார் தமது திருச்செங்காட்டங்குடியினின்று திருப்புகலூருக்கு எழுந்தருள பின்பு திருநீலநக்க நாயனாரும் திருச்சாத்தமங்கையிலிருந்து அவண் எழுந்தருளினார். ஆகவே, இருபேராசிரியர்களும் அவ்விரு திருத்தொண்டர்களுடன் முருக நாயனாரது திருமடத்தில் ஏனைய அடியார்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

அந்நாட்களில், அனைத்து வகையாலும் ஒத்த உணர்வினையுடையவர்களாகிய அவர்களில் சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்க நாயனாரும், முருக நாயனாரும் அருளாசிரியர்களது திருப்பதிகத்தின் பெருமையை உணர்ந்து போற்றியும், அருளாசிரியர் இருவரும் அத்திருத் தொண்டர்களது பெருமையைப் பலரும் அறியும்படி விரித்துச் சொல்லியும் இன்பம் மீதூர்ந்து, உடன் உறைதலாகிய பெரும்பயனைப் பெற்றார்கள்.

இப்படிச் சில நாட்கள் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்து, பின்பு இருவர் ஆசிரியன்மார்களும் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள்தோறும் சென்று திருப்பதிகத் தமிழ்மாலை சாத்தி வழிபடுதலாகிய தங்கள் திருத்தொண்டின் நெறியிலே செல்கின்றவர்களாய், திருப்புகலூரில் உள்ள பெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு அத்தலத்தை விட்டுப் புறப்பட்டருளினார்கள். அதனால், திருநீலநக்கர், சிறுத்தொண்டர், முருகர் என்னும் திருத்தொண்டர்கள், அவ்விருவரையும் வணங்கி விடைபெற்றுத் தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றருளினார்கள்.

அப்பால் அருட்பேராசிரியர் இருவரும் ஒருங்கு சென்றே சில தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினார்கள். அத்தலங்கள் திருஅம்பர், திருக்கடவூர் வீரட்டானம், திருக்கடவூர் மயானம், திருஆக்கூர் முதலியன.

இருவரும் திருக்கடவூருக்குச் சென்ற பொழுது, அங்கு வாழ்ந்தருளிவருபவராகிய குங்குலியக் கலய நாயனார் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று, அடியவர் கூட்டத்துடன் தமது திருமடத்திற்கு எழுந்தருளச் செய்து, சிறந்தவகையில் திருவமுது படைத்தருளினார்.

திரு அம்பருக்குத் திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் இடைத்திலது.

திருக்கடவூர் வீரட்டானம்

திருக்கடவூர் வீரட்டானத்திற்கு அவர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் மூன்று கிடைத்துள்ளன. அவை, "பொள்ளத்த காய மாய" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம் ஒன்றும், "மருட்டுயர் தீரஅன் றர்ச்சித்த மாணி" என்னும் திருவிருத்தத் திருப்பதிகம் ஒன்றும், "மலைக்கொ ளானை" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றும் ஆகும்.

அவற்றுள் திருநேரிசைத் திருப்பதிகம், அன்பினால் வணங்கும் மெய்யடியார்கட்கு இறைவன் அருள் செய்யும் முறைமையையும், அன்னதொரு நிலை தமக்கு இல்லையென நினைந்து இரங்கினமையையும் குறிப்பிட்டருளியது.

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம்
விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்டனாரே

என்னும் அரிய திருப்பாடல் அத்திருப்பதிகத்தே அமைந்துள்ளது. இன்னும்,

''பழியுடை யாக்கை தன்னிற்
[பாழுக்கே நீரிறைத்து
கழியிடைத் தோணி போன்றேன்''
''பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீரிறைத்தேன்
உற்றலாற் கயவர் தேறார்
என்னுங்கட் டுரையோ டொத்தேன்''

என்பனவும் அத்திருப்பதிகத்திலே உள்ளன.

திருவிருத்தத் திருப்பதிகம் திருக்கடவூர் வீரட்டானப் பெருமான் மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்தருளிய பெருமானதைலப் புகழ்வது.

திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், ''உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்'' (திருக்குறள்) என்பதுபோல யானையாக உருவகித்துச் சொல்லப்படுதலை மரபாக உடைய ஐம்பொறிகளை, ''யானையால் யானையாத் தற்று'' (திருக்குறள்) என்பதுபோல அடக்கவல்ல யானையாய் விளங்குபவன் இறைவனே; அஃது அவன் யானையை உரித்த வரலாற்றானும் இனிதுணரப்படும் எனத் தொடங்கி, பெருமைச் சொல்லாகிய யானை என்னும் பெயராலேயே இறைவனை எல்லாத் திருப்பாடல்களிலும் கூறிப் புகழ்வது.

திருக்கடவூர் மயானம்

திருக்கடவூர் மயானத்திற்கு, ''குழை கோள்காதினர்'' என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றே உள்ளது. அஃது, இறைவரை, ''பெருமானடிகள்'' எனக் குறிப்பிட்டு, அவர் தம் பெருமையை விரித்து விளக்குவது. இவ்வாறே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் இறைவரை, ''பெருமானடிகள்'' என்றும், சுந்தரமூர்த்தி நாயனார், ''பெரிய பெருமானடிகள்'' என்றும் இத்தலத்தில் அருளிச்செய்திருத்தல் நினைவு கூரத்தக்கன. இவற்றிற்கேற்ப இங்கு இறைவருக்கு, 'பிரமபுரீசர்' எனத் திருப்பெயர் சொல்லப்படுகின்றது.

மேற்குறித்த திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்துள்,

''பழைய தம்அடி யார்செயும் பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமா னடிகளே''

''தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே''

''ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொடு
பித்தர் காணும் பெருமா னடிகளே''

''வணங்கு வாரிடர் தீர்ப்பர்......
............பெருமா னடிகளே''

என்னும் அரிய உண்மைகள் வெளிவந்துள்ளன.

திரு ஆக்கூர்

திரு ஆக்கூருக்கு, ''முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும்'' என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே உள்ளது. அது ''போலும்'' முடிபினையுடைய தொடர்மொழிகளால் இறைவன் பொருள் சேர்புகழ்களைக் கிளந்தெடுத்தோதி வாழ்த்துவது.

இருவரும் திருவீழிமிழலையை அடைதல்

இரு பேராசிரியரும் தொண்டர் குழாங்களுடன் பல தலங்களை வணங்கிக்கொண்டு, திருவீழிமிழலையை அடைந்தனர். அஃது அந்தணர்கள் வாழும் ஊராதலின், அவர்கள், சிவநெறியின் பெருந்தலைவர்களாகிய இரு பேராசிரியரும் ஒருங்கு எழுந்தருளி வருதலையறிந்து, வீதிகளை நன்கு அலங்கரித்து, வீடுகள்தோறும் ஒளிமணி விளக்குக்களை ஏற்றி, வாழை மரங்களையும் பாக்கு மரங்களையும் வரிசைப்பட நாட்டி, மாவிலை முதலியவற்றால் அழகு செய்யப்பட்ட நீர்நிறைந்த பொற்குடங்களை ஏந்தி, அடியார் பலரும் வரச் சென்று, எதிர்கொண்டார்கள். அருளாசிரியர் இருவர்களும் மகிழ்ச்சியுற்று, அவர்களுடன் திருக்கோயிலை அடைந்தனர்.

திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் உள்ளிடம் திருமாலால் விண்ணுலகத்திலிருந்து கொணர்ந்து வைக்கப்பட்டது. அதனால், அது, விண்ணிழி விமானம்' என்றும், 'விண்ணிழி கோயில்' என்றும் வழங்கப்படும்.,

ஆசிரியன்மார் இருவரும் திருக்கோயிலின் வாயிலை அடைந்து உள்ளே புகுந்து, விண்ணிழி விமானத்தை வலம் வந்து, திருமுன்றிலை வணங்கி விமானத்தின் உள்ளே திருமுன்பினை அடைந்து, சிவபெருமானது திருவடிக்கண் உள்ள ஆராத பேரன்பு உந்த அத்திருவடிக்கீழே வீழ்ந்து பணிந்தார்கள்; எழுந்தார்கள்; அன்பினால் கண்ணீர் பெருக விம்மினார்கள். பின்பு திருப்பதிகம் சாத்தி வழிபடுங்கால் திருநாவுக்கரசு நாயனார், "போராரை யீருரிவைப் போர்வை யானை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தினை எடுத்து, அதன்கண், மெய்ந்நெறியாவது, சிவபெருமானை அடைதலையன்றிப் பிறிதொன்றும் ஆகாமையை இனி துணர்த்தியருளுவாராய், ஒவ்வொரு திருப்பாடலின் முடிவிலும், "திருவீழிமிழலை யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" என அறுதியிட்டருளிச் செய்தார். ஆகவே, அத்திருப்பதிகம், பல தலைப்பட்ட உணர்விற்குக் காரணமான சஞ்சித வினைகளை அகற்றி, உண்மையை ஒருதலையாக உணரச் செய்வதென்க.

அப்பால் 'மிழலைப் பெருமானைப் பன்முறை வணங்கவேண்டும்' என்னும் பேரன்பு இருபெரு மக்கட்கும் கரைகடந்து பெருகினமையால், அத்தலத்திலேயே பின்னும் சில நாட்கள் தங்கியிருக்க ஒருப்பட்டு, அங்ஙனமே இருந்து, பெருமானைக் காலந்தோறும் வணங்கி வந்தார்கள்.

படிக்காசு பெறுதல்

அங்ஙனம் இருக்கும் நாட்களில், பருவமழை குறைந்து, காவிரியாறும் தன் வளப்பத்தை நிரம்பத் தாராதொழியவே, விளைபொருள்கள் அருகி, மக்கள் வறுமைமிகுந்து, பசியால் வாடித் துன்புற்றனர். அப்பொழுது சிவபெருமான், அருளாசிரியர் இருவர் கனவிலும் தோன்றி, 'கால வேறுபாட்டால் உளவாகும் மாறுபாடுகள் உங்கள் உணர்வைத் திரிவிக்க வல்லுந அல்ல; அதனால், இவ்விடம் நோக்கி நீவிர் இருவீரும் இவண் சில காலம் உறைந்து நம்மை வழிபடுதல் வேண்டும் என்னும் அவாவைப் பின்னொரு முறை நிரப்பிக்கொள்வோம் என நினைந்து இவ்விடம் விட்டுப் பெயர்ந்து செல்லக் கருதமாட்டீர்; ஆயினும், நும்மை வழிபட்டு உடன் வருவோரது நிலைமை நோக்கி நீவிர் அங்ஙனம் செல்ல நினையாதவாறு, அவர்களைப் புரத்தற் பொருட்டு, நாள்தோறும் நும் இருவர்க்கும் ஒவ்வொரு பொற்காசு அளிக்கின்றோம்; அவைகளைக்கொண்டு அவர்களைப் புரந்து, இவண் உறைவீர்களாக' எனக் கூறி மறைந்தருளினார்.

என்னே நம் பேரருளாசிரியர் தம் பெருமை! "பத்தும்—பசிவந்திடப்பறந்து போம்" என்னும்ஔவையார் திருமொழியை அறியாதார் இல்லை. "மானங் குலங்கல்வி" என்று தொடங்கி, அப்பத்தினையும் நல்வழிச் செய்யுளில் ஔவையார் குறிப்பிட்டுள்ளார். அவைகளில், 'அறிவு தவம்' என்பனவும் அடங்கியுள்ளன.

> "குடிப்பிறப் பழிக்கும்; விழுப்பங் கொல்லும்;
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
> நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;
> பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்;
> பசிப்பிணி யென்னும் பாவி"
>
> —(மணிமேகலை)

எனப் பசிப்பிணியின் கொடுமையைப் பரக்கக்கூறி, "அது தீர்த்தோர்—இசைச்சொல் லளவைக்கு என்நா நிமிராது" என,இப்பசிப் பிணியைப் பிறர்க்கு நீக்குவதிலும் சிறந்த செயல் வேறொன்றில்லை எனப் புகழ்கின்றார், "சாத்தனார்" என்னும் பழந்தமிழ்ப் புலவர். மேலும் அவர், இப்பசிப்பிணியைத் தாங்க மாட்டாது, விசுவாமித்திர முனிவர் நாய் இறைச்சியை உண்ண முயன்றதாகவும் கூறுகிறார். இவ்வளவு கொடியதாகிய பசிப்பிணி தானும், நம் அருளாசிரியர்களை மனங்கலங்கச் செய்யவல்லதாகாமையை இங்கு நாம் உணர்கின்றோம்.

"நும்மை வழிபடுவார்க்கு அளிக்க(காசு) அளிக்கின்றோம்" என்று இறைவன் அருளிச் செய்தமையால், இவ்விரு பெருமக்களும் அது வேண்டாமலே அடகும் நீரும் காற்றும் அருந்தியேனும் இறைவன் பணியில் இறையும் இளையாது நிற்பர் என்பது பெறப்படுகின்றது.

பொழுது புலர்ந்த பின் இரு பெருமக்களும் நியதிகளை முடித்துக்கொண்டு, ஒருவரோடொருவர் அளவளாவி, வழக்கப்படி திருக்கோயிலுக்குச் சென்றார்கள். செல்லுங்கால், கிழக்குத் திசையிலுள்ள பீடத்தின் மேல் ஒரு பொற்காசும், மேற்குத் திசையிலுள்ள பீடத்தின்மேல் ஒரு பொற்காசும்

வைக்கப்பட்டிருந்தன. கிழக்கில் திருஞானசம்பந்தருக்கும், மேற்கில் திருநாவுக்கரசருக்கும் காசுவைப்பதாக இறைவன் முன்பே அருளிச்செய்திருந்தமையால், அவைகளை அவர்கள் அங்ஙனமே பெற்றுக்கொண்டார்கள்.

அக்காசுகளில், திருஞானசம்பந்தருக்கு வைக்கப்பட்டது தேய்வுடைய பழங்காசாய் வாசி (கழிவுத்தொகை) யுடையதாயும், திருநாவுக்கரசருக்கு வைக்கப்பட்டது நல்ல ஒளியுடைய புதுக்காசாய் வாசியில்லாததாயும் இருந்தன. அவற்றிற்குக் காரணம், திருஞானசம்பந்தர் மகன்மை முறையுடையவராய், மனத்தொண்டு மொழித்தொண்டு என்னும் இரண்டிலே நின்றிருந்தமையும், திருநாவுக்கரசர் தொண்டர் முறைமை யுடையவராய், அவ்விரு தொண்டுகளோடு நில்லாமல் கைத்தொண்டினையும் செய்து வந்தமையுமே யாகும். எனவே, எத்துணைப் பெருமையுடையவராயினும் இறைவனுக்குக் கைத்தொண்டு செய்தல் கடப்பாடென்பதனை உலகிற்கு வலியுறுத்தி விளக்குதற் பொருட்டே இது நிகழாலாயிற்று என்க.

இங்ஙனம் மிழலைப் பெருமான், அவ்விரு பெருமக்கட்கும் பன்னாட்கள் நாள்தோறும் படிக்காசு வழங்கினான். (படி = புரவோடு ஒத்தது. புரவாவது நிலையாகத் தரப்படும் முற்றூட்டு முதலியன.)

மிழலைப்பெருமான் அளித்த படிக்காசினால் இருபெரு மக்களும் அளவற்ற அடியார்களுடன் நல்லுணவு அருந்தி, தம் விருப்பப்படியே அங்குத் தங்கி இறைவனை வணங்கி வந்தார்கள். 'அவர்கள் வற்கடக்காலத்து அவ்வற்கடத் துன்பம் சிறிதும் தோன்றாதவாறு திருவீழிமிழலையில் பலரையும் பறைசாற்றி அழைத்து நல்லுணவு அளித்துக் காத்த பெருமையினை இனிது விளக்கும் சேக்கிழாரது திருப்பாட்டு ஈண்டு ஒருதலையாக உணரற்பாற்று.

அல்லார் கண்டத்து அண்டர்பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரம னடியா ரானார்கள்
எல்லாம் எய்தி யுண்களன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

இவ்வற்கடக் காலத்தில் இவ்விரு பேராசிரியரும் இவ்விடத்தில் ஒருங்குகூடி யிருந்தமையாலே இறைவன் இவர்கட்குப் படிக்காசு வழங்கியருள, இருவரிடத்தும் அளவிலா அடியார்கள் அடைந்து இனிது உணவு அருந்தியிருக்க, உலகம் அழியாது நிலைபெற்று நின்றது என்பதனை நம்பியாண்டார் நம்பிகள் தமது ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

''பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்
[பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசொ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னாலுள தாய்த்திக்
குவலயமே''

என நயம்பட உணர்த்திப் போந்தார்.

அவ்விருவரும் கூடிய கூட்டத்தினால் உளதாய்த்து இக் குவலயமே எனக் கூறுதற்கு, அவர்கள் படிக்காசு பெற்று வற்கடத் துன்பத்தை நீக்கிய நிகழ்ச்சியை ஒரு முன்னிலையாக நம்பியாண்டார் நம்பிகள் கொண்டனரே யன்றி, அஃது ஒன்றையே உண்மைப் பொருளாகக் கொண்டனர் அல்லர் என்பது, பிற இடங்களில் அவ்விருவரையும் பற்றி அவர் அறிவித்து வருகின்றவைகளை நோக்குவார்க்கு இனிது விளங்கும். மற்று அதன் உண்மைப் பொருள் யாதெனின், 'அவ்விரு பெருமக்களும் ஒரு காலத்துத் தோன்றி ஒருங்கு கூடி உலாவினமையாலே இவ்வுலகம் தீநெறிக்கண் சென்று மண்புக்கு மாய்ந்தொழியாது, நன்னெறிக்கண் நின்று இன்றுகாறும் இனிது வாழாநின்றது' என்பதே அதன் உண்மைப் பொருளாம். இவ்வுண்மைப் பொருள் மேல் நோக்குடையதே மேற்காட்டிய திருப்பாட்டென்பது, அதனை ஒருமுறை ஓதும்பொழுதே இனிது புலனாவதாகும்.

இனி, படிக்காசு பெற்றுப் பலரையும் புரந்தருளிய இன்னோரன்ன இவர் தம்செயல்களால் சிவனடியார்கட்கே, பிறர் துன்பங் கண்டு இரங்குதலும், அவ்விரக்கம் பயனுடையதாமாறு, அவர்களை அத்துன்பத்தினின்றும் மீட்டுக் காத்தலும் உளவாகும் என்பது விளங்கும்.

இங்ஙனம் இருபெரு மக்களுக்கும் அடியார்கள் பலருடன் திருவீழிமிழலையில் தம் விருப்பப்படியே மிழலைப் பெருமானைப் பன்முறையும் வணங்கித் திருப்பதிகங்களை அருளிச்செய்துகொண்டு இனிதே இருந்தார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் தமது கைத்தொண்டினையும் மகிழ்ச்சியுடன் செய்து வந்தார்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுக்குச் சென்றுவிட்ட பின்னர் மீண்டும் ஒருமுறை திருவீழிமிழலைக்கு வந்து இறைவனை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்திருந்தாராகலின், அத்தலத்தின் திருப்பதிகங்களைப் பின்னர்க் காண்போம்.

(தொடரும்)

திருக்குற்றாலம் - திருக்குற்றாலநாதசுவாமி கோயில்

ஏழாவது சாரல் மாநாடு

25—6—62 முதல் 9—8—62 வரை

திருக்குற்றால நாதசுவாமி கோயிலின் ஆதரவில் சமயஅறிவு பெருக்கவும், திருக்கோயில் தத்துவம் விளக்கவும், பக்தி வளர்க்கவும் உயரிய நோக்கங்கொண்டு 25—6—62 முதல் 9—8—62 வரை ஏழாவது சாரல் மாநாடு நடைபெறும்.

25—6—62-ல் சென்னை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் சாரல் மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். சென்னை இந்துசமய அறநிலைய (ஆட்சி)த்துறை ஆணையர் திரு. எம் எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். திருக்குற்றாலம் கோயில் அறங்காவலர்கள் திரு. பி. கே. எஸ். சங்கரமுதலியாரவர்கள் வரவேற்புரையும், திரு. எம். அருணாசலம் பிள்ளை அவர்கள் நன்றியுரையும் நவின்றார்கள்.

26—6—62 முதல் 11—7—62 வரை திருவாளர்கள் கூனம்பட்டி நா. சரவணமாணிக்க சுவாமிகள் அவர்கள் ('சேக்கிழார் தந்த செம்பொன்'), கே. எம். பாலசுப்பிரமணியம் ('சிவம் பெருக்கும் சராசரம்'), கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., ('வைணவம்'), பி. கே. சண்முகநாதன், பி.ஏ., பி.எல்., ('பராசக்தி தத்துவம்'), கே. ஆறுமுக நாவலர் ('திருநெறித் தமிழ் மறை'), ஔவை. துரைசாமிப்பிள்ளை ('ஏழாம் திருமுறை'), என். ஆர். முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்., ('மாணிக்கவாசகரின் ஞானச்செய்தி'), தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், எம்.ஏ.,ஐ.ஏ.எஸ்., ('வடநாட்டுத்தலங்கள்'),இராமச்சந்திரப் பத்தர், பி.ஏ., ('திருமுறைகள்') முதலியவர்கள் மாநாட்டில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றுவார்கள்.

திருமதி. கே. பி. சுந்தராம்பாள், எம். எல். சி., திருவாளர்கள் பி. எஸ். வீருசாமி பிள்ளை, ஆ. விநாயக முதலியார், எம். கே. சின்னசுப்பையா, தேவகோட்டை கலைக்கழகத்தினர் முதலியவர்கள் இன்னிசை, நாடகம், கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக்கொள்ளுவார்கள்.

31—7—62 முதல் 9—8—62 முடிய 10 நாட்களுக்கு நாள்தோறும் காலை 9 மணி முதல் 12 மணி வரை சித்திரசபை முன் மண்டபத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கந்தபுராணச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

திருவையாறு :—பஞ்சநதீசுவரசுவாமி கோயிலில் ஆனித்திருமஞ்சன விழா 8—7—62 முதல் 16—7—62 வரை நடைபெறும்.

கல்லிடைக்குறிச்சி :—மானேந்தியப்பர் கோயிலில் ஜீரணோத்தாரண பரிவார சகித அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 13—7—62ல் நடைபெறும்.

தென்கரை :—நதநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா சம்புரோட்ணம் 22—6—62ல் நடைபெற்றது.

ஆளுடையார்கோயில் :—ஆத்மநாதப்பெருமாள் கோயிலில் ஆனித் திருமஞ்சன மகோற்சவம் 27—6—62 முதல் 7—7—62 வரை நடைபெறும்.



தேரழுந்தூர்

(ஆமருவியப்பன் கோயில்)

நெடியானே கடியார் கலிநம்பி நின்னையே
நினைந்திங் கிருப்பேனை
கடியார் காளையரைவர் புகுந்து
காவல்செய்த அக்காவலைப் பிழைத்து
குடிபோந் துன்னடிக் கீழ்வந்துபுகுந்தேன்
கூறைசோறு இவைதந் தெனக்கருளி
அடியேனைப் பணியாண்டுகொ ளெந்தாய்
அழுந்தூர் மேல்திசை நின்றஅம்மானே

—திருமங்கையாழ்வார்.

அடியாராய் வாழ்மின் அறிவிலாப் பேய்காள்
செடியார் வினைஅனைத்தும் தீரும்—முடிவில்
செழுந்தூரத் தன்எனினும் செங்கண்மால் எங்கள்
அழுந்தூரத் தன்அணிய னும்

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

ஆழ்வார்கள் பாடிய சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பது. அவற்றிலொன்று **தேரழுந்தூர்** என வழங்கும் திருஅழுந்தூர். இது தஞ்சைமாவட்டத்தில் மாயூரம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—திருச்சிராப்பள்ளி இருப்புப்பாதையில் தேரழுந்தூர் என்ற நிலையத்திற்குத் தெற்கே இரண்டு கல்தொலைவிலிருக்கிறது. குத்தாலம், மாயூரம் இவ்விடங்களிலிருந்து இவ்வூருக்கு பஸ்கள் செல்கின்றன.

தேரழுந்தூர், திருவழுந்தூர், அழுந்தை கிருஷ்ணாரண்யம், சந்தனாரண்யம், தாத்ரீ வனம், இரதமக்னபுரம், இரதஸ்தப்தபுரம் என்ற பல பெயர்கள் இந்த திவ்விய தேசத்திற்குள்ளன. பஞ்சகிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்று. ஆழ்வார் பாடல், கல்வெட்டுக்கள், தேவாரம், சங்க இலக்கியம் இவைகளில் இவ்வூர் அழுந்தூர், அழுந்தை என்றே காணப்படுகிறது. திருமங்கையாழ்வார் பாடல்களில் "அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே" என்று அருளிச்செய்தபடி ஊருக்கு மேற்கே எம்பெருமான் கோயில் விளங்குகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. தேர் நிலையினின்றும் செல்லும்போது சந்நிதித் தெருவில் திருமங்கையாழ்வார் சந்நிதி இருக்கிறது. அங்கு இலட்சுமிநரசிம்மனும் சேவை தருகிறார். இந்த சந்நிதியின் பக்கத்தில் உயரமான இடத்தில் பள்ளிகொண்ட அரங்கநாதர் சந்நிதியும் இருக்கிறது. அதையும் கடந்து மேற்கே சென்றால் தர்சபுஷ்கரிணி இருக்கிறது. அதன் வடகரையில் வசந்த மண்டபம் இருக்கிறது. எம்பெருமான் கோயிலின் கிழக்குத் திருவாயிலைத் தாண்டியதும் கோபுரவாயில். கோபுரத்தின் தென் பக்கச் சுவரில் கம்பர், அவர் மனைவி இவர்களின் உருவங்கள் உள்ளன. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. தெற்குப் பிரகாரத்தில் ஆழ்வாராதியர், செங்கமல

வல்லித் தாயார் சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள் சந்நிதியும் இருக்கின்றன.

எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் விமானத்திற்கு, "கருட விமானம்" என்று பெயர். கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். சாளக்கிராம வடிவம். எம்பெருமானுடைய கம்பீரமான தோற்றம் கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம் திகழ்கின்றது. இவ்வூரிற் பிறந்த கம்பர் தம்முடைய இராமாயணத்தில் இராமனை வர்ணிக்கும்போது "தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமலமன்னதாள்கண்டார் தாளே கண்டார்" என்று கூறியிருப்பதை நோக்க, அவர் இத்தலத் திறைவனை வழிபட்டுவணங்கி அத்திருவுருவத்தை நன்கு அனுபவித்துத் தம் மனத்தில் பதியவைத்ததனாற் போலும் அத்தகைய பாடல் அவர் வாக்கினில் எழுந்தது என்று சொல்லவேண்டும். எம்பெருமானின் திருநாமம் ஆமருவியப்பன் என்பது. பசுவை வளர்த்த பெருமாள் என்று அதற்குப் பொருள். கோஸகன் என்றும் கூறுவர். வலது பக்கத்தில் பிரகலாதன், மார்க்கண்டேயர், இடது பக்கம் கருடன், காவிரித்தாயார் இவர்களும் காட்சியளிக்கின்றனர். இறைவன் பக்கலில் கருடன் இருப்பதால் எதிரில் கருடன் சந்நிதி கிடையாது.

சேதிநாட்டை உபரிசரவசு என்ற சக்கரவர்த்தி ஆண்டுவந்தான். இவன் செய்த தவத்திற்கு மெச்சி இந்திரன் இவனுக்கு ஒரு விமானத்தைக் கொடுத்தான். அவ்விமானத்தில் அவன் நினைத்த இடத்திற் கெல்லாம் சென்றதால் அவனுக்கு உபரிசரவசு என்ற பெயர் ஏற்பட்டது. வானவீதியில் செல்லும்போது விமானத்தின் நிழல் அழுந்தூர்க் கோயில் கருடவிமானத்தின் மேல் விழுந்தது. அதைக் கண்டு சினங்கொண்ட கருடபகவான் அந்த வானவெளித் தேரைப் பாதலத்தில் அழுத்திவிட்டார். மன்னன் மனம் வருந்தி அங்கு தர்சபுஷ்கரிணிக் கரையில் தவம் செய்துகொண்டிருந்த அகத்திய முனிவரைக் கேட்டான். முனிவரும் செய்தியை விளக்கிக் கூறி எம்பெருமானை நோக்கித் தவம் செய்யும்படி சொன்னார். அரசனும் அவ்வாறே செய்ய ஆமருவியப்பன் தோன்றி, அவனுடைய தேர்மேலே வரும்படி அருள்செய்தார். உபரிசரவசு புஷ்கரிணியில் நீராடி எம்பெருமான் திருவருளைப் பெற்றநாள் தை அமாவாசையான நன்னாள். ஆகவே அந்த புஷ்கரிணிக்கு தர்சபுஷ்கரிணி (தர்சம்=அமாவாசை, புஷ்கரிணி=புண்ணிய தீர்த்தம்) என்ற பெயர் ஏற்பட்டது. அந்த நாளில் பெருமாள் கருடவாகனத்தில் எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கிறார். அந்த நாளில் அதில்



ரோதி இறைவனை வழிபடுவோர் எல்லா நலன்களையும் பெறுவர் என்று புராணம் கூறுகிறது. உபரிசரவசுவின் தேர் அழுந்திய தால் இத்தலத்திற்குத் தேரழுந்தூர் என்ற பெயர் ஏற்பட்டது. வடமொழியில் இரதமக்னபுரம் என்று சொல்லப்படுகிறது.

கண்ணனும் இடையர்களும் மாடுமேய்க்கச் சென்றபோது யமுனையாற்றின் நடுத்திட்டில் எல்லோரும் உணவு உண்டுகொண்டிருந்தனர். பிரமன் அவர்களுக்குத் தெரியாமல் மாடுகளை மறைத்துவிட்டார். கோவலர்கள் மாடுகளைத் தேடினர். அவர்களையும் நான்முகன் மறைத்துவிட்டார். அயனின் செயலையறிந்த கண்ணன் தானே இடையர்களாகவும் பசுக்களாகவும் மாறி ஆயர்பாடிக்குப் போய்விட்டார். பிரமன் ஏமாந்தார். அவர் கண்ணனை வணங்கி மாடுகளையும் இடையர்களையும் தேரழுந்தூரில் மறைத்து வைத்து இருப்பதாயும், அங்கு எழுந்தருளி ஆமருவியப்பனாக சேவை சாதிக்கும்படியாகவும் வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளின்படியே செய்தார் கண்ணபிரானும். அதிலிருந்து இந்த க்ஷேத்திரத்திற்குக் கிருஷ்ணாரண்யம் என்று பெயர் வழங்கலாயிற்று.

சந்தனமரங்கள் நிறைந்த இடமாக இருந்ததால் சந்தனாரண்யம் என்றும், நெல்லிமரக்காடாக இருந்ததால் தாத்ரீவனம் என்றும் பெயர்கள் இப்பதிக்கு உண்டாயின.

இந்திரன் மயனால் செய்யப்பட்ட இரத்தினக்கிரீடம் ஒன்றையும், விமானம் ஒன்றையும் கருடனுக்குக் கொடுத்தான். கருடன் இரத்தினக் கிரீடத்தைத் திருநாராயணபுரத்திலும் (மைசூர் நாட்டிலுள்ளது), விமானத்தைத் தேரழுந்தூரிலும் அமைத்தார். அதனாலேயே கருடவிமானம் என்று பெயர் ஏற்பட்டது. கருடனும் எம்பெருமான் பக்கத்திலேயே இருக்கும் பேறுபெற்றார். இந்த ஸ்தலத்தில் பெருமாள் சந்நிதிக் கெதிரில் கருடன் சந்நிதி கிடையாது. இவ்வூரில் தங்கினால் விஷபீடை இல்லையென்றும் சொல்லப்படுகிறது.

மார்க்கண்டேயர், பிரகலாதன், காவிரியம்மன் இவர்களும் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பேறுபெற்றனர். இவர்களும் எம்பெருமான் அருகிலேயே காட்சியளிக்கின்றனர். கம்பர் இங்குள்ள பிரகலாதனை நினைத்துத்தான்போலும் தாம் எழுதிய இராமாயணத்தில் 'இரணிய வதைப்படலம்' என்பதையும் சேர்த்திருக்கிறார். திருமங்கையாழ்வாரும் தம் பாசுரங்களில் ஆமருவியப்பனை நரசிங்கமூர்த்தியாகப் பாவித்துப் பாடியருளியிருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

திருஅழுந்தூர் மிகப் பழைய ஊர் என்று சங்க இலக்கியங்களிலிருந்து தெரிகிறது. அழுந்தை, அழுந்தூர் என்ற பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கிறது. முதற் கரிகால சோழன் இங்கிருந்து புறப்பட்டுப்போய் வெண்ணிப்பறந்தலை யென்ற இடத்தில் பெருஞ்சேரலாதனுடன் போரிட்டு முறியடித்தான் என்று புறநானூறு கூறுகிறது. பாண்டியன், சேரன், பதினொரு குறுநில மன்னர்களின் படைகளைக் கரிகாலன் சிதற அடித்தான் என்றும், பயந்து இவ்வூருக்குள் ஓடிய படைகளின் சத்தம் கேட்டதென்றும், "பதினொரு வேளிரொடு வேந்தர் சாய மொய் வலி அறுத்த ஞான்றைத் தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே" என்று ஒரு அகநானூற்றுப் பாடல் அறிவிக்கிறது. இன்னும், கரிகாற் சோழனின் மகன் இளஞ்சேட்சென்னி என்பவன் அழுந்தூர் வேள் மகளான அழுந்தை வேண்மாளை மணந்து கொண்டான் என்ற செய்தியும் நாம் அறிந்து கொள்ளக் கிடக்கின்றது. மற்றும், கரிகாலனின் படைத்தலைவனை திதியன் அல்லது அழுந்தூர்வேள் இவ்வூரினன் என்பதை, "கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை அன்னிமிஞிலியின் இயலும்" என்ற அகநானூற்றுப் பாடலிலிருந்து அறிகிறோம். இரும்பிடர்த் தலையார் என்ற சங்ககாலப் புலவரும் இவ்வூரைச் சார்ந்தவரென்றே தெரிகிறது. ஆதலின் திருவழுந்தூர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெருமை பெற்றிருந்த தென்பது நன்கு விளங்குகிறது.

திருச்சேறை என்னும் பதியை வணங்கி விட்டு திருமங்கைமன்னன் இந்த திவ்விய தேசத்துக்கு எழுந்தருளி இறைவன்மேல் பாசுரங்களை ஓதியருளினார். ஆழ்வார் பெரிய திருமொழியில் ஏழாம் பத்தில் நாற்பது பாசுரங்களைப் பணித்தருளியுள்ளார். ஒரு பாடலில் இறைவன் எல்லாமாய் நிறைந்து நிற்கும் தன்மையை மிக அழகாகச் சொல்கிறார். அது பின்வருவது:—

பகலுமிரவும் தானேயாய்
பாரும்விண்ணும் தானேயாய்
நிகரில்சுடரா யிருளாகி
நின்றார்நின்ற வூர்போலும்
துகிலின் கொடியும் தேர்த்துகளும்
துன்னிமாதர் கூந்தல்வாய்
அகிலின் புகையால் முகிலேய்க்கு
மணியார்வீதி யழுந்தூரே.

இன்னொரு பாசுரத்தில் எம்பெருமானைச் சேவித்துப் பெருமகிழ் வெய்திய அனுபவத்தைக் காணலாம்.

பேரானைக் குடந்தைப்
பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள்
மலர்மங்கை நாயகனை
ஆராவின் னமுதைத் தென்னழுந்
தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக்
கண்டுகொண்டு களித்தேனே.

மற்றொரு பாடலில் தாம் ஐம்புலச்சேட்டையால் அவதிப்படுவதை யொழித்து எம்பெருமான் சேவடி புகுந்ததைக் குறித்துப் பாடுகிறார். "நெடியானே" என்று தொடங்கும்அப் பாட்டைக்கட்டுரையின் தலைப்பில் காணலாம்.

திருமங்கையாழ்வார் நாற்பது பாசுரங்களைப் பாடியதோடு இன்னும் ஐந்து பாடல்களில் இப்பதி யிறைவனைப் போற்றியிருக்கிறார். பத்தாம் பத்தில் வரும் பாடலொன்று பின் வருவது:—

கூந்தலார் மகிழ் கோவலனாய் வெண்ணெய்
மாந்தழுந் தையில் கண்டு மகிழ்ந்துபோய்
பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய
வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே.

திருநெடுந்தாண்டகத்தில் ஒரு பாடலில் "அல்லியம்பூமலர்ப் பொய்கைப் பழனவேலி அணியழுந்தூர் நின்றுகந்தவம்மா னென்றும்" என்று குறிக்கிறார். மற்றொரு திருத்தாண்டகச் செய்யுள் தலைவி தலைவனுக்கு வண்டைத்தூது அனுப்புவதாக அமைந்தது. அது பின்வருவது:—

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்
பூமருவி யினிதமர்ந்து பொறியி லார்ந்த
அறுகால சிறுவண்டே தொழுதே னுன்னை
ஆமருவி நிரைமேய்த்த வமரர் கோமான்
அணிய ழுந்தூர் நின்றானுக் கின்றே சென்று
நீமருவி யஞ்சாதே நின்றோர் மாது
நின்நயந்தா ளென்றிறையே யியம்பிக் காணே.

இன்னும், சிறிய திருமடலில் "சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர்" என்றும், பெரிய திருமடலில் "அள்ளல் வாயன்னமிரை தேரழுந்தூ ரெழும்சுடரை!" என்றும் உரைத்தருளி யிருக்கின்றார்.

இராமாயணம் என்னும் தமிழ்ப்பெருங் காவியத்தைப் பாடிய கம்பர் இவ்வூரைச் சார்ந்தவராதலின் இப்பதிக்குப் பெருமை இன்னும் அதிகமாகிறது.

நாரணன்விளையாட் டெல்லாம்
நாரதமுனிவன் கூற
ஆரணக்கவிதை செய்தான்
அறிந்தவான் மீகியென்பான்
சீரணி சோழநாட்டுத்
திருவழுந்தூருள் வாழ்வோன்
காரணக் கொடையான்கம்பன்
கவியரங் கேற்றினானே

என்ற பாடல் இதைக் குறிக்கிறது. கம்பருடைய தந்தையார் ஆதித்தனார் என்ற சங்கு ஊதும் உவச்சக் குலத்தினரென்றும், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலியோர் கம்பருடன் ஒருகாலத்து வாழ்ந்தவர் என்றும், கம்பர் திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் என்றும், வான்மீகி இராமாயணத்தைக் கேட்டு நாள் ஒன்றுக்கு 700 பாடல்கள் வீதம் பாடினார் என்றும் கூறப்படுகிறது. இராமாயணத்தின் பெருமையை அறிவிக்கும் பாடல் ஒன்று பின் வருவது:—

இம்பர்நாட்டில் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர்நாட்டில் கற்பகக்கா
ஓங்குநீழல் இருந்தாலும்
செம்பொன் மேருஅனைய
புயத்திறல்சேர்.இராமன்திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்கிதயம் களியாதே.

கம்பசித்திரம், கம்பசூத்திரம் என்று வழங்கும் சொற்கள் கம்பன் இராமகாதையின் பெருமை கூற எழுந்தனவே. இவருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இராமாயணத்திலுள்ள காண்டம், படலம் முதலியவற்றைப் பின்வரும் பாடல் விளக்குகிறது:—

கரைசெறி காண்டம்ஏழு
கதைகள் ஆயிரத்தெண்ணூறு
பரவுறுசமரம் பத்துப்படல
நூற்றிருபத் தெட்டே

கம்பரும் அவர் மனைவியும்

உரைசெயும் விருத்தம்
பன்னீராயிரத் தொருபத்தாறு
வரமிகு கம்பன்சொன்ன
வண்ணமுந் தொண்ணூற்றுரே.

இராமயணத்தையன்றி கம்பர், சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதி அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கிறுர். திருவழுந்தூரில் இவர் வாழ்ந்திருந்த இடம் கம்பமேடு என்று இப்போது வழங்கி வருகிறது. அவர் நாள்தோறும் சமைத்த மண்பாண்டத்தை உடைத்தெறிந்து விடுவார் என்றும், அந்த மேட்டில் காணப்படும் ஓடுகளையெல்லாம் "அன்றடிசில் சல்லி" என்றும் கூறுகின்றனர். கம்பர் இராமாயணம் எழுதும்போது பந்தம் பிடித்ததாகச் சொல்லப்படும் காளிகோயிலும் இதன் அருகிலிருக்கிறது. இந்த இடம் இந்திய அரசாங்கத்தின் தொல்பொருள் துறையினர் பாதுகாவலில் இருந்து வருகிறது. கோயிலில் அநேகமாக எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுவதுடன், தேவஸ்தானத்தார் பங்குனி மாதத்தில் அஸ்தநட்சத்திரத்தை யொட்டி மூன்று நாட்கள் வெகு சிறப்பாகக் கம்பர் விழாவை நடத்தி வைக்கின்றனர். பல பேரறிஞர்களின் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

திருவழுந்தூரில் பள்ளி கொண்ட அரங்கநாதர் கோயில், கோவிந்தராஜப் பெருமாள் கோயில், வேதபுரீசுவரர் கோயில், காளி கோயில், தேரடிப் பிள்ளையார் என்ற ஞான சம்பந்த விநாயகர் கோயில் முதலியன இருக்கின்றன.

நெல்லில் குவளை கண்காட்ட
நீரில்குமுதம் வாய்காட்ட
அல்லிக்கமலம் முகம்காட்டும்
கழனிஅழுந்தூர் நின்றானை
வல்லிப்பொதும்பில் குயில்கூவும்
மங்கைவேந்தன் பரகாலன்
சொல்லில்பொலிந்த தமிழ்மாலை
சொல்லப் பாவம்நில்லாவே

—திருமங்கையாழ்வார்.

கற்றளிப்பிச்சன்
திருவாவடுதுறைக் கோயிலைக் கட்டிய சிற்பி.

அடியவர் திருநட்சத்திரங்கள்

சுபகிருது — ஆடி

சைவம்

11உ—மூர்த்தி நாயனர்
,, —புகழ்ச்சோழ நாயனர்
14உ—கூற்றுவ நாயனர்
22உ—பெருமிழலைக்குறும்ப நாயனர்
23உ—சுந்தரமூர்த்தி சுவாமிகள்
,, —சேரமான்பெருமாள் நாயனர்
27உ—கலிய நாயனர்
,, —கோட்புலி நாயனர்

வைணவம்

19உ—ஆண்டாள்

Vol. 4 No. 10. THIRUKOIL Reg. No. M. 7039



கோமுக்தீசுவரர் கோயில், திருவாவடுதுறை — கோயில் தோற்றம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.